# தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின் தமிழ்த்தொண்டும் மொழியியல் பங்களிப்பும்

கோ. சீனிவாசவர்மா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின் தமிழ்த்தொண்டும் மொழியியல் பங்களிப்பும்

பேராசிரியர் கோ. சீனிவாசவர்மா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,

தரமணி, சென்னை-600 113

பல்கலைச் செல்வர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்
அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர்–மது.ச. விமலானந்தம், தஞ்சாவூர்)

வரிசை எண் : 3 நாள் : 27-10-2004

---

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | te.po.mīṉāṭcicuntaraṉāriṉ<br>tamiḻttoṇṭum moḻiyiyal paṅkaḷippum |
| Author | : | Dr. G. Srinivasa Varma<br>Professor of Linguistics (Retd.) |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113.<br>Ph: 22542992 |
| General Editor | : | Dr. S. Jean Lawrence<br>Professor<br>International Institute of Tamil Studies. |
| Publication No. | : | 523 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2004 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | vi + 74 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 25/- (Rupees Twenty Five Only) |
| Printed by | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road<br>Mylapore, Madras-600 004<br>Ph. 24984693, 24661807 |
| Subject | : | Contribution of Prof. T.P.M. to Tamilology |


---

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

## அணிந்துரை

ஆசிரியர் மாணவர் உறவு என்பது மற்ற எல்லா உறவுகளை விடவும் சிறப்பு வாய்ந்தது; புனிதமானது. 20ஆம் நூற்றாண்டின் சிறந்த தமிழ் அறிஞர்களுள் குறிப்பிடத்தக்கவராக விளங்கிய பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் பெயரால் பேராசிரியர் மது.ச.விமலானந்தம் அவர்களால் இந்நிறுவனத்தில் ஓர் அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது. இவ் அறக்கட்டளையில் இதுகாறும் இரண்டு சொற்பொழிவுகள் நடைபெற்றுள்ளன. மூன்றாம் சொற்பொழிவாக இச் சொற்பொழிவு அமைகிறது.

இச்சொற்பொழிவு தெ.பொ.மீ. அவர்களின் தமிழ்த்தொண்டு பற்றியும் அவரது மொழியியல் பங்களிப்புப் பற்றியும் விரிவாக ஆராயும் நோக்கில் நடைபெறுகிறது. ஆசிரியர் மாணவர் உறவின் அடிப்படையில் இச்சொற்பொழிவை நிகழ்த்த இசைவு தெரிவித்தவர் அவருடைய மாணவராகிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மேனாள் மொழியியல் பேராசிரியர் முனைவர் கோ.சீனிவாச வர்மா ஆவார். தெ.பொ.மீ.யின் உளம் கவர்ந்த மாணவராகவும் மொழியியல் வல்லுநராகவும் திகழும் கோ. சீனிவாச வர்மா அவர்கள் மேற்சுட்டிய தலைப்பில் இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவினை நிகழ்த்த இசைவு தந்து, அவ்வறக்கட்டளைச் சொற்பொழிவுக்குரிய எழுத்துருவை உரிய காலத்தில் அளித்தார். பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் மொழி, மொழியியல் சார்ந்த சிந்தனைகளையும் அவை பற்றிய வளர்ச்சிப் போக்குகளையும் இந்நூலாசிரியர் தெளிவுற எடுத்துக்கூறியுள்ளார்.

1930ஆம் ஆண்டிலேயே தமிழ் ஆராய்ச்சி பற்றிய சிந்தனைகளை மாணவர்களுக்கு எடுத்து விளக்கிய பெருந்தகையாகிய அறிஞர் தெ.பொ.மீ. அவர்களின் சிறப்புகள் இந்நூலுள் தெளிவாக எடுத்துக்கூறப்பட்டுள்ளன. பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் பற்றி அறிய விரும்புவோர்க்கு இந்நூல் ஒரு சிறந்த கையேடாக அமையும். இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவுக்குப் பொறுப்பாளராக இருந்து இவ்வறக்கட்டளை நடைபெறவும், நூல் வெளிவருதற்குமுரிய பணிகளை மேற்கொண்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலப் பேராசிரியர் முனைவர் செ. ஜீன் லாறன்ஸ் அவர்களின் பணி சுட்டத்தக்கது.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப., அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன், இ.ஆ.ப., அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளி அச்சுக்கோப்புச் செய்த கணிப்பொறி உதவியாளர் திருமதி பி. கவுசல்யாவுக்கும், அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை　　　　　　　　　　　　　　　　　　　　**இயக்குநர்**
22-10-2004

# ஆசிரியரைப் பற்றி



**பெயர்:** கோ. சீனிவாசவர்மா.
**பிறந்த நாள்:** 15.11.1940.
**கல்வி:** இளம்கலை-வரலாறு & பொருளியல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,1960. முதுகலை-மொழியியல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,1962. பட்டயப்படிப்பு-சமஸ்கிருதம்-அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1965. முனைவர் பட்டம்-மொழியியல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1969.

**அறிந்த மொழிகள்:** தமிழ், மலையாளம், ஆங்கிலம், வாக்ரிபோலி (நரிக்குறவர் மொழி) இந்தோ-ஆரிய மொழி.

**ஆய்வுப்பணி:** 35 ஆண்டுகள். தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தோ-ஆரிய மொழிகளின் கிளைமொழிகள் ஆய்வு.

**ஆசிரியர்ப்பணி:** 30 ஆண்டுகள்- வெளிநாட்டு, உள் நாட்டு மாணவர்களுக்கு எழுத்து, பேச்சுத் தமிழ் கற்பித்தல். இங்கிலாந்தில் வடவேல்ஸ் பல்கலைக்கழகத்தில் இருமொழியம்-கற்பித்தல். வட ஆப்பிரிக்க-அல்ஜிரியா நாட்டில் உள்ள அனபா பல்கலைக்கழகத்தில் மொழியியல் மற்றும் அறிவியல் நோக்கு ஆங்கிலம் திட்டத்தில் - ஆங்கிலம் கற்பித்தல்.

**ஆசிரியர் மற்றும் நிர்வாகப் பணி:** 1. 1967 முதல் 1978 வரை-மொழியியல் விரிவுரையாளர், மொழியியல் உயர் ஆய்வு மையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம். 2. 1978 முதல் 1989 வரை-மொழியியல் இணைப் பேராசிரியர். 3. 1989 முதல் பேராசிரியர், 1992-94 இயக்குநர், மொழியியல் உயர் ஆய்வு மையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

**ஆய்வு நெறியாளர்:** முனைவர் பட்டம்-6, ஆய்வு நிறைஞர் பட்டம் - 4.

**வருகைதரு பேராசிரியர்:** 1. 1970-71 வடவேல்ஸ் பல்கலைக்கழகக் கல்லூரி, பேங்கோர், இங்கிலாந்து. 2. 1982-85 அனபா பல்கலைக்கழகம், அல்ஜீரியா, வட ஆப்பிரிக்கா. 3. 1988 கார்லேட்டன் பல்கலைக்கழகம், ஒட்டாவா, கனடா.

**வெளியீடுகள் - நூல்கள்:**

1. **கிளை மொழியியல்**, அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர், 1977. 2. **நரிக்குறவப் பழங்குடி மக்கள்**, அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர், 1978. 3. **இருமொழியம்**, அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர், 1980. 4. **கிளைமொழியியல்**, அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலைநகர், (திருந்திய பதிப்பு), 1986. 5. **Vaagriboli - An Indo-Aryan Language**, Annamalai University, Annamalai Nagar, 1970. 6. **Harijan Dialect of Tamil**, Annamalai University, Annamalai Nagar, 1976. 7. **Kurumba Kannada**, Annamalai University, Annamalai Nagar, 1978. 8. **Yerukala Dialect**, Annamalai University, Annamalai Nagar, 1978. 9. **Auxiliaries in Dravidian** (Co-Editor), Annamalai University, Annamalai Nagar, 1980.

# நன்றியுரை

பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் அவர்களின் பெயரில் அமைந்த அறக்கட்டளைச் சொற்பொழிவைச் செய்வதற்கு எனக்கு வாய்ப்பளித்த உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர், முனைவர் சா.கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் நிர்வாகத்திற்கும் மிக்க நன்றியுடையேன்.

1960ஆம் ஆண்டு பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களுடன், மொழியியல் முதுகலை மாணவன் என்ற முறையில் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. 1965-66ஆம் ஆண்டு வரையிலும், அந்த ஆசிரியர் மாணவன் உறவு தொடர்ந்தது. பேராசிரியர் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னரும் கூட, பல்வேறு அலுவல்களுக்கும் இடையில் எனது முனைவர் பட்ட ஆய்வேட்டின் முதல் படியினைத் திருத்தி வழி நடத்தினார். மொழியியலை அறிமுகம் செய்து, என் வாழ்வினை நல்திசையில் திருப்பி, வழிகாட்டிய பேராசிரியப் பெருந்தகை தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் பெயரில் அமைந்த அறக்கட்டளைச் சொற்பொழிவினை நிகழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பேராசிரியர் அவர்களைப்பற்றி எழுதும்பொழுது அவர் எழுதிய பல நூல்களையும், அவரைப்பற்றிப் பிறர் எழுதிய நூல்களையும், தம்முடைய குறிப்புகளையும் தந்து உதவிய எனது பேராசிரியர் முனைவர் செ.வை. சண்முகம் அவர்கட்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். மேலும் பல நண்பர்கள் தந்த குறிப்புகளும், நூல்களும் இதற்குப் பயன்பட்டன. அவர்கட்கும் நன்றி உரித்தாகுக. இந்த அறக்கட்டளையின் பொறுப்பாளர் நண்பர், முனைவர் செ.ஜீன் லாறன்ஸ் பலவகையில், காலம் கருதாது உதவினார். அவருக்கு என் உளமார்ந்த நன்றி.

என் கையெழுத்தினை நூல்வடிவாக அச்சு செய்து, பிழைகளை நீக்கி, வடிவமைத்த அனைவருக்கும் நன்றி கூற விழைகிறேன்.

**கோ. சீனிவாசவர்மா**

*07-10-2004*
*14, மாரியப்பா நகர்*
*அண்ணாமலை நகர்-608 002*

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முன்னுரை | .... | 1 |
| தமிழ்த் தொண்டு | .... | 7 |
| மொழியியல் பங்களிப்பு | .... | 46 |

# முன்னுரை

தமிழகம் பெற்றெடுத்த பேரறிஞர்களில் பன்மொழிப்புலவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழறிஞர், நாட்டுப்பற்றுடைய தேசியவாதி, புதியனவற்றையும் சீர்தூக்கி நல்லவற்றை ஏற்றுக்கொள்ளும் மனிதாபிமானி.

முனைவர் இர. குழந்தைவேலு அவர்கள் 'பேராசிரியர் தெ.பொ.மீ. இருபதாம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர்' என்ற நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்.[1] "தமிழ்மரபறிந்த குடிமரபில் வந்தவர், தமிழ்வரம்பறிந்து கற்றவர், தமிழ் முழுதறிந்தவர். அவர்தம் வாழ்வின் வெளிப்பாடே அவருக்குத் தாய்மொழி ஆகிறது."

தெ.பொ.மீ. அவர்களே தமக்குக் கிடைத்த சூழல் பற்றி, "குறைந்தது மூன்று தலைமுறையாகவேனும் தமிழ்க் கற்றுத்திளைத்த குடியில் பிறந்ததன் பயனாகத் தமிழ் நூல்களின் சூழலிலேயே பிறந்தது முதல் வாழ்ந்து வந்துள்ளேன்" என்று தம் வாழ்க்கைக் குறிப்பில் தெரிவித்துள்ளார். திரு. பி.இ. மோகன் அவர்களும் தமது ஆங்கிலக் கட்டுரை ஒன்றில் பேராசிரியர் தெ.பொ.மீ. இருபதாம் நூற்றாண்டினர் என்பதை வலியுறுத்தியுள்ளார்.[2]

### தென்பட்டினம்

தொண்டை நாட்டில், பாலாற்றுப் பள்ளத்தாக்கில் மதுராந்தகம் வட்டத்தில், கடற்கரையோரம் அமைந்த குடபட்டினம், வடபட்டினம், தென்பட்டினம் என்னும் மூன்று பட்டினங்களில் ஒன்று தென்பட்டினம் என்ற சிற்றூர். இப்பழம்பட்டினம் பதினெட்டாம் நூற்றாண்டில் டச்சுக்காரர்களின் வணிகவளாகமாக விளங்கிய ஊர். டச்சு மொழியில் 'தெனாச் பட்டாம்' என்று குறிப்பிட்டுள்ளனர். அந்நாளில் ஒரு குறுநிலமன்னர் குடும்பம்

---

1. பேராசிரியர் தெ.பொ.மீ. இருபதாம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர், ப.2, இரா.குழந்தைவேலு, 2001.
2. Journal of Tamil Studies, June 2003, p.53, "Historical Lessons from the Man of Twentieth Century, The Linguist - Professor T.P. Meenakshisundaran".

போன்று வாழ்ந்த பெருஞ்செல்வக் குடும்பத்தில் திரு. பொன்னுசாமி கிராமணியாருக்கும் திருமதி ருக்குமணி அம்மையாருக்கும் 8-1-1901 அன்று பிறந்தவரே பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார். தெ.பொ.மீ. அவர்களால் தென்பட்டினம் எல்லோரும் அறிந்த ஊரானது.

**கல்வி**

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் அவர் கல்வி தொடங்கிற்று. அவர்தம் பாட்டனாரும் தந்தையாரும் தமிழ்க்கல்வி பெற்ற அறிஞர்கள். அது போன்றே அவருடைய தமையனார் சதாவதானம் தெ.பொ.கிருஷ்ணசாமிப்பாவலரும் ஆவார். அவர் நாடகத்துறையிலும் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். 1930ஆம் ஆண்டிற்கு முன்னரே அவர் இருந்த வீட்டிற்குத் 'தமிழகம்' என்ற பெயர் வழங்கியது. திரு. கிருஷ்ணசாமிப்பாவலர் சிந்தாதிரிப்பேட்டையில் ஓர் ஆரம்பப்பள்ளி நடத்தி வந்தார். அப்பள்ளியில்தான் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புவரை கல்விபயின்றார். பிறகு சென்னைப் பச்சையப்பன் பள்ளியில் படிப்பைத் தொடர்ந்தார். பச்சையப்பன் கல்லூரியிலேயே 1920ஆம் ஆண்டு மெய்ப்பொருளியல் இளங்கலை பயின்றார். அதன்பின் 1922ஆம் ஆண்டு சட்டம் பயின்றார். 1923ஆம் ஆண்டு வரலாறு, பொருளாதாரப்பாடங்களை எம்.ஏ. பட்டத்திற்காகப் பயின்றார்.

குடும்பச் சூழல்தான் தமிழ்ப்புலமை பெற இவருக்கு வாய்ப்பு அளித்தது என்று கூறலாம். பல்வேறு இலக்கியம், இலக்கணம் ஆகியவை பற்றி, அவற்றில் திறமையுள்ள ஆசிரியர்களை நாடிப் பாடம்கேட்டுத் தம் அறிவை வளர்த்துக்கொண்டார். திரு.கோ.வடிவேல் செட்டியார், திரு. சுப்பையா சுவாமிகள் ஆகியோரிடம் அத்துவைதம் கற்றார். பின்னர் வைணவம் பற்றி திரு. இராமாநுச நாயுடு, பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார், அகோபில மடம் ஜீயர் ஆகியோரிடமும் பாடம்கேட்டுச் சைவ வைணவத் தத்துவங்களை அறிந்துகொண்டார். பூவை கலியாண சுந்தரனாரிடமும் தம் தந்தையிடமும் சைவத்தைப் பற்றியும் ஐயம் நீங்கக் கற்றார். இளமையில் அவர் வளர்ந்த சூழலில் நாட்டுப்பற்று, விடுதலைவேட்கையுள்ள பலருடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அவற்றினால் அவர் தாமும் உயர்ந்து தம்மைச் சார்ந்த மாணவர்களையும் உயரச் செய்த இருபதாம் நூற்றாண்டு கல்வியாளராவார். தாம் வாழ்ந்த காலத்தைப்பற்றி அவர் எழுதியுள்ளதாவது: "(நான்) முழுக்க முழுக்க இருபதாம்

நூற்றாண்டினைச் சேர்ந்தவன், இதில் எனக்கு ஒரு இறுமாப்பு. இந்த நூற்றாண்டு முழுவதும் குளிர்போரிலோ சுடுபோரிலோ போராடி வருகிறது என்பது உண்மை. இன்னும் பலப்பல குறைகள் இதுபற்றிக் கூறலாம். இந்த இருள் எல்லாம் ஏன்? ஒரு நாள் விடியப் போகிறது என்பதையே இந்த இருள்காட்டுகிறது". ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் பெற்ற பயிற்சியுடன், .தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் கற்றார்.

1937ஆம் ஆண்டு பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளில் உயர் சான்றிதழ் பெற்றார். 1937இல் ஜுல்ஸ் பிளாக் (Jules Block) என்ற பிரெஞ்சு பேராசிரியருடன் ஏற்பட்ட தொடர்பு இதற்கும் உதவியாக அமைந்தது. 1939-40ஆம் ஆண்டில் தமிழ் வித்துவான் இளநிலை, நிறைநிலைத் தேர்வுகளை எழுதி முதல் மதிப்பெண்பெற்று வெற்றி பெற்றார். 1938ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வின் மூலம் எம்.ஓ.எல். பட்டம் பெற்றார். அவருடைய ஆய்வேடு ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். பின்னர் இந்த ஆய்வின் கருத்துக்களைத் தமிழில் கலைக்களஞ்சியம் என்ற இதழில் பல கட்டுரைகளாக எழுதினார். அக்கட்டுரைகள் அனைத்தையும் டாக்டர் இராமசுந்தரம் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார்.[3]

1930ஆம் ஆண்டிலேயே தமிழ் ஆராய்ச்சி உண்மைநாடும் வேட்கையும் கருத்துச் செறிவும் தெளிவும் உடையதாக அமைய வேண்டும் என்று நெறிமுறைகளை வகுத்து மாணவர்களை ஊக்குவித்தார். தாய்மொழிப்பற்றும், நாட்டுப் பற்றும், தேசிய உணர்வும், விடுதலை வேட்கையும் கொண்டிருந்த நிலையில் தமிழ் இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றைக் கற்க முனைந்தார்.

முனைவர் க.த.திருநாவுக்கரசு தெ.பொ.மீ. அவர்களைப் பற்றி, "தம் வாழ்நாளின் நிறைவுப் பகுதியில் பெரியார் ஈ.வெ.ரா.வையும் பெர்ட்ரண்ட் ரசலையும் ஒப்பிட்டு ஆய்வுச் சொற்பொழிவுகள் செய்த காலத்தில் அவர் சமவுடைமை, மெய்ம்மை நெறியாளராகத் தோன்றினார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் இளமையில் வரலாற்று மாணவராகவும், மெய்ப்பொருளியல் மாணவராகவும் இருந்துள்ளார். பின்னர் மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய

---

3. 3 தமிழ்க் களஞ்சியம் (கலைக்களஞ்சியக் கட்டுரைத் தொகுப்பு), ப.3, (முன்னுரை), தெ.பொ.மீனாட்சி சுந்தரன், 2000.

இந்தியமொழிகள் பலவும் கற்றார். எல்லாவற்றிற்கும் மேலாகச் சாந்துணையும் பல நூல்களை வாசித்துத் தாமாகவே பல புதிய துறை அறிவைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சென்னைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவி அதன் மூலம் தொல்காப்பியம், பத்துப்பாட்டு மாநாடுகளை நடத்தினார். தமிழ் முதுகலை மாணவர்கட்கு வகுப்புகள் நடத்தினார். பல நூல்களை வெளியிடும் பணிகளில் ஈடுபட்டார். இந்நிலையில் அவருடைய தமிழ்ப் புலமையையும் பலதுறை அறிவையும் கண்ட ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைப்பேராசிரியராகவும், தலைவராகவும் நியமித்தார். அந்தப்பதவியை 1944-46, இரண்டாண்டு காலம் வகித்தார். 1945இல் நடைபெற்ற அனைத்திந்திய வரலாற்று மாநாடு புதிதாகத் திராவிடப் பிரிவை ஏற்படுத்திஅவரைத் தலைவராக நியமித்தது. ஒரு தமிழரின் புலமை இந்திய அளவில் அங்கீகரிக்கப்பட்டது என்பது மகிழ்ச்சிக் குரியதாகும். மற்றொன்று, கல்லூரியில் துறைத்தலைவராக இருப்பதற்கு அந்தத்துறையில் முதுகலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்ற அரசாங்க விதிக்கு விலக்கு அளித்து, அவரைச் சென்னை மாநிலக் கல்லூரியில், முதன்மைத் தமிழ்ப் பேராசிரியராக நியமித்தது. அங்கும் மிகச் சிறப்பாக நான்கு ஆண்டுகள் (1954-58) பணிபுரிந்தார். அந்நான்கு ஆண்டுகளில் பலரும் பாராட்டும்படி அங்கு ஓர் ஆய்வுத்துறையை ஏற்படுத்தினார்; முதுகலை படித்த மாணவர்கள் ஆய்வாளர்களாகச் சேரும் வாய்ப்பை உருவாக்கினார். ஒப்பிலக்கியம் ஒரு பாடமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தமிழ் வரலாறு முழுமையாக அறியப்பெற அறிவியல் பூர்வமாக விளக்கம் பெறக் கல்வெட்டு மொழி ஆய்வையும் துவக்கினார். மீண்டும் 1958ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத்தலைவராக நியமிக்கப்பட்டார்.

பி.இ. மோகன் தெ.பொ.மீ. அவர்களைப் பற்றித் தன்னுடைய கட்டுரையில் கூறும் பொழுது, "தமிழ் இலக்கணம் மாணவர்களை, சூத்திரங்களை மனப்பாடம் செய்து எழுதும்படியான சூழலை உருவாக்கி வெறுப்படையச் செய்தது; அதனைப் பேராசிரியர் மாற்றி மாணவர்கள் விரும்பும்படியாகப் பாடம் கற்பித்தார்; நிகழ்காலத்தை முதலிலும், இறந்தகாலத்தை அடுத்தும், பின்னர் வருங்காலத்தையும், கவிதை போல, புதினம் போலக்கற்பித்தார்" என்று கூறுகிறார். மேலை நாட்டு ஆராய்ச்சி அணுகுமுறைகளைத் தமிழுக்கும், தமிழ்க் கிளைமொழிகளுக்கும் பயன்படுத்தினார். ஆய்வாளர்களையும் அவ்வாறு பின்பற்றிப் பயனடையும்படி

வழிப்படுத்தினார். மாணவர்கள் கேள்விகேட்பதன் மூலம் தனக்கு ஆசிரியர்களாக உள்ளார்கள்; சிந்தித்துச் செயல்பட முடிகிறது என்றும் வியந்தார். பேராசிரியர் அவர்கள் பழங்காலத்தவர் அல்லர்; இருபதாம் நூற்றாண்டு அறிஞர் என்று நிலை நாட்டியுள்ளார்.

திரு.வி. கலியாண சுந்தரனார் தெ.பொ.மீ. அவர்களைப் பற்றித் தமிழில்

அவனே புலவன்
அவனே அறிஞன்
அவனே தமிழை
முழுது உணர்ந்தோன்

என்று வியந்து பாராட்டியுள்ளார். 'பன்மொழிப்புலவர்' என்ற பட்டத்தை டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் 1939இல் சென்னைத் தமிழ்ச்சங்கத்தின் ஆண்டுவிழாவில் அளித்துப் பாராட்டினார். பேராசிரியருடைய கல்வியைப்பற்றி டாக்டர் செ.வை. சண்முகம் அவர்கள்[4] தனது சொற்பொழிவில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "1920இல் இளங்கலை (B.A.) பட்டம்; சட்டத்தில் 1922இல் இளங்கலைப்பட்டம் (B.A.); வரலாற்றில் 1923இல் முதுகலைப்பட்டம்; தமிழில் வித்துவான் படிப்பு; தமிழ் ஒலிகள் என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஆய்வேடு அளித்து 1937இல் முது கீழ்த்திசைமொழிப் பட்டம் (M.O.L.)." திரு.வி.க. தமது வாழ்க்கை வரலாற்றில் தம்மினும் வயதில் இளையோரான தெ.பொ.மீ.யைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதாவது, "தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரைச் சிலர் பல்கலைக்கழகம் என்று கூறுப. எனக்கு அவர் அவ்வாறு தோன்றுகிறாரில்லை. அவர் பல்கலைக் கழகத்தையும் கடந்த ஒருவர் என்பது என் உட்கிடக்கை. மீனாட்சிசுந்தரனாரின் காட்சி எனக்குக் குறிஞ்சியும், முல்லையும், மருதமும், நெய்தலும் சேர்ந்த ஒரு கழகமாகத் தோன்றுகிறது." 1955ஆம் ஆண்டு தருமையாதீனம் 'பல்கலைச் செல்வர்' எனும் பட்டத்தைப் பேராசிரியர்க்குச் சூட்டி மகிழ்ந்தது. 1968இல் மதுரைப் பல்கலைக்கழகம் மதிப்புறு முதுநிலை டாக்டர் பட்டம் வழங்கியது. 1975ஆம் ஆண்டு ஜூலை 5ஆம் தேதி சாகித்திய அக்காடமி, தெ.பொ.மீ. அவர்களுக்கு 'சிறப்புறு அறிஞர்' என்னும் பட்டம் வழங்கிப் பெருமை தேடிக்கொண்டது. 1976ஆம் ஆண்டு நடுவண் அரசு, 'பத்மபூஷன்' எனும் பட்டம் வழங்கிப் பாராட்டியது. 1977ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் இயல் இசை நாடகமன்றம் 'கலைமாமணி' பட்டம் அளித்துச் சிறப்பித்தது.

---

4. தெ.பொ.மீ. ஒரு பன்முகப் பார்வை, ப.5, செ.வை. சண்முகம், 2000.

பல பட்டங்களையும் பெற்று, சிறந்து விளங்கிய பேராசிரியப் பெருமகனார், 'நிறைகுடம் தளும்பாது' என்பது போல் அகங்காரம் ஏதுமின்றித் தன்னடக்கமாகத் தம்மைப்பற்றித் தெரிவித்துள்ள கருத்தினைக் காண்போம்.

"மொழியியல் தமிழிற்கு ஒருவகையில் புதிதுதான். ஆனால், அதன் அடிப்படையில் சில, பழைய இலக்கிய அறிஞர்கள் கண்டவையே. ஒரு சிலர் மட்டும் அறிந்து, மூலை முடுக்குகளில் முடங்கிக் கிடந்தவற்றை, எல்லோரும் அறிய வருவதும் இந்நாளையப் போக்கின் சிறப்பாகும். இந்தப் புதிய வகையிலே மொழியியல், இக்காலத்தில் மேற்கேதான் வளரத் தொடங்கியது. உலகம் முழுவதும் ஒன்றாகி வருகின்ற இந்த நூற்றாண்டில், மேற்கில் எழுந்தாலும் கிழக்கில் எழுந்தாலும், விரைவில், அது உலகப் பொதுப்பொருளாகிவிடுகிறது. அந்த நிலையை மொழியியல் அடைந்து வருவதைக் காணலாம். ஆனால் மொழியியல் வளர்ச்சி நாளுக்குநாள் மாறி, முன்னேறிக்கொண்டு வருகிறது. மொழியியலை மேனாட்டில் வளர்த்து வருவாரும் இந்த முன்னேற்ற ஓட்டத்திற்கு ஈடுகொடுக்க இயலாமல் திகைக்கின்றார்கள். இந்த நிலையில், இக்காலத் தமிழ் இலக்கணப் புலவர்கள், மொழியியலின் போக்கை அறுதியிட்டு உணர முடியாமையால், ஒன்று அதைக்கண்டு எள்ளி நகையாடுகிறார்கள் அல்லது தவறாகப் புரிந்து கொண்டு குட்டையைக் குழப்புகிறார்கள். இந்த அவலநிலை நீங்க வேண்டும் எனும் எண்ணத்தாலே, நான் ஏதேதோ எழுதி வருகிறேன். நான் ஒரு கற்றுக்குட்டி. நான் பேராசிரியனாக இருந்த எந்தத் துறையிலும் பட்டம் பெற்றவனல்ல. எனவே, பேருக்குத்தான் நான் ஆசிரியன். உலகம் எப்படியோ என்னைத் தூக்கிவிட்டுக் கொண்டு வருகிறது. இருந்தாலும் அந்தந்தத் துறைகளிலே கூட, எல்லாவற்றையும் நான் அறிந்தேன் என்று நான் நினைத்தது இல்லை. இன்றும் மாணவன் என்ற நிலையில், அறிந்து கொண்டு வருவனவற்றை என்னுடைய தமிழன்பர்களோடு பகிர்ந்து, விருந்துண்ணவே விரும்புகிறேன்" என்று கூறியுள்ளார்.[5]

---

5. தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல், ப.150, க.த. திருநாவுக்கரசு, 2001.

# தமிழ்த்தொண்டு

தெ.பொ.மீ. அறிவுக்களஞ்சியம். அவர் கலைக்களஞ்சியத்தில் 88 கட்டுரைகள் எழுதியுள்ளார். தமிழ் எழுத்தியல், மொழியியல், இலக்கியம், தத்துவம் ஆகிய துறைகளில் எழுதியுள்ள கட்டுரைகள், அவருடைய ஆழ்ந்தகன்ற புலமைக்குச் சான்றாக உள்ளன. முனைவர் இராம.சுந்தரம் அவர்கள் அளித்துள்ள 'தமிழ்க்களஞ்சியம்' என்ற நூலின் முன்னுரையில் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களைப்பற்றி கூறியுள்ள கருத்து இதனைத் தெளிவாகக் காட்டும்படி அமைந்துள்ளது. "40 ஆண்டுகளுக்கு முன் நிலவிய தமிழியல்-திராவிட இயல் ஆய்வுப் பின்புலத்தில், பேராசிரியர் (தெ.பொ.மீ.) அன்று தமக்குக் கிடைத்த தரவுகளின் அடிப்படையில், தமது பன்முகப்பார்வையால் மிகச் சிறப்பானதொரு தமிழ்த்தொண்டு ஆற்றியுள்ளார் என்றால், அதுமிகையாகாது". பேராசிரியர் ஆங்கிலத்திலும் தமிழிலுமாக ஏறத்தாழ 265 கட்டுரைகளும் 56 நூல்களும் எழுதியுள்ளார். இவை அனைத்துமே அவருடைய தொண்டாகவும், பங்களிப்பாகவும் நம்மிடையே உள்ளன. இவை இளந்தலைமுறையினருக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் எழுத்தியலில் பேராசிரியர் அவர்கள் அகரம் முதல் னகரம் ஈறாக ஒவ்வொரு எழுத்தின் வரிவடிவம், அவை உச்சரிக்கப்படும் முறை, கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து இன்று பெற்றுள்ள வடிவம்வரை, வட்டெழுத்து, கோலெழுத்து, கிரந்த எழுத்து, குகை எழுத்து என பலபட்ட வடிவங்களையும் தக்க சான்றுகளுடன் விளக்கியுள்ளார்.[6]

பிரான்சுநாட்டு மொழியியல் அறிஞர் புதுச்சேரியில் பணியாற்றிய காலகட்டம். அப்பொழுது பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் ஜுல்ஸ் பிளாக்குடன் தொடர்புகொண்டு அவருடைய மேற்பார்வையில் 1937ஆம் ஆண்டு முதல் 1940ஆம் ஆண்டுவரை

---

6. தமிழ்க் களஞ்சியம் (கலைக்களஞ்சிய கட்டுரைத் தொகுப்பு) ப.1, தெ.பொ.மீனாட்சி சுந்தரன் (தொகுப்பாசிரியர் இராம. சுந்தரம்) 2000.

எம்.ஓ.எல். பட்டத்திற்காகத் தமிழ் ஒலிகள் பற்றி ஆராய்ச்சி செய்தார். 1942ஆம் ஆண்டு நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு சிறைசென்றார். சிறையிலிருந்து 1943ஆம் ஆண்டு இந்த ஆராய்ச்சிக்கட்டுரைக்காக எம்.ஓ.எல். பட்டத்தைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பெற்றார். இக்கால மொழியியலின்படி ஒலியியல் பகுதியான Phonology என்ற பிரிவின் கீழ் அமைந்த ஆராய்ச்சி இதுவாகும். தமிழ் மொழியில் வழங்கும் முப்பது முதல் எழுத்துகளையும், சார்பெழுத்துகளையும் எடுத்துக்கொண்டு, பாரம்பரிய இலக்கண ஆசிரியர்களின் கருத்துகளை உள்வாங்கிக்கொண்டு, தற்கால மொழியியல் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு ஏற்பத் தெள்ளிதின் ஆராய்ந்து ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையாகும். பின்னர் இதன் அடிப்படையில் கலைக்களஞ்சிய இதழில் தமிழில் கட்டுரைகளாக எழுதி, எழுத்துகளின் வரிவடிவங்களைப்பற்றிய எடுத்துக்காட்டுகளுடன் வெளியிட்டார். இவை தமிழுக்கும் மொழியியலுக்கும் அவருடைய மிகச்சிறந்த பங்களிப்பாகும்.

தமிழ் மொழி எழுத்துகள், அறிவியல் வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில், மாற்றியும் திருத்தியும், குறைத்தும் அமைத்துக்கொள்ளப்படவேண்டும் எனும் கருத்துடையவராகப் பேராசிரியர் விளங்கினார். தட்டச்சு மற்றும் எழுதவும், தமிழைக் கற்பிக்கவும் எளிதாக அமையும்படி ஐந்து உயிர் எழுத்துகளும், பதினைந்து மெய் எழுத்துகளும் இருந்தால் போதும் என்று விளக்கியுள்ளார். இந்த நூற்றாண்டில் வளர்ந்து வந்துள்ள மொழியியலின் பல்வேறு பகுதிகளைத் தமிழ் மொழிக்குப் பொருத்திக்காட்டியும், அம்முறைகளில் வளர்த்தும் வந்தார். எதிர்காலத்தில் செய்யவேண்டிய ஆராய்ச்சிகளைப் பற்றியும் ஆங்காங்கே எடுத்துரைத்துள்ளார்.

## தமிழ்மொழியின் எழுத்துகளும் ஒலிப்பு முறையும்

### உயிர்எழுத்துகள்

அகரம்பற்றிய கட்டுரையில் பேராசிரியர் வரலாற்று அடிப்படையிலும், பேச்சுமொழியின் அடிப்படையிலும் 'அ' எவ்வாறு ஒலி எழுத்தாக வழங்கியது என்பது பற்றி மொழியியல் அடிப்படையில் மிகச்சிறப்பாகப் புது விளக்கம் அளித்துள்ளார். அவர் கூற்றிலேயே மிகமிகச் சுருக்கமாக அதுபற்றிக்காண்போம்.

"இந்நாளைய பேச்சுவழக்கில் அவன், அவள் முதலிய சொற்களில் ஈற்றுமெய் ஒலிக்கப் பெறுவதில்லை. னகரத்தின்

சார்பால் அகரம் மூக்கொலியாக மாறுகிறது. அவ் -ஆண்பால்; அவ-பெண்பால். பிரெஞ்சுமொழியில் வழங்கும் மூக்கொலி உயிர், தமிழிலும் இவ்வாறு வ்ழங்கக் காண்கிறோம்" என ஒப்பிட்டு மொழியியல் காரணம் கொடுத்துள்ளார்.

குசுகுசு எனப்பேசும்போது அகரம் ஒலி எழுத்தாக (Voiced Letter) அல்லாமல் உயிர்ப்பெழுத்தாக (Breathed Letter) மாறக்காண்கிறோம். தாய்த்திராவிட மொழியில் æ என்ற ஒலியுள்ள எழுத்து இருந்தது என்றும் அதற்கென வடிவெழுத்து ஒன்றினை அமைக்காமையால், அஃது அ என்றும் எ என்றும் யா என்றும் எழுதப் பெற்றதென்றும் ஆனை, யானை, ஏனுக (தெலுங்கு) என்பவையும்; 'யான்' (தன்மை ஒருமைச்சொல்), 'ஏம்', 'ஓம்' (தன்மை பன்மை விகுதி) என்பவையும் இன்றும் æ ஒலி band முதலான சொற்களில் வருவதனைத் தமிழர் 'ப்யாண்டு' முதலாக எழுதுவதும், ஒலிப்பதும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு என்றும் மொழிநூல் வரலாறு கூறும். 'அன்' என்ற தன்மை ஒருமை விகுதியில் உள்ள அகரம் æ என்பதன் மரூஉவே ஆகும் என்பர்." அகரம் எதிர்மறைச் சுட்டாகவும் (வாரான்); ரகரத்தில் தொடங்கும் பிறமொழிச் சொற்கள் தமிழில் வழங்குவதற்காக அகரம் தமிழோசை நயம்பிறப்பிக்க வரும் (Prothesis-அரங்கம், அரங்கன்). அ சேய்மைச் சுட்டாகவும் (அவன், அவள்), புறச்சுட்டாகவும் (அக்கொற்றன், அச்சாத்தன்), உலகறிச் சுட்டாகவும் (அக்கடவுள், அத்தம்பெருமாள்) குறிப்பிடுவர்.

அ என்பது எட்டு என்ற எண்ணின் அடையாளமாகவும் வருகிறது. அ என்பதற்குக் கடவுள் என்பதே பொருள் என்பர். அது திருமாலையும் சிவனையும் குறிக்கும்.

ஆ நெடில். அகரம் போல அங்காத்தலால் பிறப்பது. ஐ என்பது விளிப்பெயரில் ஆய் என்றாகிய (தந்தை-தந்தாய்) ஆ என்ற ஒலி பெறும். சேய்மை விளியில் ஈற்றுமுன் அகரம் ஆ என நிற்கும் (முருகன், முருகா). ஆ எழுத்தின் வடிவம் அகரத்தின் பின் நடுவே குறுக்காக எழுந்து படுக்கை நேர்க்கோடு சிலபோது கீழாக வளைந்து, பின்அடியில் கீழ் விலங்காக அமைந்தது. ஆ என்பது .பழைய தமிழிசை மரபில் ச என்ற சுரத்தின் அறிகுறியாகவும் இன்றைய வழக்கில் ஆகமொத்தம் என்பதன் அறிகுறியாகவும் வழங்குகிறது.

இ மூன்றாம் உயிர் எழுத்து. இது செறிவுடை, இதழ் குவியா முன்வாய் நெகிழ் குறில் உயிராகும். தமிழில் மொழி முதலாக வராத ய,ர,ல என்பவற்றில் ஒன்றில் தொடங்கும் பிறமொழிச்சொற்களில் இது இன்னிசை முந்து நிலை எழுத்தாகவரும் (இராமன், இயக்கம்,

இலக்கம்). பிறமொழிக் கூட்டெழுத்துகளைப் பிரிக்கவும் இ பயன்படுகிறது. ரத்னம், இரத்தினம். இழிவழக்கில், முதலில் வரும் எழுத்துடன் சேர்ந்து இது அதனை மாற்றுவதும் உண்டு-இரட்டி> ரெட்டி, இரண்டு>ரெண்டு. இகரத்தின் பொருளை விளக்கமாகத் தம் கட்டுரையில் பேராசிரியர் தொகுத்துள்ளார்.

ஈ காரம் தமிழில் நான்காம் உயிர்; இகரத்தின் நெடிலாம். இது செறிவுடை இதழ் குவியா முன்வாய் இறுகு உயிர். ஓரெழுத்து ஒருமொழி, விளி, அளபெடை பெற்ற இடம் முதலியவற்றிலின்றி ஈ, ஈற்றில் நெகிழ்ந்து போவதால் வருவது அருமையாயிற்று. செய்வி என்பதன் ஈற்றில் உள்ள இ இவ்வாறு குறுகிய ஈ யே என்பர். ஈ என்பது இழிந்தோன் இரப்பின் சைகையாகிக் குறிப்போசையாகி இரப்புரையாகியது என்பர். சைகை ஒலி மொழியாக வளர்ந்தது; குறிப்போசை மொழியாக வளர்ந்தது என்ற கொள்கைக்கு இது எடுத்துக்காட்டாம். கொடு என்ற பொருளில் வழங்கியது. ஈ, தேனீ, வண்டு என்ற அறுகாலிகளையும், இறகு என்பதையும் குறித்தது. பகிர்தல், கணக்கில் வகுத்தல், ஆசிரியன் கற்பித்தல், படைத்தல், ஈனுதல், நேர்தல், அழிவு என்ற பொருட்களிலும் வரும். வினைப்பகுதியாகவும், அதிசயக் குறிப்பாகியும் வரும். விரீஇ முதலிய இடங்களில் இகரம் நீண்டு, அளபெடுத்து, இறந்தகாலப் பிற வினைவிகுதியாகவும் வரும்.

உ. உகரம் தமிழில் ஐந்தாவது உயிர் எழுத்தாகும். உகரம், பின் அண்ணத்திற்கும் நாவிற்கும் இடையே இடைவெளி குறைந்து வர, நா நெகிழ்ந்து நிற்க, இதழ்குவிதலால் எழும் உயிராகும். குவி, நெகிழ், அண்மு, பின்னுயிர் எழுத்தாகும். இரண்டு என்ற எண்ணினைக் குறிக்கும் குறிப்பாகவும் உகரம் வழங்குகிறது. இரண்டு கோடுகள் மொகஞ்சதாரோ எழுத்துகளில் இரண்டினைக் குறிக்க வருகின்றன என்று எண்ண இடம் உண்டு. அ,இ,உ என்பன அடிப்படை உயிர்களாகும். இவற்றின் கலப்பால் பிற உயிர்கள் தோன்றும் என்பர். 'பாரும் உகரம் பரந்திட்ட நாயகி' (திருமந்திரம் 1751) என்ற இடத்தில் உகரம் அருட் சக்தியைக் குறிக்கிறது.

**ஊ.** இது நெடுங்கணக்கில் ஆறாம் எழுத்து. உகரத்தின் நெடில், குவி, செறி, அண்மு, பின்உயிர். ஊ என்பது கைக்கிளை என்ற இசைச்சுரத்தின் எழுத்தாகும். ஊ என்பது இறைச்சி என்ற பொருள்தரும்.

எ. இது தமிழ் நெடுங்கணக்கில் ஏழாம் எழுத்து. குறில் எழுத்து. தமிழில் அகர இகரக் கலவையே ஆயினும் இயற்கையான

ஓரொலி உயிராகவே ஒலிக்கும். இரண்டு > ரெண்டு என ரகரத்தின் அ கரத்தோடு, முன்னின்ற இகரம் மருவி ரெ என வரும்போது எகரம் தோன்றக்காண்கிறோம். எகரம் வினா எழுத்து, எவன் என அகவினாவாகவும் எக் கொற்றன் எனப் புறவினாவாகவும் வரும். எ என்பது ஏ என்ற நெடில் ஒலியாகவும், இதன் மேல் புள்ளி வைத்தெழுதினால் எ என்ற குறில் ஒலியாகவும் தொல்காப்பியர் காலத்தும் நன்னூலார் காலத்தும் ஒலித்து வந்ததாம். வீரமா முனிவர் நெடிலைக் கீழ்க்கோடிழுத்து ஏ என எழுதத் தொடங்கினார். அதனால் எகாரத்தின் மேல் புள்ளியிட்டெழுதும் வழக்கம் வழக்கொழிந்தது என்பர்.

ஏ. இது தமிழ் நெடுங்கணக்கில் எட்டாம் எழுத்து, நெடில். எகரம் போலப் பாதிச் செறிவுடைய இதழ்குவியா முன்னுயிர்.

ஐ. தமிழ். நெடுங்கணக்கில் இது ஒன்பதாம் உயிர் எழுத்து. அகரம் முன்னும் இகரம் பின்னும் ஒற்றித்து ஒலிக்கின்ற ஈருயிர், வீழிசைக் கூட்டொலியாகும். நடை > நடெய் > நடெ என ஒலிக்கப் பெறுதலின் தமிழில் வரும் ஐ என்பது எகரமும் இகரமும் போல் ஒலிக்கும் யகரமும் இயைந்த ஈருயிர் ஓரொலி என்பர் கால்டுவெல். 'கை' என்ற தமிழ்ச் சொல், தெலுங்கில் 'செய்' எனவரும். செய் என்ற வினைப்பகுதி இங்கு விளங்கித்தோன்றலின் செய்வதற்கு உதவும் உறுப்பு கையெனப்பெயர் பெற்றது. கன்னட மொழியில் 'கெய்'.

ஐ. ஒலிக்குறிப்பு பலபொருளில் வழங்கியுள்ளது. அவை வியப்பு, அழகு, மென்மை, உண்மை, கோழை, கபநோய், தலைவன், கணவன், அரசன், ஆசிரியன், தந்தை, அண்ணன், சவ்வீரபாஷணம் என்பனவாம். தலைமகன் என்ற சிறப்புப் பொருளைக் குறிக்கும் ஐகாரமே உயர்திணையில் வந்தது. ஐ என்பது ஹத்திகும்பா கல்வெட்டில் காணும் முக்கோணவடிவமான எ என்பதன் மேல் உயிர்மெய் எழுத்தில் ஏகாரத்தைக் குறிக்கும் படுக்கைக்கோடு அதன் தலையில் இடப்புறத்தில் இருக்கக்காணலாம்.

ஒ. பத்தாம் உயிர் எழுத்து; குறில். இது பாதி அண்முகுவியாப்பின் உயிர்; நெகிழ் குறிலுயிர் என்பர். அகரம் ஒகரமாதலும் உகரம் ஒகரமாதலும் உண்டு. தமிழில் ஒகரத்தில் உகரக்கூறு இருப்பதனை அறிந்தே ஒகரத்தின் இனவெழுத்தாக உகரத்தைக் கொண்டாலும், ஓர் ஒலி எழுத்தாக ஒலிக்கின்றதே அன்றிக் கூட்டெழுத்தாக ஒலிக்கக் காணோம். கீழே சுழிபெற்று ஒ என்பது நெட்டெழுத்து ஓ ஆயிற்று. ஒ விளரி என்ற சுரத்தின் குறியீடாம்.

**ஔ.** இது தமிழ் நெடுங் கணக்கில் பன்னிரண்டாம் எழுத்து. தனித்தமிழ்ச்சொற்களில் மொழிக்கு முதலில் மட்டுமே வரும். நெட்டெழுத்தென்று கருதப்பட்டாலும் 'அவ்' எனக் குற்றெழுத்தைப்போல் ஒலித்து, ஔகாரக் குறுக்கம் எனப்பெயர்பெறும். இது அகரமும் உகரமும் சேர்ந்ததொரு கூட்டெழுத்தாகும். இது தாரம் என்ற சுரத்தின் குறியாம்.

**ஃ.** இஃது இன்று வழங்குகிற தமிழ் நெடுங்கணக்கில் பதின் மூன்றாம் எழுத்தாகும். மேலும் உயிர் எழுத்துகளின் வரிசைக்கும் மெய்யெழுத்துகளின் வரிசைக்கும் இடையில் அமைந்துள்ளது. சில இடத்து உயிர் போலவும், வேறு சில இடத்து மெய்போலவும் அலகு நிலை பெறுவதால், உயிருமாகாது மெய்யுமாகாது தனிநின்று தனிநிலை என்று பெயர்பெற்று இவ்வாறு இரண்டுவரிசைகளுக்கும் இடையே நிற்கிறது போலும். ஆனால் சார்பெழுத்தென்று தொல்காப்பியர் கூறுகிறார். சார்பு என்ற கருத்தினை ஆஃரிதம் என்ற வடசொல் விளக்கும். ஆகையால் ஆஃரிதம் என்பதன் திரிபே ஆய்தம் என்பாரும் உளர். ஆஃதம் என்பதன் பொருள் நலிபு என்றாகிறது. ஒய்தல், ஆய்தல். . . உள்ளதன் நுணுக்கம் (தொல்.சொல் 330) என்ற சூத்திரம் ஆய்தம் என்பதற்கு 'உள்ளது நுணுகி நலிதல்' என்று பொருள் கொள்ள வழிவகுக்கின்றது. அக்கடிய - அஃகடிய; கற்றீது-கஃறீது, முட்டீது-முஃடீது என்பனவற்றில் முன்னைய வடிவங்கள் வலித்த வடிவங்களும், பின்னையவை நலிந்த வடிவங்களும் ஆதலைக் காணலாம்.

காடு ஒலிக்கும் ஒலியைச் சுஷ்ஷு - சுஃஃது என்று எழுதினர். ஷ என்ற ஒலி தொடர்ந்து எழுவதனைக் காட்ட அவ்வாறு எழுதிய காலம் உண்டு. ஆய்த எழுத்தின் வரிவடிவம் பலரையும் சிந்திக்க வைத்துள்ளது. ஃ அடுப்புக்கல் போல மூன்று புள்ளி வடிவாக எழுதுவது இந்நாளைய வழக்கம். கேடயம் என்ற ஆயுதத்தில் தோன்றும் முக்குமிழி போலத் தோன்றுவதால் ஆய்தம் என்ற பெயர் பெற்றது என்பர். ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும் என்ற தொல்காப்பியச் சூத்திரத்தையும் இந்த வடிவமே ஆய்தத்தின் வடிவம் என்பதற்கு நச்சினார்க்கினியர் காட்டுவார். அங்குக் கூறிய முப்பாற்புள்ளி குறிப்பது குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்று மூன்று வகையான புள்ளி எழுத்துகளையுமே அன்றி, ஆய்தத்தினை மட்டும் அன்று. பின் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த நந்திவர்மனுடைய காசாக்குடி செப்பேட்டில் வெஃகா என்ற

சொல்லில் வரும் ஆய்தம் மேலும் கீழும் புள்ளியும் இடையே கோடும் வடிவமாக அமைந்திருக்கக் காண்கிறோம் ஃ.[7]

மெய்யெழுத்துகள்

தெ.பொ.மீ., அவர்கள் மெய்யெழுத்துகள் ககரம் முதல் னகரம்வரை, அவற்றின் வடிவங்களையும், தனித்தும் உயிரொலிகளுடன் சேர்ந்து ஒலிக்கும் முறைகளையும், சொல்லில் வருமிடங்களையும் மரபிலக்கண அடிப்படையிலும், மொழியியல் அடிப்படையிலும் மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார். அவை மாணவர்களுக்குப் பயன்படும் நோக்கோடு மிகச் சுருக்கமாக இங்குத் தொகுத்துக் கூறப்படுகின்றன. விளக்கம் மிகு அளவில் தேவைப்படுவோர் மூலக்கட்டுரைகளைப் படிக்கலாம்; அல்லது தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் நினைவு அறக்கட்டளை வெளியிட்டுள்ள 'தமிழ்க் களஞ்சியம்' என்ற தொகுப்பில் காணலாம்.

ககரம் க் என்ற வல்லின மெய்யெழுத்தினையும், அ என ஒலிக்கும் உயிர் எழுத்தினையும் சேர்த்து ஒலிக்கும். தமிழ் மெய்யெழுத்து வரிசையில் முதல் எழுத்தாகும். தனிநின்று ஒலிப்பது-தானே தனி நின்று அலகு (Syllable) பெறுவது உயிர் என்றும், உயிர் இன்றி இயங்காதது- பாட்டில் அலகு பெறாதது - மெய் என்றும் பெயர் பெறும். இவை அழகிய, பொருள் நிறைந்த உவமைப்பெயர்களாகும். உயிரினும் ஒலிகுறைந்தவை, அழுத்தம் குறைந்தவை மெய்யெனப் பெயர்பெறும். உயிரை ஒலிக்கும்போது யாதொரு தடையும் வாயில் எழுவதில்லை; மெய்யினை ஒலிக்கும்போது ஏதோ ஒருவகையான தட்டுப்பாடு எழுவது போலத் தோன்றுகிறது. இதனால் ஒற்று என்பது மெய்க்குப்பெயராக அமைந்தது.

தமிழில் க் என்னும் ஒலி மொழிக்கு முதலில் வரும்; ஈற்றில் வருவதில்லை. ஈற்றில் பெரும்பான்மையும் உகரமும் சிறுபான்மை பிறஉயிர் எழுத்துகளும் பெற்றே வரும். ஓரலகுக்குக் குறையாதவை முன் வந்தால் உகரம் குற்றியலுகரமாக ஒலிக்கும். இதனை இதழ் குவியா உகரம் என்பர். யா என்பது பின்வந்தால் இந்த உகரம் மேலைய உகரத்திற்கும் இகரத்திற்கும் இடைப்பட்ட ஒலி பெறும். இதனைக் குற்றியலிகரம் என்பர். ககரம் மொழிக்கு இடையே வரும்பொழுது உயிரெழுத்துகளோடு சேர்ந்து உயிர்களுக்குப் பின்னும், இதுதனித்து வரும்; யரழ-இன் பின்னும் உயிர்களின்

7. தமிழ்க்களஞ்சியம், ப.37.

பின்னும் இரட்டித்துவரும்; ட்-வெட்கம், ற்-கற்க, ல்-பல் கடிது, ள்-முள்கடிது, ண்-மண்கடிது, ன்-பொன்கடிது, ங்-அங்கு என்ற எழுத்துகளின் பின்னும் தனித்து வரும். மெல்லெழுத்துகளில் பெரும்பான்மையும் ங் என்பதன் பின்வரும் - ம் என்பது ங் எனத் திரியும்-மரங்களை. ஞ், ந், இப்போது மொழியீற்றில் இல்லை; முன்னாளில் வந்தபோது அவற்றின் பின் க் என்பதன் முன் சாரியை வரும்; வந்த போது ககரம் இரட்டிக்கும். வகரம் முன்வந்தால் சாரியை பெறும்; அல்லது ஆய்தமாகும்.

அறிஞர் கால்டுவெல், வெடிப்பெழுத்துகள், மொழிக்கு முதலிலும் இடையே இரட்டித்து வரும்போதும் மொழிக்கு இடையில் உயிர் எழுத்துகளின் நடுவில் ஒற்றையாய் வரும்போதும் மெல்லெழுத்தின் பின் வரும்போதும் ஒலி மாற்றம் பெற்று வழங்கும் என்று 'விதி' கூறியுள்ளார். அதற்கு, உயிர்ப்பொலி ஒலிப்பொலி மாற்றுச் சட்டம் (Law of Convertability of Surds and Sonants) எனப் பெயரிட்டு, அதனைத் திராவிட மொழி இனத்தின் சிறப்பியல்பு என்று தெ.பொ.மீ. அவர்கள் கூறியுள்ளார்.

ககரம் காந்தார சுரத்தின் குறியாக வழங்குகிறது. 'க' என்பது ஒன்று என்ற எண்ணின் குறியாகும். மேலும் பிரமன், அக்கினி என்ற பொருளிலும் வழங்கப்பட்டது. வாழ்க என்பதில் உள்ளது போல வியங்கோள் விகுதியாகவும் வழங்குகிறது. பேராசிரியர் அவர்கள் வரிவடிவம் பற்றிக் குறிப்பிடும் பொழுது பிராமி எழுத்திலிருந்து தமிழ் எழுத்துகள் வளர்ந்தனவா, தென்னாட்டிலிருந்து வடக்கே எழுத்துகள் சென்றனவா, சிந்து நதிக்கரையிலிருந்து எழுத்துகள் வளர்ந்தனவா என்று எழும் கேள்விகளுக்கு இறுதியான விடை கூற முடியாது என்று கூறியுள்ளார்.

க்+ஆ = கா உயிர்மெய் எழுத்தாகும்

ஆகார அறிகுறி, க என்பதன் தலையில் வலப்புறத்தில் குறுக்குக் கோடாகப் போனது பல்லவர் காலத்தில் நடுவே உள்ள குறுக்குக் கோட்டினை ஒட்டிய கோடாகக் கீழ் வளைந்தது. சோழர் காலத்தில் தனியே நின்று, பாண்டியர்காலத்தில் இடப்புறத்தில் குறுக்குக்கோட்டோடு தோன்றும் நேர்கோடாக மாறி, விஜய நகர அரசர் காலத்தில் இன்று கால் என்று கூறும் வடிவத்தை அடைந்தது.

கா வினைச்சொல்லாகப் பாதுகா, காவல் செய், தடு, அனுஷ்டி, தீமைவரவொட்டாமல் தடு, எதிர்பார் என்ற பொருள்களைத் தருகிறது. பெயர்ச்சொல்லாகச் சோலை, காவடித்தண்டு,

துலாக்கோல், 100 பலம் கொண்ட நிறுத்தல் அளவு, பூ முதலிய இடும் கூடை, சரசுவதி என்ற பொருள்களிலும் வழங்குகிறது. அசைநிலையைக் குறிக்கும் பொழுது இடைச்சொல் எனலாம்.

ககரம் பன்னிரு உயிர்களுடனும் சேர்ந்து உயிர்மெய்யாக வழக்கில் உள்ளது.

க்+ஔ என்ற இரண்டு எழுத்துகளையும் உயிர்மெய் எழுத்து என ஒன்றாகக் கொண்டு கௌ என எழுதுவர். கௌ என்பதனைக் கவ் என்றே எங்கும் கொள்ளுதலும் கூடும். கௌவு என்ற பொருளில் வரும் கௌ என்ற சொல்லும் உண்டு. கொள் என்ற பொருளில் வரும் கௌ என்பது மராட்டியச்சொல் என்பர். கௌ என்ற எழுத்தினைக் கல்வெட்டுகளில் காண்பது அரிது.

ங ஒலி தமிழ் நெடுங்கணக்கில் க என்பதின் பின்வரும். இன மெல் எழுத்தாகும். ங என்பது அகரச்சாரியையோடு வந்த ங் என்ற எழுத்தைக் குறிக்கும். பண்டைய நாளில் ங் என்ற மெய்யெழுத்தேயன்றி ங முதலிய உயிர்மெய் எழுத்துகள் சொற்களில் வழங்கவில்லை. ஙப்போல் வளை என்று ஆத்திச்சூடியில் வந்துள்ளது சிறந்த எடுத்துக்காட்டாகும். ங என்பது மரக்கால் அல்லது குறுணி என்பதன் அறிகுறியாகச் கல்வெட்டுகளிலும் பிற எழுத்துகளிலும் வழங்கி வருகின்றது.

சகரம் ச்+அ என்ற இரண்டு ஒலிகளும் உயிர்மெய் என ஒன்றாகக் கருதப்படுவதன் வடிவம். வல்லின வெடி உயிர்ப்பாக ஒலிக்கப்பட்டது. இது மொழியிடையில் இரட்டித்து ஒற்றாக வரும்பொழுது இந்த ஒலியினை இன்றும் கேட்கலாம். தொல்காப்பியர் காலத்தில் ச் என்பது அகரத்தோடு மொழி முதலில் வருவதில்லை. சங்க இலக்கியங்களில் பல சொற்கள் ச வில் தொடங்குகின்றன. சா என்பது இறந்தகால வினை எச்சமாகும் போது சத்து என வருதல் வேண்டும். ஆனால் செத்து என்று வருகிறது.

சகரம் இடையண்ண எழுத்து என்றால் அதற்கு ஒத்த இடையெழுத்து யகரம் என்றாகும். மசானம் > மயானம் என சகரம் யகரம் என வருவதைக் கூறலாம். சகரஒலி சில மொழிகளின் முதலில் இருந்தது பின்னர்க் கெட்டது என்றும் எண்ணத் தோன்றுகிறது. சபை=அவை, சான்றோர்=ஆன்றோர் ஆகியவற்றைச் சான்றாகக் கூறுவர். சகரம் பன்னிரு உயிருடனும் சேர்ந்து உயிர்மெய்யாக வழக்கில் உள்ளது. மேலும் சௌ என்பதனைச் சவு அல்லது சவ்

என்றே எழுதியதால் சௌ என்ற வடிவம் கல்வெட்டில் காணப்படவில்லை.

ஞ் தமிழ் நெடுங்கணக்கில் நான்காவது மெல்லின எழுத்தாகும். இகரத்தை முன்னே வைத்து இன்று இஞ் என்று ஒலிக்கிறோம். மொழிக்கு முதலில் ஞகரம் உயிர்வர ஒலிக்கும். தனிமெய்யாக வருவதில்லை. தொல்காப்பியர் ஞகரம் மொழிக்கு முதலில் ஆ, எ, ஒ என மூன்று உயிர்களுடன் மட்டுமே வரும் என்று கூறியுள்ளார். நன்னூலார் அகரத்துடனும் வரும் என்றார். ஞிமிறு என்பதில் இகரத்துடனும் வருகிறது. இது புறநானூற்றுச் சொல் என்பதால் இதனையும் சேர்த்துக் கொள்ளலாம். ந என்பதன் போலியாகவும் ய என்பதன் போலியாகவும் ஞகரம் வந்துள்ளது. உன்னுடைய தாய் என்ற பொருளில் ஞாய் என்ற சொல் குறுந்தொகையில் வழங்குவதால் அக்காலத்தில் இந்த நகரம் ஞகரமாய் வழங்கியமை விளங்குகிறது. யா என்பது மெய்யெழுத்தின் பின் ஞா எனத் தொல்காப்பியர் காலத்தில் மாறியது. பொன்யாத்த=பொன்ஞாத்த எனப் பின்வரும் மெல்லெழுத்தின் சாயல் பெற்றது எனலாம். யாழ், ஞாழ் என வழங்குவதும் உண்டு. மஞ்சு என்பதிற்போல மொழிக்கு இடையே உயிர் எழுத்தோடு வந்து ஒலிக்கும் சகரத்தின்முன் ஞ் வந்து ச என்பதன் ஒலியை ஜ என்றாக்கும். ஞ என்பதன் பின் இவ்வாறே சகரமே அன்றி யகரமும் வரும்; பிற எழுத்துகள் வரா. அஞ்ஞானம் முதலிய இடங்களில் உயிர்களின் இடையே ஞகரம் இரட்டித்து வரும். ஞகரம் மஞ்ஞ்சு முதலியவற்றில் போல அளபெடையாகவும் வரும்.

டகரம் தமிழ்நெடுங்கணக்கில் ஐந்தாவது மெய்யெழுத்தாகும். டகரம் நாமடி ஒலி என்றே எண்ணிவருகிறோம். டகரம் தமிழில் மொழிக்கு முதலில் வராது. சில தெலுங்குச் சொற்களிலும் கன்னடச் சொற்களிலும் டகரம் மொழிக்கு முதலாக வரும். அவற்றில் சில தமிழிலும் புகுந்து விட்டன.

ணகரம் தமிழ் நெடுங்கணக்கில் ஆறாவது மெய்எழுத்தாகும். மெல்லின ஒலி அகரத்துடன் சேர்ந்து ண்+அ= ண என்ற வடிவம் பெற்றுள்ளது. தமிழில் ணகரம் மொழிக்கு முதலில் வருவதில்லை. உயிர்களின் இடையில் வரும்பொழுது அது தட்டொலியாக (Flap) ஒலிக்கிறது என்று பிர்த் (Firth) என்பவர் கருதுகிறார். ணகரம் தமிழில் சொல்லின் ஈற்றில் வரும். மொழியின் ஈற்றில் மெய்யெழுத்துகள் படிப்படியாகக் குறைந்து வராத நிலையில், உகரச்சாரியை ஏற்று, கண்-கண்ணு எனவும் வருவதைக் காணலாம். ணகரம் வல்லெழுத்தின் முன் டகரமாகவும் மாறுவதை

மண்+குடம்> மட்குடம் போன்றவற்றில் காணலாம். ணகரம் ளகரத்துடன் முற்காலத்தில் முடிந்ததையும் காணமுடிகிறது. எண்=எள், ஆண்=ஆள்.

டகரத்தின்பின் டகரமேயன்றி, க், ச், ஞ், ப், ம், ய், வ் என்பனவும் வரும். பிறமெய்கள் ணகரத்தின் பின் வராது. த, ந வந்தால் அவை ணகரத்திற்கு ஏற்ப ட,ண என முறையே மாறும்.

தகரம் தமிழில் ஏழாவது வல்லின மெய்யெழுத்தாகும். நா நுனி பரந்து, அதற்கெதிருள்ள மேற்பல் வரிசையின் வேரில் ஒற்ற இந்த ஒலி பிறக்கும். தகரம் மொழிக்கு முதலிலும், இடையிலும் மட்டுமே வரும்; ஈற்றில் வராது. த என்பது விளரி இசையின் அறிகுறியாம். த்த என்பது ௲ என்று எழுதப்பட்டு ஆயிரம் என்ற எண்ணினைக் குறிக்கும். த் என்பது இறந்தகால இடைநிலையாகவும் வருகிறது.

தா - த் என்ற மெய் முன்னும் ஆ என்ற உயிர் பின்னுமாக ஒலிக்க வரும் உயிர்மெய்யெழுத்தாகும். தா என்பது வினைப் பகுதியாய் ஒப்போனுக்குக்கொடுத்தல் என்ற பொருளில் வழங்கியது. தொல்காப்பியர் காலத்தில் இப்பகுதி தன்மை, முன்னிலையில் மட்டுமே முடிந்தது. பின்னர் ஈதல், பரிமாறுதல், படைத்தல், மகப்பெறுதல், நூல் இயற்றல், உணர்த்துதல், சம்பாதித்தல், கைப்பற்றுதல், அழைத்தல், பலன் கொடுத்தல் என்ற பொருளில் எல்லாம் வழங்கலாயிற்று. இது துணைவினையாகவும், பிற வினைப்பகுதிகளோடு சேர்ந்தும் வருகிறது. இது பெயர்ச்சொல்லாய் வன்மை என்ற பொருளில் தொல்காப்பியர் காலத்தில் வழங்கிப் பின், வருத்தம், கேடு, பாய்தல், பகை, குற்றம், குறை முதலிய பொருள்களில் வழங்கிவருகிறது.

தகரம் எல்லா உயிர்களுடனும் சேர்ந்து வரும். தௌ இரண்டு தமிழ்ச் சொற்களில் மட்டுமே வழங்குகிறது- தௌவல், தௌவை. தமிழில் மேலும் பல சொற்களில் வழங்கினாலும் அவை பிறமொழிகளிலிருந்து வந்த சொற்களாகும். கல்வெட்டில் தௌ காணப்படவில்லை.

நகரம் மெல்லின ஒலி; தகரத்தின் இன எழுத்தாகும். தமிழ், மலையாளம் ஆகிய இரு மொழிகளில் மட்டுமே ன, ந என்ற வேற்றுமை காணப்படுகிறது. பிற திராவிட மொழிகளில் இவ்வேற்றுமை இல்லை.

ந என்பது நக்கீரன் என்பதில் போலச் சிறப்பினையும், நக்கரைந்து (மிகக்கரைந்து) என்பதிற் போல மிகுதியினையும்

குறிக்கும் தமிழ் முன்னீடாகவும் (Prefix), நமித்திரர் (மித்திரர் அல்லாதார்) என்பதிற் போல எதிர்மறையைக் குறிக்கத் தமிழில் வந்து வழங்கும் வடமொழி முன்னீடாகவும் (உபசர்க்கம்) வழங்கும். நகரம் மொழிக்கு முதலில் எல்லா உயிர் எழுத்துகளோடும் வரும். வெரிந், பொருந் என்ற இரண்டு சொற்களில் மட்டும் பழங்காலத்தில் இறுதியில் வந்து வழங்கியது. வெரிந், வெரின் எனமாறியது; பொருந் வழக்கிழந்து விட்டது.

பகரம் தமிழ் நெடுங்கணக்கில் ஒன்பதாம் மெய், வல்லெழுத்தாகும். மொழிக்கு ஈற்றில் வல்லெழுத்து வராது என்பதனை முன்னரே கண்டோமல்லவா! இந்த மெய் எழுத்தோடு எல்லா உயிர்களும் சேர்ந்து வரும். இலக்கிய வழக்கில் ஔ, எ என்பன நீங்கலாக மற்ற உயிர்களுடன் ஈற்றில் வரும். முற்றியலுகரத்தோடு முடிந்த பகரம் தபு என்ற ஒரு சொல் மட்டுமே உண்டு. ஔ என்பது பேச்சு மொழியில் இல்லாமையால் அது தவிர ஈற்று ஐகாரம் உப்பை> உப்பெ என எகரமாக ஒலித்தலாலும், பேச்சு மொழியில் வரும் எல்லா உயிரும் பகரத்துடன் மொழி இறுதியில் வரும். பகரம் எதிர்கால இடைநிலையாகும்.

மகரம் தமிழ் நெடுங்கணக்கில் பத்தாம் மெய்யெழுத்தாகும். ம, ம், மஃகான் என்றும் இதனை வழங்குவர். இம் மெல்லெழுத்து மொழிக்கு முதல், இடை, கடை என மூவிடத்தும் வரும். மகரத்தின் முன் நிலை மொழி மகரம் கெடும்; மரம்+நன்று-மரநன்று. மகரம் வருமொழி முதலில் வலிக்கு இனமான மெல்லெழுத்தாகும்; மரம்+கிடந்தது= மரங்கிடந்தது. தொகைமொழியில் ஈற்று மகரம் கெட்டு, வல்லெழுத்து மிக்கு முடியும். மரம்+பலகை = மரப்பலகை. .மகரம் மூச்சொலி இழந்து வ என்றும் ஆகும். அம்=அல்; முழி=விழி. சில சொற்களில் வகரம் மெல்லொலி சாயல் பெற்று மகரமாதலும் உண்டு. வானம்=மானம். மகரம், நான், நாம் என்ற சொற்களில் காணப்படுவதைப் போலப் பழைய பன்மைக்குறியாக இருந்துள்ளது.

மகரம் மத்திமம் என்னும் இசையின் குறி எழுத்தாம். திங்கள், சிவன், கூற்றுவன், காலம், படைப்போன், திருமால், நஞ்சு என்ற பொருட்களில் மகரம் வரும். இதனுடைய வடிவம்பற்றித் தொல்காப்பியத்தில் 'உட்பெறுபுள்ளி உருவாகும்மே' என்ற சூத்திரத்திற்குப் பொருள் காண்பர். பகரத்தினுள் ஒரு புள்ளி பெற்று அது மகரமாகும். வீரசோழிய உரையாசிரியர், மகரம் மெய்யெழுத்து என்பதனைக்காட்ட மேலேயும் புள்ளியிடுவதால் புள்ளி பெறுவதே மகரக்குறுக்கத்தின் வடிவம் என்று விளக்கம் கூறியுள்ளார்.

யகரம், தமிழ் நெடுங்கணக்கில் பதினோராம் மெய்யெழுத்தாகும். இதனை இடையெழுத்தென்பர். அரை உயிர்கள் என்று மேனாட்டார் வழங்குவர். தொல்காப்பியச் சூத்திரத்தின்படி மிடற்றெழு வளியிசை என்பதால் யகரம் ஒலிப்புடைய ஒலியாகக் கொள்ளலாம். யகரம் உடம்படுமெய்யாக வருவது தொல்காப்பியர் காலத்தே கட்டாயமில்லை என்பதால் உயிர்களும் மயங்கிவருமெனத் தெரிகிறது. போஇ, ஆஇ என்பனவே பிற்காலத்தில் போய், ஆய் என ஆயின. லகரம் இடையெழுத்துகளில் மூன்றாவதும், மெய்யெழுத்துகளில் பதின்மூன்றாவதும் ஆகும்.

அண்பல் முதல் நாவிளிம்பு வீங்கி ஒற்ற லகாரம் பிறக்கும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். லகரம் தமிழில் மொழி முதலில் வராது. அவ்வாறு பிறமொழிச் சொற்கள் வருமாயின் உகரம், இகரம், எகரம் வருவது வழக்கமாகவுள்ளது (இலக்குவன், லெட்சுமணன்). லகரம்மொழிக்கு ஈற்றில் வரும். ஆனால் இடைக்காலத்திலிருந்து பெரும்பான்மையும் நகரம் நீங்கலாகப் பிற ஈற்று மெய்யெழுத்துகள் பின்னே உகரத்தைப் பெற்றே ஒலித்துவரலாயின. பல்-பல்லு, சொல்-சொல்லு. லகரத்திற்கு ரகரம் போலி என்பர் இலக்கண ஆசிரியர்கள். பந்தல்-பந்தர், சாம்பல்-சாம்பர். மேலும் குற்றியலுகரத்தோடு அர் மாறுபடும் இடமும் உண்டு. வண்டு-வண்டர், பந்து-பந்தர். இவை இருவேறுவட்டார வழக்காகவும் இருக்கலாம். லகர ஈற்றில் முடியும் வினையடிகள் இறந்தகால வடிவத்தில் னகரமாகித் தகர இடைநிலை பெற்று, அந்தத் தகரத்தையும் றகரமாக்கிப் பார்க்கிறோம். இவ்விடங்களில் செல் முதலியவற்றின் பழைய வடிவங்களில் னகரமே ஈறாக வந்தது எனக் கருத இடமுண்டு. மெல்லெழுத்துகள் ஈற்றில் மூக்கொலி இழந்து நிற்பதும், கெடுவதும் தமிழிலும், திராவிட மொழிகளிலும் இயல்பு எனலாம். இன்-இல், ஆன்-ஆல் என்பன போல, சென்-நின் என்பன செல்-நில் என்று முறையே மாறின எனலாம். வேறுசில அடிச்சொற்கள் இறந்த காலத்தே, லகரம் றகரமாகி அதன்பின்வரும் தகரத்தையும் றகரமாக்கி, கல்-கல்து-கற்று என்று வழங்கக் காண்கிறோம்.

வகரம் தமிழ் நெடுங்கணக்கில் 14ஆவது மெய் எழுத்தாகும். வகரத்தை ஈரிதழ் ஒலியாக ய என்பது போல ஒலித்திருக்க வேண்டும் என்று பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் கணிக்கிறார். அதற்கான ஆதாரங்களையும் விரிவாகக் கொடுத்துள்ளார்.

வகரக்கிளவி நான்மொழி ஈற்றது என்று தொல்காப்பியர், அவ், இவ், உவ், தெவ் என்ற நான்கு மொழிகளில்தான் ஈறாக

வருமென்று வரையறுக்கிறார். இடைக்காலத்தில் உகரச் சாரியை பெற்று வவ்வு, கவ்வு, தெவ்வு என்று வழங்க ஆரம்பித்தது.

ழகரம் தமிழ் மெய் எழுத்து வரிசையில் பதினைந்தாம் எழுத்து. தொல்காப்பியர், ரகரம் ழகரம் பிறக்குமிடத்திலேயே ழகரமும் பிறக்கும் என்று கூறியுள்ளார்.

அணரி நுனிநா அண்ணம்வருட ரகாரம்
ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும் (சூ.95).

இடையெழுத்தில் ஒன்றான ழகரம் ஒலிப்புடைய ஒலியாகும். திராவிட மொழிகளில் ழகரம் மலையாளம் தவிர ஏனைய மொழிகளில் பலவாறாகத் திரிந்துள்ளது.

ழகரம் மொழி முதல் வராது. முதலில் குற்றெழுத்துக்குப் பின்னாலும் ழகரமெய் வராது. மொழியின் ஈற்றில் ழகர மெய்வரும். தமிழின் கிளைமொழிகளில் ழகரம் தென்பகுதியில் ளகரமாகவும், வேலூர், செங்கல்பட்டு, சென்னை முதலிய பகுதிகளில் யகரமாகவும் வழங்கப்படுவதை அறியலாம். தெலுங்கு மற்றும் கன்னட மொழிகளில் பழங்காலத்தில் ழகரம் வழங்கியது; பின்னர் ளகரமாயிற்று. இது திராவிடமொழியில் முற்காலத்திலிருந்தே வழங்கிய ஒலியாகக் கருதவேண்டும்.

ளகரம் மெய்யெழுத்து வரிசையில் 16ஆம் எழுத்து. இன்று நாமடி ஒலியாக உள்ளது. தொல்காப்பியர் காலத்தில் இது நாவிளிம்பு வீங்கி அண்ணத்தை வருடப்பிறக்கும் ஒலியாக இருந்தது. ளகரம் சில பொழுது வல்லெழுத்துச் செறிவால் உயிர்ப்பிலா ஒலியாக மாறும். அப்போது டகர ஒலிபோல ஒலிக்கும். கள்+குடி= கட்குடி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் கள்+குடி= கள்க்குடி என்றும் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டது. பழைய ணகர ஈற்றுச் சொற்கள் பின்னே மெல்லோசை இழந்து ளகரமாகத் திரிந்துள்ளதைக் காணலாம். ளகரம் பெண்பால் விகுதியின் ஈற்றில் வரும். ஆனால் இக்காலப் பேச்சுத்தமிழில் சொல் இறுதியில் ளகரம் உச்சரிக்கப்படுவதில்லை. அவள் வந்தாள் = அவ வந்தா.

றகரம் தமிழ் நெடுங்கணக்கில் பதினேழாவது மெய்யெழுத்தாகும். முன்னர் இலக்கணப்படி வல்லின எழுத்து. இன்று அது நுனிநா துடிக்கும் வகையில் முன் அண்ணத்தில் விட்டுவிட்டு ஒலிக்கும் வகையில் வருடுவதால் எழும் ஒலிப்புள்ள ஒலியாக உச்சரிக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் றகர ரகர வேறுபாடு உச்சரிப்பிலும் காணப்படுகிறது. ஏனைய

தமிழ்நாட்டு மாவட்டங்களில் றகரம் ரகரத்துடன் இணைந்து ஒலிக்கப்படுகிறது. இரட்டை றகரம் இரட்டைத் தகரமாக மாறிவிட்டது. இரட்டை றகரம் யாழ்ப்பாணத்தில் t ஆங்கில ஒலிபோன்று உச்சரிக்கப்படுகிறது. Peter = பீற்றர்.

ரகரம் தொல்காப்பியர் காலத்தில் றகரம் ழகரம் பிறந்த இடத்திலேயே பிறந்தது. எனவே ரகரம் நாமடி ஒலியாகும். ஆனால் றகரம் ஒற்றப்பிறக்க, ரகரம் வருடப்பிறக்கும். இது ஒலிப்புடைய உரசொலியாகும். ரகரம் மொழிக்கு முதலில் வருவதில்லை. வடமொழிச் சொற்களில் வரும். உகரம் அல்லது இகரம் சேர்க்கப்பட்டுத் தமிழில் எழுதலாயினர். ருசி=உருசி, ராமன்=இராமன், ரேவதி=இரேவதி, ருடி=இருடி சங்ககாலத்திலும், அதன் பின்னும் அகரமும் வந்து வழங்கலாயிற்று. ரங்கன்=அரங்கன்.

ரகர ஈறு வினைமுற்றாய் இருந்தாலன்றிப் பிற்காலத்தில் பிற மெய்யெழுத்துகளைப் போல் உகரச் சாரியை ஈற்றில் பெற்று வரும். சேர்=சேரு. இந்த உகரம் சில இடத்து மறையும். இதனால் வல்லெழுத்தாம் றகரம் ரகரமாக மாறியபோதும், அது குற்றியலுகரத்தோடு ஈறான நிலையில் உகரத்தை இழந்து ர் என்றே நிற்கக் காண்கிறோம் (வயிறு-வயிர், பாலாறு=பாலார்). இரண்டு மெய்யெழுத்துகளின் முன்வரும் ரகரம் பேச்சு வழக்கில் கெட்டிருக்கக் காண்கிறோம். சேர்ந்தான்=சேந்தான், பார்த்தான்=பாத்தான். பதினோராம் திருமுறையிலும் இத்தகைய மாற்றத்தைக் காணலாம். சேரர்பிரான் என்பது சேரபிரான் என்று வந்துள்ளது.

றகரமும் பழங்காலத்தில் மொழிக்கு முதலில் வராது; ஈற்றிலும் வராது. குற்றியலுகரமாக முடிந்து பழந்திராவிடத்தில் றகரம் ஈற்றில் வந்தது என்பர்.

னகரம் பதினெட்டாவது மெய்யெழுத்தாகும். றகரத்திற்கு இனமான மூக்கொலியாகும். மெல்லெழுத்து வரிசையிலும் கடைசி எழுத்தாகும். தொல்காப்பியர் காலத்தில் நுனியண்ணத்தின் ஈற்றில் நா அணர்ந்து ஒற்றுவதால் உண்டாகும் ஒலிப்புடைய ஒலியாகும். பழந்திராவிடத்தில் நகரத்தோடு இதற்கு வேற்றுமை இல்லை எனலாம். தொல்காப்பியர் காலத்தில் முந்நூறு-முன்னூறு எனத் தொகையிலும் வெரிந்-வெரின் எனக் கடையிலும் பொருள் வேறுபட்டு வருவதாலும் னகரம் நகரத்தினின்றும் வேறுபட்ட ஒலியனேயாகும். னகரம் மொழிக்கு முதலாக வராது.

தம்நாடு, தம்மொழி பற்றிய கனவுகளை நனவாக்க தெ.பொ.மீ. அவர்கள் மிகுந்த நம்பிக்கையோடு பாடுபட்டார். அவர் ஆங்கிலத்தில் எழுதிய தமிழ் இலக்கிய வரலாற்றின் முன்னுரையில், தாம் தமிழ் கற்பிக்கநேர்ந்தது எவ்வாறு என்பது பற்றிச் சொல்கிறார். தம் குருவாகிய திரு.வடிவேலுச் செட்டியார் தமிழ்ப்பற்றையும் தத்துவ ஈடுபாட்டையும் ஊட்டியதைச் சொல்கிறார். தெ.பொ.மீ. அவர்களின் குடும்பமே மூன்று தலைமுறைகளுக்கும் மேலாகத் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்காக உழைத்த குடும்பமாகும். அவரது தந்தையார் திரு. பொன்னுசாமிக்கிராமணியார் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவரான அட்டாவதானம் சுப்பராயச் செட்டியாரின் மாணவர். தமிழிலும் தமிழ் வல்லாரிடமும் தோன்றிய பேரன்பு காரணமாகவே தமது மைந்தனுக்குத் தமது குருவின் குருவுடைய பெயரை வைத்தார். அவரது மூத்த மைந்தரான கிருஷ்ணசாமிப்பாவலர் தமிழறிவும், கலை ஞானமும், நாட்டுப்பற்றும் மிக்கவராய்த்திகழ்ந்து, தேசபக்தியூட்டும் நாடகங்களை அரங்கேற்றித் தமிழ் நாடக உலகில் தமக்கெனத் தனியிடம் பிடித்துக் கொண்டார். தெ.பொ.மீ. அவர்களின் ஆசிரியர்களான திரு. கோவிந்தராஜ முதலியார், திரு செல்வகேசவராய முதலியார், திரு. ராமநாத ஐயர் போன்றோர் தமது வகுப்புகளிலே நாளும் தமிழின் பெருமையை எடுத்தோதி அவருக்கு இருந்த தமிழ்ப்பற்றிற்கு உரமேற்றினர். நாட்டில் வளர்ந்து வந்த தேசிய இயக்கமும், தாய் நாட்டின் மேலும் தாய்மொழியின் மேலும் இந்தியர் அக்கறை காட்ட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி வந்தது. காந்தியடிகளும் நமது நாட்டு வளர்ச்சித்திட்டத்தில் நமது இந்திய மொழிகளின் உயர்வுக்கு உழைப்பதற்கென்று ஒரு பேரிடம் ஒதுக்கினார். இச்சூழலால் உந்தப்பட்ட பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் விடுதலைப்போரிலும், தமிழறிவைப் பெருக்கிக் கொள்வதிலும் நாட்டம் கொண்டார்.

தாம் வாழ்ந்த காலத்தில் நாட்டின் விடுதலையைப் பற்றியும், தமிழ் மொழியைப் பற்றியும் பாடிய கவிஞர்களை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினார். இக்காலத் தமிழ்க்கவிதைக்குப் புதுவாழ்வு தந்த பாரதியாரை இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க்கவிஞர்களுள் தலை சிறந்தவர் என்று பாராட்டினார். அவர் தமிழ்மொழி மீதும், தமிழ்நாட்டின் மீதும் கொண்டிருந்த பற்றையும், பாரத நாட்டைச் சக்தியாகவே உருவகித்துச் சிறப்பித்ததையும், நாட்டுப் புறப்பாடல்களிலிருந்து சிந்துவைக் கையாண்ட பாங்கினையும்,

பொதுமக்கள் பேசும் மொழியில் கவிதைக்கு உயிர் அளித்துப் போற்றியதையும் ஒடுக்கப்பட்டவர்களின் உரிமையைக் கோரி முழங்கியதையும், இறைவனை இயற்கையெங்கும் கண்டுகளித்ததையும் பாராட்டி எழுதியுள்ளார்.

பாரதி பற்றித் தெ.பொ.மீ. அவர்கள் எழுதியவற்றுள் அவருடைய ஆங்கிலக்கட்டுரை "The Rhythm of the Common Speech: Its glorification by Bharathi " சிறப்புடையதாகும். பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் ஆங்கிலக் கட்டுரை வெறும் பாராட்டுரையாக மட்டும் அமையாமல், பாரதியாரின் மொழிநடை, தமிழ் மரபிற்கு எவ்வாறு கடன்பட்டிருக்கிறது என்பதையும், அவரது தனியாற்றலை எவ்வாறு சுட்டி நிற்கிறது என்பதையும் தெளிவாக்குகிறது. அடுத்து வாழ்ந்த பாரதிதாசனாருக்கும், தெ.பொ.மீ. அவர்கட்கும் அரசியல் சமுதாயக் கொள்கைகளில் வேறுபாடுகள் உண்டு. கவிஞர் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர் திறனாய்வாளர், இந்தியத் தேசியத்தை ஆதரிப்பவர். கவிஞர் ஆரிய-திராவிட இனப் போரட்டத்தில் நம்பிக்கை உடையவர். பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் வழியைப் பின்பற்றிய நாத்திகர். ஆனால் பல கொள்கைகளில் மாறுபட்டிருந்தும் பாரதிதாசனாரின் பெருமைகளைப்பட்டியலிட்டுக் காட்டத் தவறவில்லை பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள். பாரதிதாசன் பழந்தமிழ் இலக்கியத்தில் ஊறித் திளைத்து அந்த உயர்ந்த மரபைப் புதிய கவிதையெழுதவும், மக்களாட்சி காலத்திற்கேற்ற நடையைக் கையாளவும் தனியாற்றல் பெற்றிருந்தார் என்றும் இனிய உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கவிதைகளைத் தக்க சொற்கள் உரிய இடத்தில் பெய்து படைப்பது, அவர்க்குக் கைவந்த கலை என்றும் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் எடுத்துரைத்தார். மேலும் பாரதியாரோடு ஒப்பிட்டுப் "பாரதிதாசன் தம்முடைய கவிதைகளின் வேகத்திலும், ஆழத்திலும் அகன்று விரிந்த நோக்கிலும், கவிதைக்கான கருப்பொருளின் பரப்பிலும், கவியாக்கத்தின் உச்ச நிலையிலும் தம்முடைய ஆசிரியரான பாரதியாரைவிட ஒருபடி மேலே செல்கிறார்", என்று சற்றும் மனத்தாங்கலில்லாமல் குறிப்பிடுகிறார். மேலும் பாரதிதாசனின் இயற்கை பற்றிய கவிதைகள் ஒரு கவியுள்ளத்தின் ஒளிவீச்சுகள் என்றும் சிறப்பிக்கிறார்.

"செந்தமிழ்த்தேனைப் பிழிந்து தின்னும் மறவர்" என்னும் தலைப்புடைய கட்டுரை பாரதிதாசனாரின் பாடலில் வரும் ஒருவரியின் நயத்தை விளக்குகிறது. "தேனைக் குடிக்கும்" என்று கூறாமல் 'தேனைப் பிழிந்து தின்னும்' என்று கவிஞர் கூறுவதில் புதுமையை ஆராய்கிறார். குறிக்கோள் வாழ்விற்கு ஏற்றது செந்தமிழ்.

ஆனால் அந்தத் தேனை வாரிகுடிக்கும் நிலை இன்று இல்லை. பிழிந்தே பெற வேண்டும். 'தின்னுவது' என்ற சொல்லைப் பெய்தது ஏன்? "உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்'' என்பது நம்மாழ்வார் பாடல். உணவு உண்டபின் நிகழும் இன்பச் சுவையினை எல்லாம் "தின்பது" குறிக்கும். செந்தமிழ் ஓர் இன்பத் தேனின் திரட்சி. உண்டபின் வழங்கப் பெறும் பருப்பும் பழமும் ஆங்கிலத்தில் dessert எனப்படும்.

## திருவள்ளுவரும் திருக்குறளும்

திருக்குறள் பற்றியும் திருவள்ளுவரைப் பற்றியும் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் நன்கு ஆராய்ந்து தம் கருத்தை அழகாகக் கட்டுரை வடிவிலும், நூலாகவும் வெளியிட்டுள்ளார்.

திருக்குறள் என்ற நூலின் ஆசிரியர் திருவள்ளுவர். இவர் குலத்தால் வள்ளுவர் என்பர் சிலர். ஆதி என்ற புலைச்சிக்கும் பகவன் என்ற பார்ப்பனருக்கும் இவர் பிறந்தார் என்று கபிலரகவல் என்ற நூல் கூறுகிறது. கபிலரகவல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கட்டிவிட்டதொரு நூல் போலும் எனக் காலஞ் சென்ற பாம்பன் சுவாமிகள் கூறக்கேட்டதுண்டு. பாளிதத்தன் என்ற பார்ப்பனர்க்கும் ஒரு புலைச்சிக்கும் பிறந்ததாக ஞானாமிர்தம் என்ற பழைய நூல் வள்ளுவரைச் சுட்டுகிறது. திருவள்ளுவரையும் திருக்குறளையும் புகழ்ந்து பாடும் திருவள்ளுவமாலை கீழ் வரும் பாட்டில் வள்ளுவர் குலத்தைத்தான் சுட்டுகிறதோ என்ற ஐயமெழுகிறது.

> **அறம் பொருள் இன்பம் வீடு என்னுமந்நான்கின்**
> **திறம் தெரிந்து செப்பிய தேவை – மறந்தேயும்**
> **வள்ளுவன் என்பான் ஓர் பேதை அவன் வாய்ச்சொல்**
> **கொள்ளார் அறிவுடையார் – மாமூலனார்.**

இந்தத் திருவள்ளுவமாலை, திருவள்ளுவர் காலத்திலேயே எழுந்ததென நம்புவதற்கில்லை. ஆனாலும் நேமிநாத உரையிலும் கல்லாடத்திலும் இத்தனிப்பாடல் குறிக்கப்படுவதால் எண்ணூறு தொள்ளாயிரம் ஆண்டுகளாக இந்நூல் வழங்கி வருகிறது எனலாம்.

வள்ளுவர் சாதியினைப்பற்றிப் "பறையருள் குருவாகவும் அரசரின் ஆணையைத் தெரிவிப்பாராகவும் உள்ள ஒரு சாதி" எனத் தமிழகராதி கூறும்.

நிமித்தம்பார்த்து, சோதிடம் கூறும் நிமித்திகனை வள்ளுவன் என்ற சொல் சீவக சிந்தாமணியில் சுட்டுகிறது. இன்றும் இச்சாதியினர் சோதிடம் கூறக் காண்கிறோம். ஞானவெட்டியான்

என்ற நூலும் இந்தக் குலத்தைச் சேர்ந்த வள்ளுவர் எழுதியதாகத் தன்னைக் கூறிக்கொள்கிறது. திருக்குறளைப் படிக்கின்ற சாதிச்செருக்குடையவர்களுக்கு, அதன் பொது அறம் இத்தகைய கதைகளைக் கற்பித்துக் காணத்தூண்டியது போலும். அரசர்க்கு உள்படு கருமத்தலைவர் வள்ளுவர் என்று பிங்கலந்தை கூறும். அரசன் ஆணையை யானைமேல் வைத்து, முரசறைந்து தெரிவிக்கும் அரசியல் வெளியீட்டுத் தலைவர்கட்கும் வள்ளுவர் என்ற பெயர் உண்டு என்பது மணிமேகலை முதலியவற்றால் நாம் அறிவதாகும். அரசியல் நுட்பங்களை எல்லாம் கூறும் திருக்குறள் அத்தகையதோர் அதிகாரியால் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதுவது இயல்பேயாகும். வல்லபர் என்ற வடமொழிச் சொல் வள்ளுவர் என்று திரிந்தது எனக் கூறுவாரும் உண்டு. திருக்குறள் எழுதிய ஆசிரியர் அவர் என்பதற்கு மேல் வள்ளுவர் என்ற வழக்கால் நாம் வரையறுத்துக் கூறுவதற்கு ஒரு கருவியும் இல்லை.

ஏலேலசிங்கர் என்பவருடைய கப்பல்கள் தரைதட்டிப் போனபோது வள்ளுவர் தம் ஆற்றலால் அவற்றைக் கரைசேர்ப்பித்தார் என்று ஒரு கதையும் உண்டு. ஏலேலசிங்கர் என்ற தமிழ் அரசர் சிங்களத்தை, கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் ஆண்டதனை நாம் அறிவோம். இனி ஏலாசாரியர் என்பது வந்தவாசிக்கு அடுத்த மலையில் கி.மு. முதல் நூற்றாண்டில் தவம் செய்து வந்த குந்தகுந்தாசாரியாரின் பெயர் என்று சைனர் கூறுவர். இவர்தாம் திருக்குறளைச் செய்தார் என்றும், இவருடைய மாணவராய் இல்லறத்தில் வாழ்ந்த வள்ளுவர் இதனை உலகிற்கு அறிவித்தார் என்றும் திரு சக்கரவர்த்திநயினார் கூறுவர். இங்கும் உறுதி கூறுவதற்கு ஏற்ற பிற செய்திகள் நமக்குக்கிட்டுமாறு இல்லை. இவருடைய மனைவியின்பெயர் வாசுகி என்றும், இவர் ஒரு நெசவுத்தொழிலாளி என்றும் கூறும் பல கதைகளும் உள்ளன.

திருவள்ளுவர் சென்னையைச் சார்ந்த மயிலையில் வாழ்ந்தார் என்பது பழைய வழக்கு. வடமதுரைக்குக் கண்ணன் போலத் தென்மதுரைக்குத் திருவள்ளுவர் எனத் திருவள்ளுவமாலை பாடுகிறது. தமிழ் வளர்த்த மதுரைக்குப் பெருமை தமிழ் வளர்த்த இவரால் வந்ததோடு, மதுரையிலும் வாழ்ந்தார் என்றும் கூறுவர். மயிலையில் வாழும்போது கிறிஸ்துவின் அடியாராகிய தோமய்யர் (Saint Thomas), கிறிஸ்துவின் மலைச்சொற்பொழிவினை விளக்கியதனை வள்ளுவர் கேட்டிருக்கலாம் என்று போப்பையர் கருதுகிறார்.

வள்ளுவர் கொள்கையைப்பற்றியும் முன்னர் விளக்கியுள்ளேன். இவரைச் சமணர் என்று வற்புறுத்துவாரும்

உண்டு. அம்மதத்தின் அடிப்படைக் கொள்கையாம் அஹிம்சை இங்கு விளங்குவது உண்மை. ஆனால் எல்லோருக்கும் ஒப்ப முடிந்த கொள்கைகளையே வற்புறுத்திப் பரப்ப வேண்டும் என்றெழுந்த தம் முயற்சியில், தாம் இன்ன மதத்தினர் என்பதைத் தெள்ளத் தெளிய வள்ளுவர் கூறாது செல்வதால் அவர் விரும்பாத ஒரு பட்டத்தை அவருக்குச் சூட்டுவதில் பயனில்லை. தேவர் என்றும், நாயனார் என்றும் திருவள்ளுவரை வழங்குவதாலேயே அவரைச் சமணர் என்பதற்கில்லை. அப்பெயர்கள் சமணரல்லாதாருக்கும் வழங்கக்காண்கிறோம். நீலகேசியின் உரையாசிரியர் பதினான்காம் நூற்றாண்டில் திருக்குறளை எமது ஓத்து என்கிறார். திருக்குறளில் இருந்து அவர் எடுத்துக் காட்டும் பகுதி சமண மறையின் கோட்பாடாக விளங்குகிறது என்ற அளவில் அவ்வுரைப்பகுதிக்குப் பொருள் கொள்ளுதல் கூடும். 'அவிசொரிந்து' என வரும் குறளின் கருத்து மனுவிலும் வருவதால் சமணப்பாட்டென முடிவு செய்வதற்கில்லை. பிற்காலத்தே தாம் கொல்லாது வந்த புலாலைப் பௌத்தர்கள் உண்டு வாழ்ந்தாலும் புலால் உண்ணாமை பழங்காலப் பௌத்தர்கள் கைக்கொண்டதோர் அறம் என மணிமேகலை கூறும் சாதுவன் கதையால் அறிகிறோம். ஆதலின் 'தினற்பொருட்டால்' என்ற குறள் பௌத்த மதத்தின் கண்டனம் என்று ஒருதலையாகக் கொள்வதற்கில்லை. 'அளறு, இருள்' போன்ற நரகங்களின் பெயரும், பரதசக்கரவர்த்தியே சமுதாயத்தை அமைத்தார் என்பது போன்ற குறிப்பும், ஓர்ப்பு என்ற கருத்தும் திருக்குறளின் சமணமத அடிப்படையைச் சுட்டும் எனக் கொள்வதற்கு இடமிருந்தாலும், இவற்றை எல்லார்க்கும் பொதுவென்ற முறையில் உரையாசிரியர்கள் விளக்குகிறார்கள் என்பதை மறந்துவிட முடியாது. திருக்குறளைப் பொது மறை எனக் கூறுவதே திருக்குறளின் சிறப்பும், வள்ளுவரின் பெருமையும் ஆகும்.

இவர் காலத்தைப்பற்றியும் முடிவான கருத்து ஒன்று விளங்குவதாகக் கூறுவதற்கில்லை. வள்ளுவர் சங்ககாலத்துப் புலவர்களுக்கு முந்தியவர் என்றும் பிந்தியவர் என்றும் இருதிறக் கொள்கைகள் வழங்குகின்றன. 'உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்பது குறள். 'செய்தி கொன்றார்க்கு உய்திஇல்' என்பது புறம். 'நாடாது நட்டலிற் கேடில்லை, நட்டபின் வீடில்லை' என்பது குறள். 'பெரியோர் நாடிநட்பின் அல்லது நட்டு நாடார்' என்பது கபிலர். 'நீரின்றி அமையாதுலகு' என்பது குறள். 'நீரின்றமையா உலகம்' என்பார் கபிலர். 'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்கநாகரிகம் வேண்டுபவர்' என்பது குறள். 'முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்' என்பது

நற்றிணை. 'ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும்" என்பது குறள். 'ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே' என்பார் நச்செள்ளையார். சங்கப் புலவர்கள் திருக்குறளை எடுத்தாள்கின்றார்களா, திருவள்ளுவர் சங்கக் கருத்துகளை எடுத்தாள்கிறாரா என்று எவ்வாறு கூறுவது? 'அறம்பாடிற்றே' என்று கூறும் புறநானூறு அறம் என்பதால் வள்ளுவரின் திருக்குறளையே குறிக்கின்றது என்பாரும் உண்டு. திருவள்ளுவமாலை சங்கப்புலவர் ஒருங்கிருந்து பாடியது என்று இன்று நம்புவாரில்லை.

தொல்காப்பியத்தில் காணாத வழக்குகள் பாட்டிலும் தொகையிலும் அருகி வருபவையாய்த் திருக்குறளில் பயின்று வருவதால் திருக்குறள் சங்க நூல்களுக்குப் பின்னையது என்று கூறுவாரும் உளர். ஆல், இல் என்ற உருபுகளும், இன் என்பதன் பின்வரும் இல் என்ற உருபும், பொருட்டு, மாட்டு, வேண்டி முதலிய சொல்லுருபுகளும், உயர்திணையில் வரும் கள் விகுதியும் ஒருமையான துவ்வீற்றின்முன் வரும் எல்லாமும் என்பதும், உயர்திணைப் படர்க்கையில் வரும் எல்லாமும் என்பதும், மரியாதை ஒருமையாக வரும் நீர் என்பதும், வினையடிச்சொற்களின் பின்வரும் உகரச்சாரியையும் துணை வினையாக வரும் விடு முதலியனவும், ஈரேவலாக வரும் வி,பி என்பனவும், தன்மை ஒருமையில் வரும் அன் ஈறும், எதிர்மறையாக வரும் இல் என்பதும், தன்மையிலேயும் முன்னிலையிலேயும் வரும் வியங்கோளும், செயப்பாட்டு வினையை அமைக்க வரும் படு என்பதும், செயின் என்னும் வினையெச்சப் பொருள் தரவரும் கால், ஆல், ஏல், இல், ஆனும், ஏனும் போன்ற விகுதிகளும், செயற்கென என்ற வினையெச்சத்தின் பொருளில் வரும் செய என்னும் எச்சமும், எதிர்கால வினையெச்ச ஈறாக வரும் பாக்கு என்பதும் வேண்டாம் எனப் பிற்காலத்தே மருவியவேண்டாவாம் என்ற வடிவமும், நன்னூலார் அறிந்த எங்ஙனம் என்ற வடிவமும், போதர என்பதிலிருந்து அமைத்துக்கொண்டது போல்தோன்றும் போதாய் என்ற வடிவமும் குறளில் பயின்று வருகின்றமையால் சங்ககாலத்திற்குக் குறள் பின்னையது என்பர்.

ஒருவந்தம் போன்ற அரிசாமசமும் (வடமொழியும் தமிழும் கலந்த தொகைச் சொல்) சங்ககால அகவல் ஓசையிலும் வேறான செப்பல் ஓசைவரும் வெண்பா யாப்புப்பயின்று வருவதும், பிற்கால வாக்கு என்பர். இவை எல்லாம் திருவள்ளுவர் புதியனவாகப் புகுத்தியன ஆகா. பேச்சு வழக்கிலோ, திசைமொழி வழக்கிலோ பயின்று வழங்குவன, நாளடைவில் இலக்கிய வழக்கிலும் புகுவதே இயல்பு. இவை அனைத்தும் சங்ககாலம் அறியாதனவும் அல்ல.

திருவள்ளுவர் எல்லார்க்கும் பொதுவானதொரு நூலை எழுதவந்ததன் காரணமாகப் பேச்சு வழக்கில் உள்ளவற்றையும் தடையின்றித் தம் நூலில் ஆண்டார் என்று கொள்வதில் வியப்பொன்றும் இல்லை. வடமொழிச் சொற்கள் வருவதும் இந்த நோக்கத்தின் பயனே ஆம். வடமொழி என்று பார்ப்பான், மாதர் முதலிய சொற்களையும் காட்டுவாரும் உண்டு. எப்படிக் கணக்குப்பார்த்தாலும் நூற்றுக்கு இரண்டுக்குமேல் குறளில் வடமொழிச் சொற்கள் இருப்பதாகக் காணோம். பழைய சொல் வழக்காறும் அங்குக் காண்கிறோம். ஆய்தம், ஆன், வயின், மிசை, கண், உழி என்ற உருபுகள்; பெறுகுவம், செய்யன்மின், செய்யற்க, வாழிய, வாழி, படாஅதி, அயர்கம், வாழ்வர், செய்கலான், அவலமிலர், உளரல்லர், பெறுதி, இழுத்தும், உரைக்கோ, உவ, யான், யாம், சொல்லிசை அளபெடை, அன்சாரியை பெற்ற இறந்தகாலம், அஃறிணை ஒருமைவினைகள், முதலியவடிவங்கள்; எதிர்மறை வியங்கோளாக வரும் அல் ஈறு, அல் ஈற்றுவியங்கோள் முதலியன; உன், உம் முதலிய முன்னிலைச் சொற்கள் வழங்காமை முதலியன குறளின் பழமையைக் காட்டும் என்பர். ஆதலின் சங்க காலத்தின் முடிவிலோ, அதனை ஒட்டியோ இந்நூல் எழுந்ததாகல் வேண்டும் என்று மட்டுமே கூறக்கூடும். சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பழைய நூல்கள் திருக்குறளை மேற்கோளாக எடுத்தாள்வதும் இதன் பழமையை வற்புறுத்தும். வள்ளுவரால் சங்கம் அழிந்தது என்ற செவிவழிச் செய்தியும் உண்டு. பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள், திருவள்ளுவரின் தனிப்பெரும் சிறப்புகளை எடுத்துரைத்துள்ளார். பலரும் குறிப்பிடாத சிறப்புகளை, முதன் முறையாக எடுத்துக் காட்டியுள்ளார்.

அறநூல்களில் பழிவாங்குதல் மக்கள் இயல்பு என்றும், இயேசுபெருமான் 'வலக்கன்னத்தில் ஒருவன் உன்னை அறைந்தால் மறுகன்னத்தையும் அவனுக்குக் காட்டு, பழிவாங்க நினைக்காதே' என்று கூறியதாகவும் அறிகிறோம். இதனைப் பொறுக்கும் நெறி என்று போற்றுவர். இவ்விரு நெறிகளுக்கும் மேற்பட்ட நிலையைத் திருவள்ளுவர் வகுத்துள்ளார் என்று பேராசிரியர் புதிய நெறி ஒன்றினை எடுத்துக்காட்டுகிறார்.

மனித இயற்கையை நன்குணர்ந்த திருவள்ளுவர், ஒருபடி மேலே சென்று, ஒருவன் செய்த தீமையை மறந்து, தான் செய்த தவற்றுக்கு அவனே வெட்கப்படுமாறு, அவனுக்கு நன்மை செய்வது மிகவும் சிறந்தது என்று கூறுகிறார். அப்பொழுதுதான் பாதிப்படைந்தவனுடைய உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சிக்கு

இடமில்லாமல் போய்விடும். இதனையே பேராசிரியர் 'மறக்கும்நெறி' என்று சுட்டிக்காட்டுகிறார்.

> பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
> மறத்தல் அதனினும் நன்று (152)
>
> ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம், பொறுத்தார்க்குப்
> பொன்றும் துணையும் புகழ் (156)
>
> இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயம் செய்து விடல் (314)
>
> இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு (387)

குறள் போல் மனிதனுடைய மன இயல்பினை அறிந்து மறக்கும் நெறியைப் போதிக்கின்ற அறநூல் உலகில் வேறெதுவும் இல்லை என்று பேராசிரியர் கூறியுள்ளார். இதற்கு அடிப்படையாகத் தம்முடைய சிறுவயதில் திருக்குறளை, குருநாதர் கோ.வடிவேலு செட்டியாரிடம் முழுமையாகப் பாடம் கேட்டமையினையும், பின்னர் ஆழ்ந்து ஆராய்ந்து ஆங்கில உரையுடன் நூலாக வெளியிட்டமையினையும் கொள்ளலாம். சிந்தாதிரிப்போட்டை வேதாந்த சங்கத்தில், வெள்ளிக்கிழமை இரவுகளில் திருக்குறள் வகுப்புகளைப் பல ஆண்டுகள் பேராசிரியர் தொடர்ந்து நடத்தினார். தொடர் சொற்பொழிவுகளாகவும் பின்னர் செய்துள்ளார். 'வள்ளுவரும் மகளிரும்' என்ற நூலை 1928ஆம் ஆண்டு வெளியிட்டார். இந்த நூல் உருவானதற்கான காரணத்தைப் பேராசிரியர் 'தந்துரை' என்னும் முன்னுரையில் கூறியுள்ளார்.

'அண்மையில் தோன்றிய சுயமரியாதை இயக்கம் என்னும் சூறாவளி, பெண்களை இந்தச் சமுதாயம் அடிமைகளாக வைத்து வழிபடுகிறது; இதற்குத் திருக்குறள் போன்ற நூல்களே காரணம்' என்று அறிவித்து வருகின்றன. அவர்களுடைய கருத்தில் ஏதேனும் உண்மை உண்டா என்பதை அறியும் ஆவலுடன் மீண்டும் ஆராய்ச்சிக் கண்கொண்டு ஊன்றிப்படித்தார். அம்முயற்சியில் அவர்கண்ட உண்மை மேற்கூறிய கூற்றிற்கு எதிராக இருந்தது. 'பெண்களுக்குப் பெருமை தந்தவர் வள்ளுவர் பெருமானே' என்பதுதான் உண்மை என்று அறிந்தார். அதனை உலகிற்கு எடுத்துக்காட்ட 'தேசபந்து' என்னும் இதழில் தொடர்ந்து பல கட்டுரைகள் எழுதினார். அவற்றைக் கண்ட அவருடைய மாணவர்கள், மற்றும் அன்பர்கள், அவற்றைத் தொகுத்து நூலாக

வெளியிடும்படி வேண்டினார்கள். அதன் விளைவாக உருவானதே இந்த நூல். ஏழு இயல்களை உள்ளடக்கியது இந்நூல். அவை பின்வருமாறு:

1. காலமோ நூல் 2. பேதையரது பெருஞ்சிறைப்பள்ளி 3. பெண் பேயா, பேய்த்துறவா? 4. அடிமையா? வாழ்க்கைத் துணையா? (காமத்துப்பால்) 5. அடிமையா? வாழ்க்கைத் துணையா? (அறத்துப்பால்) 6. அடிமையா? வாழ்க்கைத் துணையா? (பொருட்பால்) 7. பெண்பிறவி இழி பிறவியா?. இந்நூலின் தொடக்கத்தில், திருக்குறளிலும்கூட குற்றம் காண்கின்றார்களே என மனம் நொந்து தம் வருத்தத்தை வெளியிடுகிறார். திருக்குறளின் உரையாசிரியர்களில் ஒருவரான பரிமேலழகரே மனுதரும சாத்திரக் கருத்துகளை மனத்தில் கொண்டு, திருக்குறளுக்கு விளக்கம் அளித்துள்ளார். அக்கருத்துக்குத் திருவள்ளுவரிடம் குறைகாண்பது தவறு. பெண்ணடிமை பற்றிய கருத்துகள் திருக்குறளில் இல்லை என்றும் தெளிவுபடுத்தியுள்ளார். 'கேட்ட தாய்', 'சிறைகாக்கும் காப்பு', 'மனத்திண்மை', 'இருமனப்பெண்டிர்', எனும் திருக்குறளில் வரும் தொடர்கள், பெண்ணின் பெருமையை வெளிப்படுத்தும் தொடர்களே என்று பேராசிரியர் தெ.பொ.மீ. கூறியுள்ளார். மேலும், ஒருமை மகளிரின் மனத்திண்மையைப் புகழ்ந்து, வீட்டில் அடைப்பதனைச் சிறை என இகழ்ந்து பேசி, நிறைகாக்கும் காப்பே தலையாயதாகும் என்றும், பெண்கள் தம்மைத்தாமே காத்துக்கொள்ளுவதை வற்புறுத்தியும், உலகிற்குப் பெண்மையின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறார்.

'மாதரே நிறைமொழி மாந்தர்' என்ற தலைப்பில் 'பெய்யெனப் பெய்யும் மழை' என்றால் என்ன? நோன்பு நோற்றுச் செயற்கரிய செய்தலைக் கைவரப்பெற்ற 'பெரியாராகிய நிறைமொழிமாந்தர் பெருமையை அவர் மறைமொழிகாட்டி விடுதல் போலப் பெண்களும், நோன்பு இல்லாமலேயே உயர்நிலையை அடைவர் என்பதே கருத்தாகும். 'தெய்வம்தொழா அள்' என்பதும் அதனையே வலியுறுத்துகிறது. பெண்பிறவி இழிபிறவியா? என்ற இறுதிப் பகுதியில் 'பெண்ணே பெருமை உடைத்து', 'பெண்ணின் பெருந்தக்கது இல்', எனும் திருவள்ளுவரின் கருத்துகளைப் பல அறிஞர்களுடைய கருத்துகளோடு ஒப்பிட்டுக்காட்டி, 'ஆண்பிறவியைவிட பெண்பிறவியே பெருமை உடையது, பயனுடையது' எனும் திருவள்ளுவரின் முடிந்த கருத்தினை வெளிக்கொணர்ந்து காட்டியுள்ளார். காலத்தையும், இடத்தையும் கடந்து வாழும் மாபெரும் ஞானியாகத் திருவள்ளுவரை இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளார் பேராசிரியர்.

'வள்ளுவரும் மகளிரும்' என்ற நூல் ஒரு தலைசிறந்த ஆராய்ச்சி நூல். 'வள்ளுவர் கண்ட நாடும் காமமும்' ஒப்பிலக்கிய ஆராய்ச்சி நூலாக விளங்குகிறது. திருவள்ளுவரைப் பற்றி எண்ணுவதே பெரும்பேறு எனக் கருதுகிறார். பிற தமிழ்ப்புலவர்களுக்கு வாய்க்கப் பெறாத (மறைமலை அடிகள் நீங்கலாக) ஏனைய தமிழ் அறிஞர்களிடையே, சமஸ்கிருத நூல்களுள் காணப்படும் ஒத்த கருத்துகளையும், முரண்பட்ட எண்ணங்களையும் எடுத்துரைக்கும் பேராற்றலைப் பேராசிரியர் தெ.பொ.மீ. பெற்றிருந்தார். இக்காரணத்தால் 'தமிழ்த்துரோகி' எனும் பழிப்புக்கும் கூட ஆளானார். நடுநிலையில் நின்று, உண்மைகாணும் ஆவலுடன் சமஸ்கிருத கருத்துகளையும் எடுத்துக்கூறுவது அவருடைய வழக்கம். இதனை முழுமையாக உணராத தமிழ்ப்புலவர்கள் பேராசிரியரைத்தாக்கி எழுதியும் பேசியும் வந்தனர். இது உண்மைக்குப் புறம்பான செயலாகும். 1920ஆம் ஆண்டிற்கு முன்னரே தாம் வாழ்ந்து கொண்டிருந்த வீட்டிற்குத் 'தமிழகம்' எனும் பெயரிட்டுப் பெருமைப்பட்டவர் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள். இன்றும் சென்னையில் சிந்தாதிரிப்பேட்டை உலகப்பன் தெருவில் 'தமிழகம்' என்ற பெயருடைய வீடு இருப்பதைக் காணலாம்.

திருக்குறளின் கருத்துகளைப் பற்றிப் பரிமேலழகர் காலம் முதல், புலவர் குழந்தையின் காலம்வரை கூறப்பட்டு வந்த தவறான கருத்துகளைத் தக்க சான்றளித்து ஆணித்தரமாக மறுத்து 'வள்ளுவர்கண்ட நாடும் காமமும்' என்ற நூலில் கூறியுள்ளார். இதனை இன்றும் தமிழுலகம் அறிந்து கொள்ளாமல் அவரைப் பற்றித் தவறான கருத்தினை வெளியிட்டுவருகிறது. 'வள்ளுவர் கண்ட நாடு' என்ற அந்நூலின் முதல் பகுதியில், திருவள்ளுவர் வகுத்த அரசியல் கொள்கையைப் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளார். திருவள்ளுவர் மாபெரும் அரசியல் தத்துவஞானி, ஆட்சிக்கலையில் வல்லவர் என்று கூறியுள்ளார். 'திருவள்ளுவர் கண்ட அரசு' எனும் இரண்டாம் பகுதியில் 'ஒருசில கொள்கைகள் வடமொழியில் காணப்படுவதாலேயே அவை வடநாட்டுக் கொள்கைகள் என்று கூறுவது தவறு; அவை உலக அறிவுக் கொள்கைகள். இந்த அறிவுக் கடலில் திளைத்த திருவள்ளுவர் கிணற்றுத்தவளை அல்லர்; கடல் தவளையே அவர்', என்று தற்காப்பு உரையோடுதான் பேராசிரியர் தெ.பொ.மீ. தம் ஆய்வைத் தொடங்கினார். 'படைகுடி கூழ் அமைச்சு' எனத் தொடங்கும் குறளுக்குப் பரிமேலழகர் முதல், வடமொழி அறிந்தவர்களும் கூட (சப்தாங்கம்) ஏழு உறுப்புகளைக் கொண்ட

முதற்பொருள் கருத்தினைக் கூறினர். பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களோ, திருவள்ளுவர் புதுமையான கருத்தைக் கூறியுள்ளார். 'ஆறும் உடையான் அரசருள் ஏறு' என்பது திருவள்ளுவர் கூறியதாகும். இங்கே அரசன் ஏழு உறுப்புகளில் ஒன்றாக அமையாது, மற்ற ஆறு உறுப்புகளையும் ஒருமைப்படுத்தி உயிர்கொடுத்து விளங்கும் முதற்பொருளாக விளங்குகிறான். அரசனை உயிராக்கிப் பிறவற்றை உடலாக்குவது சங்க நூல் வழக்காகும். 'மன்னர் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்னும் கூற்று நினைவுகொள்ளத் தக்கது.

நாடு என்பதற்கு மக்கள் விரும்பி வாழும் பகுதி என்பது பொதுவான பொருள். அது நாட்டில் வாழும் மக்களையும் குறிக்கும். மக்களை விட்டால் நாடு என்பது தனியாக இல்லை. சமுதாயப் பண்பாடு வளர்ந்துள்ள இடமே நாடு.

**உறுபசியும், ஓவாப்பிணியும் செறுபகையும்**
**சேராது இயல்வது நாடு** *(734)*

எனும் குறளுக்கு இப்பொருளையே திருவள்ளுவர் நினைத்து எழுதியிருக்க வேண்டும் என்று பேராசிரியர் கருதுகிறார். வள்ளுவர் கண்ட நாட்டில் வாழும் குடிமக்களிடம் மொழி ஒற்றுமை, இன ஒற்றுமை, பண்பாட்டு ஒற்றுமை, கொள்கை ஒற்றுமை, உரிமை ஒற்றுமை என்பன யாவும் நன்கு தழைத்து ஓங்கும் என்ற கருத்துடன் இப்பகுதியைப் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் நிறைவு செய்துள்ளார். திருவள்ளுவர் கண்டநாடு, மண்ணில் மக்களும், ஆட்சியாளரும் இணைந்து அமைத்துக் கொண்டு புதியதோர் சமுதாயத்தை உருவாக்கிக் கொள்ளும் சமூக நலநாடாகும் என்பது தெளிவாகும்.

### கம்பராமாயணம்

கம்பனின் காவியம்பற்றிப் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் தமக்கே உரிய முறையில் கருத்துச் செறிவுடைய பல கட்டுரைகள் எழுதியுள்ளார். பிறமொழிகளில் உள்ள இராமாயணங்களையும் அவர் அறிந்திருந்ததால், கம்பனின் நிறைகுறைகளைப் பற்றித் தம் கருத்துகளை வெளியிடல் எளிதாயிற்று.

'இந்த நாட்டு மக்களின் மனதிலும், கனவிலும், நனவிலும், பேச்சிலும், மூச்சிலும், ஆடலிலும், பாடலிலும் இந்தக்கதை தவழ்ந்து விளையாடி இன்பமூட்டிவரக் காணலாம்' என்று கூறியுள்ளார்.

மேலும் 'வால்மீகி வடமொழியிற் கண்ட காட்சி இயற்கைமணம் கமழ்வது. எழுத்தச்சன் மலையாளத்தில் கண்ட காட்சி கடவுளின் திருப்புகழ்மாலையாகத் தித்திப்பது. துளசிதாசர் இந்தியில் கண்ட காட்சி அறிவை மறந்த உணர்ச்சி உலகின் அன்புருவாய்த் திகழ்வது. முல்லையம்மை தெலுங்கில் கண்ட காட்சி சுருக்க வடிவில் ஒளிரும் பெண்மைக் காட்சி. பிறர் கண்ட காட்சிகள் புலமை ததும்பும் காட்சிகள். கம்பன் கண்ட காட்சியோ அன்புலகில் அறிவொளியில் மிளிரும் முத்தமிழ்ப் பெருங்காட்சி'.

பேராசிரியரின் காலத்தில் கம்பரைக் குறை கூறியவர்கள், தமிழ்ப் பண்பாட்டிற்கு ஒவ்வாத ஒரு கதையை எடுத்துக் கொண்டார் என்று கூறினர். ஆயினும் அவரது கவிதை ஆற்றலைக் குறை கூற முடியவில்லை. பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் அதற்கு இரண்டு விதமான விடைகள் தருகின்றார். கம்பர் உடலுருக, உயிருருக, உள்ளமுருக, உணர்வுருக அமைத்த கவிதையிலேயே நாம் திளைத்தல் வேண்டும் என்பார். "கல்லில் செதுக்கிய வடிவத்தை ஆயும்போது கல்லில் முட்டிக்கொள்வதோ அறிவின் ஏற்றம்? அக்கல், வன்கல் ஆகலாம்; மாக்கல் ஆகலாம்; உதிர்கல் ஆகலாம்; போலிக் கல்லும் ஆகலாம். கல்லாராய்ச்சி அன்று இங்கெழுவது, கல்லிடை எழுந்த உயிரோவிய ஆராய்ச்சியே ஆம். . . பழங்கதையிலே குற்றம் காட்டுவதில் பயனில்லை. பாவலர் எதிர் கிடந்த கல் அது. கல்லை உயிராக்கிப் பெரும்புரட்சி செய்துள்ளார் பாவாணர்."[8]

வால்மீகி முனிவரின் மூலநூலைத் தழுவி யெழுதியபோதிலும் கம்பரின் நெஞ்சில் நிறைந்திருப்பது தமிழகமும், தமிழ் மொழியும், தமிழ்ப் பண்பாடுமே என்பதற்குத் தெ.பொ.மீ. அவர்கள் பலசான்றுகள் தருகிறார். அன்பின் ஏற்றத்தைச் சிறப்பிப்பதே கம்பரின் நோக்க மென்றும், அன்புருவாம் சீதை அரக்கியர்பாலும் இரக்கம் காட்டும் பண்பைப் போற்றுகின்ற இடத்தில் சங்ககாலம் பற்றி ஆய்வு செய்து பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் எழுதிய கட்டுரை பலராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைந்திருக்கிறது.

தமிழ்ச்சங்கம் என ஒன்று பாண்டியர் தலைநகரில் இருந்து, பிரெஞ்சு அக்காடமி போலத் தமிழை வளர்த்து வந்தது என்பது தமிழர் குறைந்தது 1200 ஆண்டுகளாக நம்பிவரும் ஒரு குறிக்கோள் நிரம்பிய கதை. கடல்கோளை ஒட்டி மூன்றாம் சங்கம் இன்றைய மதுரையில் எழுந்தது என்பது மரபு. இன்று வழங்கும் சங்க

---

8. பிறந்தது எப்படியோ?, ப.25, தெ.பொ.மீ.

நூற்பாக்களிற் பல அந்தக் காலத்தனவாம். கடல்கோள் ஒன்று கி.மு. 150இல் நடந்தது என மகாவமிசம் கூறும். யவனரைப்பற்றிச் சங்க நூல்களில் காணும் குறிப்பும், அகஸ்டஸ் சீசர் காலத்திலிருந்து வரும் ரோம நாணயங்களும் யவனக்கலைப்பொருள்களும் அங்கங்கே தமிழ் நாட்டில் கிடைப்பதும், அரிக்க மேட்டில் தோண்டிப் பார்த்த போது கிடைத்த குறிப்புகளும், கிரேக்கரும் ரோமரும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குள் எழுதிய குறிப்புகளும், பாண்டிய நாட்டிலிருந்து அகஸ்டஸ் சீசரிடம் தூதுவர் வந்ததைப் பற்றிய மேனாட்டுக் குறிப்பும், சிலப்பதிகாரத்தில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அரசாண்டவனாக அறியலாகும் இலங்கைக் கயவாகுவும் செங்குட்டுவனும் ஒரு காலத்தவர் என்ற விளக்கமும் சங்க நூல்கள் பல்லவரைக் குறிப்பிடாமையால் அவர்களுக்கு முந்தியவாதல் வேண்டும் என்ற உய்த்துணர்வும் கொண்டு, சங்க காலம் இரண்டு, மூன்று நூற்றாண்டுகளுக்குட் பட்டிருக்க வேண்டும் என்பர் பலர். இந்தச் சங்கமே இங்கு இல்லை என்பாரும் வச்சிர நந்தி கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் நிலைநாட்டிய சைன, திராவிட சங்கமே இந்தச் சங்கம் என்பாரும் உள்ளனர். இந்தச் சங்கத்தைப் பற்றிய கதையைத் திருநாவுக்கரசரே குறிப்பதால் ஏழாம் நூற்றாண்டுக்கும் முந்தியது இக்கதை எனலாம். சங்கத்தில் இருந்தாராகக் குறிப்பிடப்படுவோர் அனைவரும் ஒரே காலத்தில் கூடி இருந்திருக்க முடியுமா? அவர்களில் ஒவ்வொருவரும் தலைமை ஏற்று நடத்தினரோ? இவ்வாறு பல கேள்விகள் கிளம்புவதும் உண்டு.

வரலாறு எவ்வாறாயினும் ஒரு குறிக்கோளை இந்தக் கதை குறித்தலின் அதனை அறிவது நன்று. சங்கத்தினைப்பற்றிய விரிவான குறிப்பு இறையனாரகப் பொருள் உரைப்பாயிரத்தில் வந்துள்ளது. வேள்விக்குடிச் செப்பேட்டில் அகத்தியர் தமிழ்ச்சங்கம் வளர்த்த குறிப்பு உண்டு. திருவள்ளுவ மாலை என்பது சங்கப்புலவர்கள் ஒவ்வொருவரும் திருக்குறளைப் பாராட்டிப் பாடிய பாடல்களின் தொகுதியே என்பர். நாற்பத்தொன்பது புலவர்களின் பேரும் அங்கே கிடைக்கும். அதிலே வரும் முதல் பாடல் இறைவன் பாடியதாம். இந்தக் குறிப்பு கல்லாடத்திலும் காணப்பெறுகிறதால் இது, அதற்கு முந்திய கதையாதல் வேண்டும். ஒட்டக்கூத்தர் காலத்திருந்த நேமிநாதர் எழுதிய நூலின் உரையில் இந்த மாலையின் செய்யுள் ஒன்று வருகிறது. நேமிநாதம் பன்னிரண்டாம் நூற்றாண்டினதாம். அதே நூற்றாண்டினரான அடியார்க்கு நல்லாரும் சிலப்பதிகார உரையில் சங்கங்களைக் குறிப்பிடுகின்றார். பதின்மூன்றாம் நூற்றாண்டினது என்று டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் கூறும் திருவாலவாயர் திருவிளையாடல்களிலும் சங்கத்தைப் பற்றிய கதை

பரந்து செல்கிறது. சிற்றம்பலக்கவிராயர் வீட்டிலிருந்து கண்ட அகவலொன்றில் காணப்படும் சங்கத்தைப்பற்றிய குறிப்புகள் இறையனார் அகப்பொருளுரையில் வரும் குறிப்புகளோடு பெரிதும் ஒப்பனவாகக் கருதப்படுகின்றன. தொல்காப்பியத்திற்கு உரைகண்ட கல்லாடரை நச்சினார்க்கினியர் குறிப்பிடாமையால் பதினைந்தாம் நூற்றாண்டிற்குப் பிந்தியவர் எனலாம். அவரைச் சங்கத்துச் சான்றோரோடு மயங்கும் இந்த அகவல் பதினாறு அல்லது பதினேழாம் நூற்றாண்டினதாகலாம். மூன்று சங்கங்கள் தொடர்ந்து வந்தன என்பது இந்த மரபாம். முதல் சங்கம் கடல்கொண்ட தென் மதுரையில் இருந்ததாம். இரண்டாம் சங்கம் கபாடபுரத்தில் இருந்ததென்பர். சீதையைத் தேடிச் சென்ற வானரர் பாண்டியர்களுடைய பொன்னால் ஒளிர்ந்த கபாடம் முத்துகளால் அணிபெற்று விளங்குவதைக் கண்டனர் என்று வால்மீகி பாடுகிறார். இதுவே கபாடபுரத்தைப் பற்றிய குறிப்பு என்று கொள்வோர் சிலர். இந்தப் பெயர், கதையில் புகுத்தப்பட்டதென்போரும், வால்மீகி வாயிலைக் கூறினாரேயன்றி, கபாடபுரத்தைக் கூறவில்லை என்றும், இக்குறிப்பினைத் தவறாகக் கொண்டு கபாடபுரக் கதையைச் சங்க வரலாற்றில் நுழைத்து விட்டனர் பின்னோர் என்று கூறுவோரும் உள்ளனர்.

## சமூகத்தொண்டுடன் இணைந்த தமிழ்த்தொண்டு

காந்தியடிகளின் தொண்டராகிச் சென்னையிலுள்ள சிந்தாதிரிப்பேட்டையில் சேரிவாழ்மக்களின் நலனுக்காகப் பாடுபட்டார். சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகவும், ஆல்டர்மெனாகவும் பணிபுரிந்தார். ஒடுக்கப்பட்ட மக்களின் தோழன் என்ற பெயரும் பெற்றார். சிந்தாதிரிப்பேட்டையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பல ஆரம்பப்பள்ளிகளைத் துவக்கி அவற்றின் வளர்ச்சியைக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு பல ஆண்டுகள் பணிபுரிந்தார். சில தொழிற் சங்கங்களின் தலைவர் பதவிகளும் அவரை வந்தடைந்தன. தமிழ் எம்.ஏ. மாணவர்கட்கு ஊதியமின்றி வகுப்புகள் நடத்தித் தமிழ்த் தொண்டாற்றினார். சென்னையில் தமிழ்ச் சங்கம் நிறுவினார். அதன் மூலம் பல இலக்கிய மாநாடுகள் நடத்தினார். சங்கத்தின் மூலம் பல நூல்களை வெளியிடும்பணியிலும் ஈடுபட்டார். இளமையிலேயே ஈழத்து இலக்கிய ஏடான கலாநிலையத்திலும், விவேக சூடா மணி, நவசக்தி, லோகோபகாரி, தேசபக்தன் போன்ற இதழ்களிலும் தொடர்ந்து இலக்கியம், பண்பாடு, தத்துவம் ஆகிய பொருள்களில் கட்டுரைகளை எழுதினார். பொதுவாழ்வு அவரது தொடர்கல்விக்கு இடையூறாக அமையவில்லை. தொடர்ந்து கற்பதை வாழ்வின்

இலக்காகவே கொண்டிருந்தார் என்றால் அதுமிகையன்று. அவ்வாறு பல மொழிகளையும் கற்றதனால்தான் முப்பத்தாறு வயதிலேயே பன்மொழிப்புலவர் என்ற பட்டம் பெற்றார். அவர் வாழ்ந்த காலத்தில் அவ்வாறு சிறப்புப் பெற்றவர்கள் மிகச் சிலரே. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நடந்த ஏராளமான கருத்தரங்கங்களில் பங்கேற்றுத் தமிழ் பற்றி அரிய ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தார். பல வெளிநாட்டவர்கள் தமிழ் பற்றியும் அதன் இலக்கண இலக்கியப் பாரம்பரியம், மற்றும் தொன்மைபற்றியும் அறியத் தூண்டுகோலாக அமைந்தார். மலேசியா, பிரான்சு, இலங்கை, அமெரிக்கா, ஜப்பான், ரஷியா ஆகிய நாடுகளுக்கெல்லாம் சென்று தமிழகத்தின், இந்தியாவின் பண்பாட்டுத் தூதராகவே செயல்பட்டார். 'தாய்லாந்தில் திருவெம்பாவை, திருப்பாவை' என்ற நூலில், தமிழ்நாட்டிலிருந்து கீழ்த்திசை நாடுகளில் வழங்குவதைக் கண்டறிந்து, அதுபற்றிக் கட்டுரைகள் மூலமும் தொடர்புகளை விளக்கினார்.

குவறிட்ச்வேல்ஸ் (Quaritchwales) என்பார், தமது சயாம் அரண்மனைச் சடங்குகள் (Siamye Court Ceremonies) என்ற நூலில் இந்தியப்பண்பாடு சயாம்வரை பரவியதை விளக்கியுள்ளார். கீழைக் கடல் பண்பாட்டையும் வரலாற்றையும் ஆராய்ந்த வங்கநாட்டு அறிஞர்கள் சயாமில் நடக்கும் ஊஞ்சல் திருவிழா, வங்கத்தில் வழங்கும் டோலாயாத்திரையோடு நெருங்கிய தொடர்புடைய தென்று வாதாடினர். தமிழ்நாட்டுச் சடங்குகளுக்கும் தாய்லாந்து நாட்டுச் சடங்குகளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகளை இலக்கியவரலாற்றுச் சான்றுகள் கொண்டு தெ.பொ.மீ. அவர்கள் விளக்கியுள்ளார். ஊஞ்சல் திருவிழா, தமிழ்நாட்டு மார்கழி நோன்போடும், பாவைப்பாட்டுப் பண்பாட்டோடும் இணைத்து எண்ணப்பட வேண்டும். தமிழ்நாட்டுத் தொடர்பு கீழைக்கடல் நாடுகளோடு உண்டு என்பதை மூன்றாவது நந்திவர்ம பல்லவன் காலத்தது என்று கருதப்படும் தமிழ்க்கல்வெட்டு ஒன்று தகோபாவில் இருப்பது உறுதி செய்கிறது. ஊஞ்சல் திருவிழாவின் போது செய்யப்படும் சடங்குகள் தமிழ்நாட்டுக்கோயில்களில் நடைபெறும் சடங்குகளை ஒத்திருக்கின்றன என்பதைத் தெ.பொ.மீ. தெளிவாக்கியுள்ளார்.

சயாமில் சிவன்கோவிலில் நடைபெறும் வழிபாட்டில் ''லொரிபாவாய்'' என்ற மந்திரம் ஓதப்படுமென்று வேல்ஸ் குறிப்பிடுகிறார். இது பாவைப்பாடல்களில் முடிவாக வரும் "ஏலோர் எம்பாவாய்" என்பதே என்று தெ.பொ.மீ. வாதிடுகிறார். தாய்லாந்து மக்கள் ஊஞ்சல் திருவிழாவுக்கு அளித்திருந்த சிறப்புப் பெயர்

"த்ரீயம்ப வாய் திரிப் பாவாய்" என்பதாகும் "திருவெம்பாவை, திருப்பாவை" என்பதே இந்தப் பெயர் என்பதில் தமிழர் எவர்க்கும் ஐயமிருக்காது. தமிழ்ப்பண்பாடு கீழைநாடுகளில் பரவியது அன்பு நெறியிலேயாகும். தமிழர்கள் தங்கள் அருள்நெறியை வளர்த்தார்கள். தங்களுக்குப் புகலிடம் அளித்த நாட்டின் பண்பாட்டை இவர்கள் அறவே அழிக்க முயலவில்லை. தமிழ்ப்பண்பாட்டின் உயர்வு, வளர்ச்சி பற்றித் தெ.பொ.மீ. அவர்கள் பெருமிதத்தோடு கூறும் பகுதி பேரின்பம் அளிக்கக்கூடியதாகும்.

தமிழர்கள், கப்பல் ஓட்டிக் கடாரம் முதலிய தீவுகளை வென்றார்கள். மேற்கில் எகிப்துநாட்டுப் பட்டைக்கோபுரங்களின் முதுகெலும்பாய் நின்ற தேக்குமரம் தமிழ்நாட்டு மேலைக் கடற்கரையிலிருந்தே சென்றிருத்தல் வேண்டும். கிழக்கில் பசிபிக்கடலிலும் அதுவரையுள்ள தீவுகளிலும் இவன்வழிபட்ட திருமேனிகளை இப்பொழுது அகழ்ந்தெடுக்கின்றனர். பாவைநூல்கள் இரண்டையும் இலக்கியங்களாகவும் சமய நூல்களாகவும் பல அறிஞர்கள் கண்டிருக்க, அவர்கள் காணாத பல புதிய கூறுகளைப் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் ஆராய்ந்து வெளிப் படுத்தியிருப்பது இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

## தமிழ் இலக்கணவரலாறு

இலக்கணவரலாறு பற்றியும் மிகச் சுருக்கமாக (1974: 1-16) எழுதியுள்ளார். அதில் ஒப்பாய்வும், இலக்கண வளர்ச்சியும் தமிழ் அறிஞர் இலக்கணக்கல்வி வரலாறும், கருத்து மோதல்வரலாறும் சிறப்பாகக் கூற வேண்டும். வடமொழி இலக்கணத்தாக்கம், தொல்காப்பியத்தாக்கம், நன்னூல் தாக்கம் என்ற முறையில் இலக்கண வரலாறு உருப்பெற்றுள்ளதை விவரித்துள்ளார். வீரசோழியம், பிரயோகவிவேகம், இலக்கணக்கொத்து ஆகிய மூன்று இலக்கணங்களும் வடமொழி இலக்கணமரபைத் தழுவி எழுதப்பட்டாலும் அவற்றிற்கு இடையேயுள்ள நுண்ணிய வேறுபாட்டையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

வீரசோழியம் வடமொழிக்கலைச் சொற்களையும் வடமொழி இலக்கணக்கொள்கைகளையும் புகுத்தியது. பிரயோகவிவேகம் வடமொழிக் கலைச்சொற்களைக் கையாண்டாலும் உதாரணங்களைத் தமிழ் இலக்கியங்களிலிருந்து கொடுத்துள்ளது. பிற திராவிட மொழிகளில் காணப்படும் வடமொழியில் எழுதப்பட்ட இலக்கணங்களையும் ஒப்பிட்டுச் சில கருத்துகளைத் தெரிவித்துள்ளார். கிரேக்க மொழி இலக்கணமான

'டெக்ன கிரமாட்டிகா' என்ற இலக்கணத்தோடும் திராவிடமொழி இலக்கணங்களையும் சுருக்கமாக ஒப்பிட்டு விளக்கியுள்ளார்.

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் தமிழ்த் தொண்டுபற்றிய முனைவர் செ.வை. சண்முகம் அவர்களின் விளக்கம் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. "தமிழுக்கு அவர் செய்த தொண்டு தமிழைத் தமிழர் அல்லாதார் அறியச் செய்தது. இதுவும் இரண்டு பரிமாணம் உடையது. ஒன்று, அவருடைய ஆங்கில நூல்கள், கட்டுரைகள். மற்றொன்று, அவர் சிகாகோ பல்கலைக்கழகத்தில் தமிழ்க்கல்வி தொடங்க வழிகாட்டியதோடு அறிஞர் என்ற முறையில் அங்குத் தமிழ் இலக்கியவரலாறு, தமிழ் மொழிவரலாறு என்ற இரண்டு தலைப்பில் பத்துப்பத்துத் தொடர்ச் சொற்பொழிவுகள் செய்து நூல்களாக வெளியிட்டுத் தமிழ் ஆய்வுக்குப் பரந்த அளவில் அடித்தளம் இட்டதாகும். அங்கும் அவருடைய மொழிவரலாறு முற்றும் புதுமையானது; அறிவியல் ரீதியானது."*

ஐரோப்பியர் எழுதிய சிறுசிறு அறிமுக இலக்கணங்கள் தமிழ்மொழியின் வரிவடிவ வரலாறு, தமிழ் எழுத்துகளின் ஒலிபதிப்புகள் போன்ற நல்ல சான்றுகளைக் கொண்டு ஆராய்ந்துள்ளார் தெ.பொ.மீ. அவர்கள் (1961, மீனாட்சிசுந்தரனார்). அது உண்மையில் தமிழியலுக்கு ஒருபுதிய பரிமாணத்தைச் சேர்த்ததோடு, கிறித்துவத் தமிழ்த்துறை என்ற துறையும் பின்னால் வளர அடித்தளம் அமைத்தது. அதனோடு, தமிழியலில் தமிழைப்பற்றிப் பிற மொழியாளர் பிறமொழிகளில் எழுதியவையும் ஆய்வுக்களங்களாக அமைந்தன.

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் திராவிட மொழிகளை ஒப்பிட்ட அனுபவம், இன்றைய இலக்கண ஆய்விலும், ஒப்பிலக்கணநோக்கு, இலக்கண உருவாக்க நோக்கு முதலிய அணுகு முறைகளால் தொல்காப்பிய மொழியிலிருந்து, சங்கத் தமிழ் மொழிமாறுபடும் மொழியமைப்புத்தரவுகள் மறுபரிசீலனைக்கு உள்படுத்தப்பட்டுப் புதிய எண்ணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன (சண்முகம், 1989: 166 தொ.).[9]

பழந்தமிழ்க்காலம் என்று மொழியியல் நோக்கில் கருதப்படும் சங்ககாலத்தில் கிடைக்கும் தமிழ் பிராமி கல்வெட்டுகள்

9. இலக்கணக் கொள்கைகளும், தெ.பொ.மீயின் பார்வையும். ப.32, புலமை, தொகுதி 27, பகுதி 1. செ.வை. சண்முகம் 2001.

மிகமிகச்சிறியவை; புதிதாக எழுத்தாக்கம் செய்யப்பட்டதால் சொல்லெழுத்து முறை செப்பம்செய்யப்பட வில்லை. அந்தநிலையில் சங்க இலக்கியங்கள் தமிழ்மொழி வரலாற்றுக்கும் ஒப்பிலக்கண வரலாற்றுக்கும் அரிய கருவூலம் என்பதை உணர்ந்து அந்த ஆய்விலும் அக்கறைக் காட்டினார்.

## தமிழ்மொழி வரலாறு

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களுடைய அணுகுமுறை ஏனைய தமிழ் அறிஞர்களின் அணுகுமுறையினின்றும் வேறுபட்டு அறிவியல்பூர்வமாக எல்லோராலும் ஏற்கக்கூடிய முறையில் மொழியியல் அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுத்தக்கூடிய வகையில் உள்ளது போற்றுதற்குரியதாகும்.

இன்றுள்ள தமிழ்நூல்களில் மிகப்பழையது தொல்காப்பியம். அதிலிருந்து அதற்கு முன்னிருந்த தமிழ்நிலையையும் சிறிது அறிந்துகொள்ளலாம். கிரேக்கர் இந்தியாவைப்பற்றி எழுதிய குறிப்புகளில் சில தமிழ்ப்பெயர்கள் வருகின்றன. கி.மு. மூன்றாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் எழுந்தன என்று கருதக்கூடிய சில பிராமிக் கல்வெட்டுகள் தமிழ் மொழியில் இருக்கக் காண்கிறோம். ஆனால் அந்தத் தமிழ் இக்கால வேலையாட்கள் பேசும் ஆங்கிலம்போல பிராகிருதச் சொற்கள் நிரம்பிவர வேற்று மொழியினர் பேச முயன்ற தமிழே எனலாம். பிற திராவிட மொழிகளோடு தமிழை வைத்து ஆராய்வதாலும் சொற்களின் மிகப்பழைய வடிவத்தை அறிந்து கொள்ளலாம்.

அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்து குறிலும் அவற்றிற்கு இனமான நெடிலும் பழைய தமிழில் உயிர் ஒலிகளாம். Man என்பதில் வரும் உயிர் போன்ற ஒலியும் இருந்ததே பின் 'யா' ஆயிற்று- என்பாரும் உண்டு. 'யா' நெடில்; 'எ' குறில் என்பர் (யான்-என்). மொழியியலில் Glottal stop என்பது குரல்வளையில் உள்ள இதழ்கள் மூடுவதால் எழுகின்ற ஒலி. அதனையே விட்டிசை என்று பேராசிரியர் கண்டறிந்துள்ளார். எடுத்துக்காட்டாக இத்தகைய விட்டிசை பின்னர் மொழியீற்றில் வழங்க வந்து பின் வல்லெழுத்தாக வளர்ந்தும் இருக்கலாம்.

'ஆ' என்பது 'ஆகு' என்று வளர்ந்துள்ளதையும் எடுத்துக்காட்டுகிறார். தமிழில் இன்று ஆறு வல்லெழுத்துகளை எழுதினாலும், க,ட,த,ப என்ற நான்கினை மட்டுமே வல்லெழுத்தாக ஒலித்து வருகிறோம். கோத்தர் மொழியில் ச நீங்கிய மற்ற ஐந்தெழுத்தும் வல்லெழுத்துகளே; க,ப,த மூன்றும் பழைய

ஒலிகளாகும். 'ச' என்பது கிளி முதலிய சொற்களில் ககரம் ஒலிக்கும் இடத்திற்கு அருகில் பிறக்கும் ஒலியாக இருந்து பின்னர் இகர எகரங்களோடு சேர்ந்த ககரம் சகரமாகத் திரிந்துவிட்டது. பழைய திராவிட மொழிகளில் (கை=செய், இன்ன=சின்ன) க,ச,த,ப மொழிக்கு முதலில் அடுத்து உயிர் வரும். இடையிலும் வரும். கடையிலும் உயிரெழுத்துகளை இறுதியாகக் கொண்டு ஒலிக்கும். ட,ற என்பவை முதலில் வருவதில்லை. எனவே, சில எழுத்துகளின் சேர்க்கை காரணமாக இவை எழுந்தனவோ என ஐயுறலாம். வின்+து > விடு, சொல் (நெல்)+து = சோறு என்று பிரித்துக்காட்டவும் கூடும். எனினும் ற,ட என்ற இரண்டும் பழைய திராவிட மொழிகளில் உள்ளனவே ஆகும். இந்த ஆறு வல்லெழுத்துகளுக்கும் இனமான ங,ஞ,ண,ந,ம,ன என்ற ஆறு மெல்லெழுத்துகளுக்கும் வழங்கி இருக்கலாம். அமைப்பியல்படி இவை ஏற்புடையனவே. பேராசிரியர் அவர்கள், தமிழ் மொழியின் வரலாற்றைச் சொல்லுருபியல் வழியேயும் (Morphology) ஆராய்தல் வேண்டும் என்றார். சொற்கள் ஒன்றோடொன்று கொள்ளும் இலக்கண இயல்பே இலக்கணப்பொருளாம். திராவிட மொழியில் சொல்லின் உறுப்புகள் தனித்தனிச் சொற்கள் போலத் தெளிவாக விளங்கி ஒன்றோடொன்று ஒன்றிக் கிடப்பது போலத் தோன்றுவதால், திராவிடமொழிகள் ஒட்டுமொழிகள் என்ற பெயரைப்பெற்றன.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் (1965) முதல் துணைவேந்தராக அவர் பணியாற்றியபொழுது தாம் படித்த நூல்களை எல்லாம் கொடுத்து ஒரு நூல்நிலையம் அமைக்கச் செய்தார். மாணவர்களின் தேவையை உணர்ந்து, தொலைதூரக்கல்வி மதுரைப்பல்கலைக்கழகத்தில் தோற்றுவிக்கக் காரணமாக இருந்தார். மேலும் தமிழ்த்துறை த்மிழியல் துறையாக அமையவும், ஒப்பிலக்கியத்துறை தோன்றவும் வழிவகுத்தார்.

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கட்குத் தம் தாய் மொழியான தமிழ்மேல் உள்ளபற்றினை விளக்க ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். பன்மொழிப்புலவர் என, பலமொழிகளைக் கற்று ஆராய்ச்சிக்கு அவர் பயன்படுத்திய போதும் கூட பிறமொழி ஆதிக்கம், திணிப்பு என்று வரும்போது, தாய் மொழிமேல் கொண்டுள்ள பற்றினால், அவர் வெகுண்டெழுந்தார் என்பதைக் கூறவேண்டும். 1948ஆம் ஆண்டு சென்னையில் இந்தித் திணிப்பு எதிர்ப்புக்கூட்டம் நடந்தது. பெரியார் ஈ.வெ.ரா., தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், அறிஞர் அண்ணா அனைவரும் அக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார்கள். இந்நிகழ்ச்சி குறித்து

அண்மையில் குமுதம் (29.03.2004) வார இதழ் "தலைநிமிர்ந்த தமிழர்கள்- மறைமலை அடிகள்" பற்றிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது. பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் தமிழர்கள் கலைபற்றிய ஆழ்ந்த உண்மைகளை அறிந்திருந்தனர் என்பதற்குத் தக்கசான்றாக முத்தமிழ்ப்பாகுபாடு பற்றி விளக்கம் அளித்துள்ளார்.

தமிழர்கள் கலைகளின் தன்மையைத் தெளிவாக ஆராய்ந்து தமிழை மூன்றாகப் பிரித்தனர். அவை முத்தமிழ்-இயல், இசை, நாடகம் ஆகும். இயற்றமிழ் மனக்கருத்தின் அமைதியையும், இசைத்தமிழ் ஒலியின் அமைதியையும், நாடகத்தமிழ் மெய்யின் இயக்கம் பற்றிய விளக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன. மேலைநாட்டு உள்ளத்தியற்கை நூலாசிரியர்கள் மனமானது, அறிவுநிலை, உணர்ச்சிநிலை, செயல்நிலை என முத்திறப்பட்டது என்பர். நம் நாட்டறிஞர்கள் விருப்பாற்றல், அறிவாற்றல், செயலாற்றல் என்றும் இச்சா, ஞான, கிரியா சக்திகள் என்றும் வகைப்படுத்துவர். இசை விருப்பாற்றலின் இயக்கம், இயல் அறிவாற்றலின் இயக்கம், நாடகம் செயலாற்றலின் இயக்கம் ஆகும். அறம், பொருள், இன்பம் மூன்றும் முத்தமிழாக முடியக் காணலாம். இயற்றமிழ் அறமாம், இசைத்தமிழ் இன்பமாம், நாடகத்தமிழ் பொருளாம் என்பர்.

பல இலக்கியப் பயிற்சி பெற்றிருந்த பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் உலக இலக்கியங்களின் பொதுக் கூறுகளையும், தாம் கற்ற இலக்கியம் ஒவ்வொன்றின் தனித்தன்மையையும் அறிந்திருந்தார். இந்திய இலக்கியங்கள் பற்றிப் பேசும் போதெல்லாம் ஆன்மீகம், காந்தியம், இந்திய ஒருமைப்பாட்டுணர்வு ஆகியவற்றினால் அவை கட்டுண்டிருப்பதைப் பெருமிதத்தோடு வலியுறுத்தினார். தமிழ் இலக்கியம்பற்றி எழுதும்போதெல்லாம் அதனுடைய உலகளாவிய நோக்கையும், உலகத்தை ஒரு குடும்பமாக அது பார்க்கும் பார்வையையும், மானுடசாதி ஒன்றேயென அது அறைகூவுவதையும் பெருமையோடு எடுத்துக்காட்டினார். அவருடைய செயல்முறை விளக்கம் சமுதாயத்தில் பலருக்கும் பயன்படும் முறையில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் ஆன்மீகத்திலும் தம் வாழ்வின் கடைசிக் காலக்கட்டத்தில் பெரும்பணி ஆற்றினார். ஆழ்நிலை தியானம், சமைக்காத இயற்கை உணவு ஆகியவற்றையும் பின்பற்றினார். அவர் கலைக்களஞ்சியத்தில் சித்தர்கள் பற்றியும் விரிவாக ஆராய்ந்து கட்டுரைகள் எழுதியுள்ளார்.

அஷ்டமாசித்திகளைப்பற்றி அழகாக எளிதில் புரியும் வண்ணம் விளக்கியுள்ளார். அவைபின் வருமாறு:

1. அணிமா : அணுவைப் போலச் சிறிதாதல்
2. மகிமா : மேருவைப் போலப் பளுபெரிதாதல்
3. இலகுமா : காற்றுப்போல் இலேசாதல்
4. கரிமா : பொன்போலப்பளுவாதல்
5. பிராப்தி : எல்லாவற்றையும் ஆளுதல்
6. வசித்துவம் : எல்லாரையும் வசப்படுத்தல்
7. பிராகாமியம் : கூடுவிட்டு கூடுபாய்தல்
8. ஈசத்தலம் : விரும்பியதனையெல்லாம் செய்து முடித்து அனுபவித்தல்.

இந்த எட்டுவகைப் பேறுகளை அஷ்டமா சித்திகள் என்பர். இந்தச் சித்திகள் கைவரப்பெற்றவரே சித்தர்கள் என்ற வழக்கமுண்டு.

வாசி என்ற மூச்சினை அடக்கி ஆண்டு, யோக சக்தியினால் உடலில் உள்ள மூலாதாரம், கொப்பூழ், இதயம், இரைப்பையின் நடு, கழுத்து, தலைமுடி என்ற ஆறு இடங்களிலும் மனத்தை முறையாக நாட்டிக் குண்டலியை எழுப்பிப் பலப்பல அனுபவமும் வெற்றியும் கண்டு, அப்பால் உள்ள எல்லாம் ஆன பொருளில் நிலைத்துச் சித்திபெறுபவரே சித்தர் என்ற வழக்கமும் பரவியுள்ளது.

கூண்டோடு கைலாயம் போதல், சாவாது வாழ்தல் என்பன தமிழ்நாட்டில் நீண்டநாட்களாகத் தொடர்ந்து பேசப்பட்டுவரும் பேச்சுகளாகும். மாணிக்கவாசகர் இதனையே கூறுகின்றார் என்பர். நால்வர் முதலானோர் மோட்சநிலையை அடைந்த கதைகளெல்லாம் உடலினைச் சாகவிடாது ஒளிமயமாக்கிப் பரத்தில் கலந்ததனையே சுட்டுகிறதென்பார்கள். குமாரதேவரது சுத்தசாதனம் இதனை நன்கு விளக்குகிறது. ரேவணாராத்தியர், சிவஞானதீபம், தத்துவராயருடைய பாடல்கள், இந்த நூற்றாண்டிலிருந்த பாம்பன் சுவாமிகளது கொள்கை, ராமலிங்க சுவாமிகளது முடிவு இவையெல்லாம் இத்தகையதோர் மரபினையே வற்புறுத்தக் காண்கிறோம்.

குதம்பை என்பது ஒரு காதணி. அதனை அணிந்த பெண்ணையும் அச்சொல் குறிக்கும். மனமெனும் பெண்ணை விளித்துக் குதம்பாய், குதம்பாய் என்று பாடுவதால் குதம்பைச் சித்தர் என ஒருவர் போற்றப்படுகிறார்.

மாங்காய்ப்பாலுண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி- குதம்பாய்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி?

மாங்காய் என்பது பிரமம், பால் என்பது அதன் அனுபவம்; மலை என்பது மேலான சமாதிநிலை, கடுவெளி என்பது பிரமமாம். அதனைப் பாடுவாரைக் கடுவெளிசித்தர் எனத்தமிழர் வாழ்த்துகின்றனர். இவரும் அறத்தினை வற்புறுத்திப் பாடுகிறார். அட்டமாசித்திகளைப் பெற்றவர்கள் பதினெண்மர். அவர்கள், 1. அகத்தியர் 2. போகர் 3. கோரக்கர் 4. கைலாசநாதர் 5. சட்டைமுனி 6. திருமூலர் 7. நந்தி 8. கூன்கண்ணர் 9. கொங்கணர் 10. மச்சமுனி 11. வாசமுனி 12. கூர்மமுனி 13. கமலமுனி 14. இடைக்காடர் 15. புண்ணாக்கீசர் 16. சுந்தரானந்தர் 17. உரோமரிஷி 18. பிரமமுனி. இவர்களுடன் தன்வந்திரி, புலஸ்தியர், புசுண்டர், கருவூரார், ராமதேவர், தேரையர், கபிலர் முதலோரையும் கூறுவர். திருமூலர் பெரிய சிவயோகி. திருமந்திரம் என்னும் சிறந்த நூல் செய்திருக்கிறார். அவருடைய மாணவராகிய காலங்க நாதருடைய சீடர் போகர் என்பவர் பெரிய மருத்துவர். மருந்து செடிகளுக்காக ரோமாபுரிவரை இவர் சென்றதாகக் கூறுவார்கள். போகர் முதுமைப்பருவத்தில் பழனியில் வசித்து வந்தார் என்பர். அங்கே போகர் சமாதி காணப்படுகிறது.

வடநாட்டில் 84 சித்தர்கள் இருந்ததாகக் கூறுகிறார்கள். இவர்கள் பின்பற்றிய யோக மார்க்கத்தை நாதமார்க்கம் என்பர். சாதிமத வேறுபாடின்றி எல்லோரும் இம்மார்க்கத்தைப்பின் பற்றலாம். தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த இந்த யோகிகளின் சமாதிகள் பஞ்சாபிலும் வடமேற்கு எல்லைப்புறங்களிலும், நேப்பாளத்திலும் காணப்படுகின்றன.

## தமிழும் மொழியியலும்

தமிழ் இலக்கியம், மரபிலக்கணங்களைக் கற்ற பல பேராசிரியர்கள், மொழியியலைத் தமிழின் எதிரியாகக்கருதினர். அத்துறையையும் துறைசார் அறிஞர்களையும் புறக்கணித்தனர். தாம் கற்ற மரபிலக்கணக்கோட்பாடுகள், தற்காலப் பேச்சுத்தமிழுக்கு ஏற்புடையதாக இல்லாத நிலையில், அப்பேச்சுத்தமிழுக்கும் இலக்கணம் உண்டு என்று கூறி, மொழியியலார் இலக்கணம் வகுத்தனர். இதனால் பல தமிழ்ப்பேராசிரியர்கள் மொழியியல் தமிழுக்குக் கேடு விளைவிக்கும் எனத்தூற்றினர். இக்காலக்கட்டத்தில் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் இருதுறை அறிவுடன் ஆழ்ந்த

ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்த காரணத்தால், தமிழுக்கும் தொண்டாற்றினார்; புதிய துறையான மொழியியலுக்கும் மிகச்சிறந்த பங்களிப்பினை நல்கினார். ஆதலால் வெளிநாடுகளில், அவர் மிகச்சிறந்த மொழியியலறிஞர் என இன்றும் போற்றப்படுகிறார். தமிழ்மொழி மற்றும் இலக்கணம், இலக்கியம், புதினம், தத்துவம் ஆகிய பலதுறைகளிலும் ஆராய்ச்சிக்கெனப் புதியபாதையை வகுத்தளித்தார். மாணவர்களையும் ஊக்குவித்தார். இருபதாம் நூற்றாண்டு கண்ட மிகச்சிறந்த திறனாய்வாளர் என முனைவர் ப.மருதநாயகம் "திறனாய்வாளர் தெ.பொ.மீ." என்று ஒரு நூலே எழுதியுள்ளார்.[10] முனைவர் க.த.திருநாவுக்கரசும் 'இலக்கியத்திறனாய்வாளர்' எனத் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[11]

இலக்கணம் என்பது மொழியின் இயல்புகளைப் புலப்படுத்துவது. அவ்வியல்புகள் எப்படி அமைகின்றன? எந்தெந்தச் சூழல்களில் அவை மாறுகின்றன? அல்லது திரிகின்றன? என்பனவற்றைக் கண்டு அறிந்து அவற்றை விதிகளாக வகுத்துக் கூறுவது இலக்கணம். அடுத்து ஒரு மொழியின் எழுத்தொலிகள், எவ்வாறு ஒன்றாகக் கூடிச் சொற்களை அமைக்கின்றன? சொற்கள் சேர்க்கையில் தொடர்மொழிகள் எவ்வாறு அமைகின்றன? அச்சொற்களின் பொருள்செறிவும், பொருள்திரிபும் எக்காரணங்களால் எவ்வாறு உண்டாகின்றன? என்பனபோன்ற ஒரு மொழியின் பல இயல்புகளைப் பெரிதும், விதிமுறையாக எடுத்துக்கூறுவது இலக்கணம். இவை அனைத்தும் 'மொழியியல்' எனும் அறிவாராய்ச்சித்துறையிலும் அமைகின்றன. ஆனால், இவையாவும், மொழியியலின் செயல்பாடுகளுள் ஒரு மிகச் சிறிய பகுதியேயாகும். இதனால் மொழியியல் ஆராய்ச்சிக்கு ஆழமான இலக்கண அறிவும் தேவையானதாகும். ஆனால் தற்கால மொழியியலுக்கும் மரபிலக்கணக்கொள்கைகளுக்கும் அடிப்படை வேற்றுமைகள் உள்ளன.

மரபிலக்கணம், எழுதப்பட்ட செம்மொழியையே அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது. ஆனால் மொழியியல் செம்மொழியோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல், பேச்சு மொழிக்கும் முதன்மையான இடமளித்து ஆராய்கிறது. உலகில் பேச்சுமொழி அறிந்தவர்களுடன் ஒப்பிடும் போது எழுத்துமொழி அறிந்தோரின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகும். மேலும் மலை,

---

10. திறனாய்வாளர் தெ.பொ.மீ. ப.மருதநாயகம், 1999.
11. தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல், ப.83, க.த. திருநாவுக்கரசு, 2001.

காடு, பாலைவனம், மேய்ச்சல்துறை என பல இடங்களில் வசிக்கும் மக்கள் பேச்சுமொழிமட்டும் அறிந்தவர்களாக உள்ளனர். அத்தகைய பேச்சு மொழிகளையும், சமுதாயக் கிளைமொழிகளையும், வட்டாரக் கிளைமொழிகளையும், தொழில்சார் கலைச்சொற்களையும், குழூஉக் குறிகளையும் மொழியியல் கருப்பொருளாக எடுத்துக் கொண்டு ஆராய்கிறது. மரபிலக்கணம், கடந்தகாலத்தில், ஒருமொழி எப்படியிருந்தது என்பதை மட்டுமே விளக்குகிறது. ஆனால் மொழியியல், ஒருமொழி இன்றுள்ளநிலையைப் பலகோணங்களில் அணுகி ஆராய்ந்து, முற்காலத்தில் எப்படியிருந்திருக்கக்கூடும், வருங்காலத்தில் எவ்வாறு மாற்றமடைய வாய்ப்புகள் உண்டு என பலவழிகளிலும் ஆய்வுக்களத்தை விரிவடையச் செய்கிறது. மொழியியல் அகன்றது; பரந்து விரிந்தது. ஆனால் மரபிலக்கணம் குறுகிய எல்லைக்கு உட்பட்டது.

# மொழியியல் பங்களிப்பு

பேராசிரியர் அவர்கள் முதலில் மொழியியலை மாணவர் நிலையிலிருந்து கற்றுக்கொண்டு, பின்னர் தம்முடைய பரந்துபட்ட அநுபவத்தையும் பன்மொழிப்புலமையையும் கொண்டு மொழியியல் பேராசிரியராகவும் சிறந்து விளங்கினார். தமிழகத்தில் மிகச்சில தமிழ்ப்பேராசிரியர்களே மொழியியலைக் காய்தல் உவத்தல் இன்றிக் கற்றுப் பயன்பெற்றனர். ஆனால் பலர் மொழியியல் தமிழுக்குத் தீங்கு விளைவிக்கும் என்றும் எண்ணினர். மொழியியல் அறிவு தமிழை நன்கு உணர்ந்து கொள்ளுவதற்கும், ஆய்வு செய்வதற்கும் ஏற்ற ஒரு அறிவியல் கருவியாகும் என்பதில் ஐயமில்லை.

இந்த நூற்றாண்டின் அதீதவளர்ச்சியைக் குறிப்பதாகக் கருதலாம் என்று மொழியியலைப் பற்றி அடிக்கடிக் கூறுவார். தம்மை ஒரு மாணவன் என்றும் கூறி, மாணவர்களோடு சேர்ந்துதான் தாமும் படித்து உயர்வதாகக் கூறுவார். ஆயினும் ஆழ்ந்து படித்துணர்ந்து, ஒப்பிட்டு, உண்மை நிலையை விளக்குவதில் ஒப்பார் யாரும் இலர். 'மொழியியல் விளையாட்டு' என்ற நூலில் இதுபற்றி மிக விரிவாக எழுதியுள்ளார். குழந்தை விளையாடுவது போல மிக எளிமையான எடுத்துக்காட்டுக்களுடன் விளங்க வைத்துள்ளார். மொழியியல் வரலாறு என்ற முதல் கட்டுரையில் பழைய காலக்கட்டத்தில் நடந்த மொழியியல் ஆய்வு, இடைக்கால ஆய்வு பற்றியும் கூறியுள்ளார். பின்னர் அண்மைக் காலகட்டத்தில் உண்டான மொழி ஆராய்ச்சி, ஒப்பிலக்கண ஆய்வுப் பணிகள் பற்றியும் விளக்கியுள்ளார். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுந்த மொழியியல் ஆய்வுகளையும், கடினமான மொழியியல் கொள்கைகளையும், படிப்போர் புரிந்து கொள்ளும் வகையில் எழுதி நம்மை வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

அமெரிக்கநாட்டு மொழியியல் அறிஞர் நோம் சோம்ஸ்கி என்பவர், புதியதாக ஒரு மொழியியல் கோட்பாட்டை உருவாக்கி, அதற்கு முன்னர் இருந்த வரைவு இலக்கணம் அல்லது விளக்க இலக்கணம் (Descriptive Grammar) போன்றவற்றைத் தகர்த்தெறிந்தார். மாற்றிலக்கணம் (Transformational Grammar) என்ற கோட்பாட்டை உருவாக்கி உலவவிட்டார். குறிப்பிட்ட எண்ணிக்கை

உள்ள ஒலிகளையும், ஒலியன்களையும், உருபன்களையும், சொற்களையும் கொண்டுள்ளமொழி, எண்ணிலடங்காத சொற்றொடர்களை எவ்வாறு உருவாக்குகின்றது என்ற புதியதோர் கொள்கையை உருவாக்கினார். ஒரு சொற்றொடரை அறிந்துகொள்ள அதன் ஆழத்தில் உள்ள கருத்துப்புலப்படுத்தும் சொற்றொடர்கள் தாம் காரணம் என்றும் கூறினார். இக்கொள்கை பாரம்பரிய மொழியியல் கொள்கையான தரவு அடிப்படையில் அமைந்த இலக்கணங்கள் குறைவுடையன முழுமை இல்லாதவை என்று எடுத்துக்காட்டி, 'மாற்றிலக்கணம்' என்ற புதியதோர் கொள்கையை உருவாக்கிப் புரட்சியை ஏற்படுத்தினார். பேராசிரியர் இந்தப் புதிய கொள்கையையும் கற்றறிந்து பாடம் கற்பித்தார். அதுமட்டுமல்ல, 'மாற்றிலக்கணம்' என்று தமிழில் ஒரு நூலையும் எழுதினார். அது அவருடைய மறைவுக்குப் பின்னர் வெளியிடப்பட்டுள்ளது. 'பேச்சின் ஆழத்தைப்பார்' என்ற கட்டுரையில் மிக அழகாகக் கூறியுள்ளார். அவருடைய அடுத்த கட்டுரையில் மொழியியல் ஆராய்ச்சி நிறுவனங்களைப் பற்றிய பொது விவரம் தரப்பட்டுள்ளது.

கால்டுவெல் (1856) எழுதிய திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணநூல், முதல்முறையாகத் தென்னிந்திய மொழிகள், வடமொழிக் குடும்பத்தினின்றும் வேறுபட்ட, தனி மொழிக் குடும்பம் என்பதை உலகிற்கு வெளிக்கொணர்ந்தது என்பது உண்மையாகும். ஆனால் பிற்கால மொழியியல் வளர்ச்சி, பிற மொழிகளைப்பற்றிய விரிவான ஆய்வுகள் மற்றும் அணுகுமுறை மூலம் கால்டுவெல்லின் கருத்துக்கள் பல நிலைத்து நிற்கவில்லை. அது அவருடைய குறை அன்று; அக்காலத்தில் அத்தரவுகள் அவருக்குக் கிடைக்கவில்லை என்றே கூறவேண்டும். இருபதாம் நூற்றாண்டைச்சேர்ந்த தெ.பொ.மீ. அவர்கள் பன்மொழிப் புலவர் மட்டுமல்ல, சிறந்த மொழியியல் அறிஞரும் ஆவார். ஆதலால் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தைப் பன்முறைப்படித்து, மாணவர்கட்குப் பலமுறை பாடம் சொல்லிச் சிறந்த ஆய்வினை மேற்கொண்டார். அவற்றின் அடிப்படையில், இன்றுள்ள நிலையில் கால்டுவெல்லின் பல கருத்துகள் மாறுபட்டு விட்டன என்று கூறியுள்ளார். தெ.பொ.மீ. அவர்கள் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று கூறவில்லை; ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பின்னரே அவ்வாறு கூறினார். மேலும் அவரின் மற்றொரு கருத்தினையும் இங்குக்குறிப்பிட வேண்டும். "அழகிய ஆங்கில நடைக்காக அந்நூலை ஒருமுறை முழுவதுமாகப்படிக்கலாம்" என்றும் தம் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். அவருடைய பெருந்தன்மையை

நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. கால்டுவெல்லின் நூலை மொழிபெயர்த்து வெளியிட்ட தம்முடைய நூலில் கால்டுவெல்லின் கருத்திற்கு விளக்கமும், சில இடங்களில் அவருடைய கருத்தினை மறுத்தும் உள்ளார். அடிக்குறிப்புகள், மாணவர்கட்கு நன்கு பயன்படுமாறு கொடுத்துள்ளது அவருடைய ஆசிரியத்தன்மையை வெளிப்படுத்துகிறது. பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் 1960ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கால்டுவெல்லின் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். அப்போது பேராசிரியர் ஆற்றியஉரை மறக்கமுடியாதவொன்றாகும். 'வாழுகின்ற கால்டுவெல்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். ஏனெனில் திராவிடமொழி ஆராய்ச்சி செய்வோர் இந்நூலிலிருந்துதான் தம்முடைய ஆய்வை மேற்கொள்ளவேண்டும். இதற்கு மாறுபட்ட கருத்து கிடையாது. ஜி.ஏ.கிரியர்சன் வெளியிட்டுள்ள இந்திய மொழிகளின் ஆய்வறிக்கை (Linguistic Survey of India by G.A. Grierson, 1927, Calcutta) எவ்வாறு இந்தியாவில் வழங்கும் பலமொழிக் குடும்பங்களைப்பற்றிய விவரங்களை, தரவுடனும், விளக்கமளித்துள்ளதோ அதுபோன்றே கால்டுவெல் அவர்களின் இலக்கணமும் அவருடைய கால கட்டத்தில் சிறப்பாக அமைந்திருந்தது. தற்பொழுது எமனோவும் பர்ரோவும் இணைந்து வெளியிட்டுள்ள திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதி (Dravidian Etymological Dictionary by Burrow and Emeno) மிகுந்த பயனளிப்பதாக அமைந்துள்ளது.

முனைவர் க.த. திருநாவுக்கரசு தம்முடைய நூலில் பேராசிரியரின் மொழியியல் நூல்களைப் பட்டியலிட்டுள்ளார்.[12] அவை:

1. 'தமிழ்ஒலிகள்' எனும் எம்.ஒ.எல். ஆய்வேடு Tamil Sounds (M.O.L) (unpublished thesis)
2. அறுபத்தோராம் ஆண்டு மணிவிழாமலர் (English)
3. மொழியியல் இலக்கிய ஆய்வுரைகள் (Sixty-fifth Birthday Commemoration volume)
4. தமிழ்மொழி வரலாறு (தமிழிலும் ஆங்கிலத்திலும்)
5. தமிழ் (ஆங்கிலத்தில்)
6. தமிழ் இலக்கணத்தில் அயற்பண்புகள் (Foreign Models in Tamil grammar)

---

12. தெ.பொ.மீ. ஒரு தமிழ்க் கடல், ப.150.

7. மொழியியல் விளையாட்டுக்கள்
8. மாற்றிலக்கணம்

மேலும் நூற்றுக்கும் குறையாத மொழியியல் கட்டுரைகள் அவரால் பல்வேறு இதழ்களுக்கும் மலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

மொழி என்பது மானிடத்தின் பொது ஆக்கம் ஆனாலும், மனிதன் சமூகக் குழுவாக வாழ்ந்து வருவதே உலகத்தில் பலமொழிகள் வழங்குவதற்கான காரணம். அந்த அடிப்படையில்தான் மொழி ஒரு சமுதாயத்தின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளது. தெ.பொ.மீ. அவர்கள், அதனைத் தமிழ் உதாரணங்கள் மூலம் (Social aspects reflected in language,1965:27-38) என்ற தமது கட்டுரையில் விளக்கியுள்ளார்.[13] மொழியியல் நோக்கில் நாம் மொழியை அணுகி ஆராயும்பொழுது அதன் கட்டமைப்பையும், சமுதாயத்தில் பயன்படும் முறையையும் காணலாம். இலக்கணம் என்பது அதன் கட்டமைப்பு பற்றிக் கூறுவதாக அமைந்திருந்தது. சமூக மொழியியலே மொழியின் பயன்பாடு வெவ்வேறு தட்டுகளில் எவ்வாறு பயன்பட்டு வருகின்றது என்பதை விளக்குவதாக அமைந்துள்ளது. ஏனெனில் மொழியே மனித சமுதாயத்தின் உயிர்நாடி. தனிமனிதனுக்கு அது ஒரு அடையாளமாக நான் தமிழன், நான் தெலுங்கன் என்ற அடையாளமாகத் திகழ்கிறது. சமுதாயத்தில் உள்ள இரு கூறுபாகுபாடுகள்:- ஏழை- பணக்காரன், படித்தவன்-படிக்காதவன், இளைஞன்-வயது முதிர்ந்தோன், ஆண்-பெண், கிராமத்தான்-நகரத்தான், உடல் உழைப்பவன்-உயர் வருமானம் உள்ளவன் என, சமூகவியலார் பிரித்தறியும் பாங்கிற்கேற்ப, பேச்சுமொழியும் மாறுபடும் என்ற உண்மையை மொழியியல் மூலமே அறியமுடியும். தமிழ் இலக்கியவாதிகள், மாறாகச் செந்தமிழ்பேசும் கற்றவர், கொடுந்தமிழ் பேசும் கல்லாதவர் என உயர்ந்தோராகவும், தாழ்ந்தோராகவும் பாகுபடுத்துவர். ஆயினும் அனைத்துத்தரப்பு மக்களையும் ஒரு சமூகமாக இணைப்பது அவர்கள் பேசும் மொழியேயாகும். சமூகமொழியியல் ஆய்வு என்பது, மொழியின் திட்டமிட்ட வளர்ச்சிக்கும் உறுதுணையானதாகும். மொழி புதுப்புது துறைக்கருத்துக்களை வெளியிட புதிய சொற்களை மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் உருவாக்குவதும் சமூகம் சார்ந்ததேயாம்.

---

13. Prof. T.P. Meenakshisundaram, Sixty-fifth birthday commemoration volume, pp. 27-38. 1965.

மொழியியலாருக்கு மொழி என்பது பேச்சு மொழியையே குறிக்கும் என்ற எண்ணம் உண்டு. எழுத்து மொழி இடம், காலம் ஆகியவைகளைக் கடந்து பன்னெடுங்காலமாகப் பயன்பட்டு வருவதால், மொழியின் பயன்பாட்டு விரிவை உணர்த்துவதோடு அந்த மொழிச் சமூகத்தின் ஒருவித நாகரிக வளர்ச்சியையும் அது குறிக்கும். இன்றும் நம்மிடையே பல பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தமிழகத்தில் நீலகிரிமலைப்பகுதியில் தொதுவர் முதல் கோத்தர், இருளர், பணியர், கசவர், காட்டு நாயக்கர், குறும்பர் என பல பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இவர்கள் பேசும்மொழிகளுக்கென்று தனிவரிவடிவம் இல்லை. மொழியியலார் அவைகட்கு வடிவம்தர முன்வந்துள்ளனர். எழுத்து வடிவம் பெற்ற மொழிகளும் கூட, அம்மொழிகள் எந்தெந்த புதிய துறைகளில் பயன்படுத்தப்படுகின்றன என்பதை அறிந்து அம்மொழிகளைத் திட்டமிட்டு வளர்க்க வேண்டும். ஆங்கிலேயர் காலத்திலும், சுதந்திரமடைந்த பின்னரும்கூட ஆங்கிலமே ஆட்சிமொழியாக, நீதிமன்ற மொழியாக, உயர்கல்விமொழியாக இருந்தது. இந்திய மொழிகளை ஆங்கிலேயர்கள் Vernacular என்றே குறிப்பிட்டனர். தற்பொழுது, மொழிவழி மாநிலங்கள் அமைந்த பின்னரே இந்தியமொழிகள், அவை வழங்கும் மாநிலங்களில் ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும் ஆங்கிலத்தையும் விட முடியாமல் துணை மொழியாக வைத்துக்கொண்டு மெள்ள வளர்ந்து வருகின்றன. அவ்வளர்ச்சிக்கு, முறையே திட்டமிட வேண்டும். மேலும் பனையோலையில் எழுத்தாணி கொண்டு எழுதியதமிழ் இன்று கணினிப்பலகைக்கேற்ப வரிவடிவ மாற்றம் பெற வேண்டிய புதிய சூழலில் உள்ளது.

தட்டச்சு வந்தவுடனேயே வரிவடிவமாற்றம் அல்லது எழுத்துச் சீர்திருத்தம் பற்றி பலரும் சிந்திக்கத் தொடங்கினர். பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களும் தமிழ் எழுத்தின் வரிவடிவ வரலாற்றை நன்கு உணர்ந்திருந்ததால் தமிழ்வரிவடிவத்தைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்பதை உணர்ந்திருந்தார். திரு ஈ.வெ.ரா. (பெரியார்) அவர்களின் எழுத்துச் சீர்திருத்தக் கொள்கை, 'விடுதலை' என்ற சொல்லில் உள்ள 'லை' எழுத்துமாற்றம் போல மொழிக்குத் தேவையானவற்றை ஏற்க வேண்டும் என 1952ஆம் ஆண்டே கட்டுரை எழுதியுள்ளார். டாக்டர் செ.வை. சண்முகம் அவர்கள் தெ.பொ.மீ. அவர்களின் கருத்துக்களை ஒன்று திரட்டித் தம்கட்டுரையில் பின்வருமாறு கொடுத்துள்ளார். 1. உயிர் எழுத்துக்களில் இகரக்குறில்நெடிலுக்கு இடையே வடிவ ஒற்றுமை ஏற்படுத்துவது, 2. இகர ஈகார, உகர ஊகார உயிர்மெய்

யெழுத்துக்களில் சீர்மை ஏற்படுத்துவது 3. ஔகார உயிர் எழுத்திலும் உயிர்மெய் எழுத்திலும் உள்ள ளகர வடிவத்தில் மாற்றம் செய்வது. அதாவது இறுதிக் கோட்டின் அடியில் இடது பக்கத்தில் சிறு சாய்வுக்கோடு சேர்ப்பது. முதல்மாற்றம் கல்வெட்டில் காணப்படுவது. இரண்டாவது மாற்றம் எல்லோருக்கும் பழக்கமான கிரந்த எழுத்துகளின் வடிவத்தை ஒட்டியது. மூன்றாவது மாற்றம் கூட்டெழுத்தையும் தனி எழுத்தையும் வேறுபடுத்த அவரே கூறிய யோசனை'.

தெ.பொ.மீ. அவர்களின் மறைவுக்குப் பின் அவரது நூல்கள் சில அச்சிடப்பட்டு வெளிவந்தன. ஆயிரத்துத்தொள்ளாயிரத்து அறுபதுகளில் அமெரிக்காவில் மொழியியலில் மாற்றிலக்கணம் என்ற புதிய கோட்பாடு (நோம்சோம்ஸ்கி) உருவாகியது. இப்புதிய கோட்பாட்டை முழுவதுமாக உள்வாங்கிக் கொண்டு, தமிழ் எடுத்துக்காட்டுகளுடன் புதியதோர் நூலைப்படைத்தார். அவருடைய மாற்றிலக்கணம் அவருடைய மறைவுக்குப்பின்னர் 1985ஆம் ஆண்டு வெளி வந்துள்ளது. தமிழ் இலக்கணங்களோடு, பிற திராவிடமொழி இலக்கணங்களையும் கற்றிருந்தார். வடமொழியும் விதிவிலக்கன்று. இவ்வாறு பிற மொழி இலக்கணங்களைக் கற்றதால் தமிழ் இலக்கணத்தில் பிறமொழிக் கூறுகள் யாவை என்று ஆராய்ந்து 1974இல் ஆங்கிலத்தில் Foreign Models of Tamil என்ற நூலைத் திராவிட மொழியியல் சங்கத்தின் சிறப்பு அறிஞராகப் பொறுப்பேற்று ஆராய்ந்து வெளியிட்டார். ஒப்பிலக்கண ஆய்வு, மொழி வரலாற்று ஆய்வு என மொழியியல் ஆய்வை இரண்டு கோணத்தில் தெ.பொ.மீ. அவர்கள் அணுகியுள்ளார். 1944ஆம் ஆண்டே 'கால்டுவெல் ஒப்பிலக்கணம் அடிச்சொற்கள்' என்ற முதல் பத்தியைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். 1961, 1965ஆம் ஆண்டுகளில் திராவிடமொழிகளை ஒப்பிட்டுப் பல கட்டுரைகளை எழுதலானார். ஒலி அடிப்படையில் அண்ணமயமாக்கல் (ககரம் சகரமாதல்), திராவிட மொழிகளில் பால் (ஆண்பால், பெண்பால்) வரலாறும், வளர்ச்சியும் போன்ற கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை. மொழியியல், அறிவியலின் அடிப்படையில் ஒரு மொழியை அணுகுவதாகும். மொழியின் பல்வேறு தன்மைகளையும் அமைப்பினையும் ஒருங்கிணைத்து அறிந்துகொள்ளுதலாகும். பேச்சுமொழியாக, ஒருமொழியின் ஒலிகள், ஒலிப்புமுறை, தொடரொலி முறை, சொல், சொற்களின் கட்டமைப்பு முறை, சொற்றொடர் முறை அல்லது தொடரியல் அமைப்பு, சொற்பொருளும், தொடரியல் பொருளும் இணைந்தும் மாறுபட்டும் அமையும்முறை, கிளைமொழியியல், சமுதாய

மொழியியல், அகராதியியல், மொழிகள் பல ஒரு குடும்பத்தைச் சார்ந்தனவா, வெவ்வேறா என பலவற்றையும் உள்ளடக்கியது. மொழியியல் இன்று புதிய துறையாகவே வளர்ந்து வந்தள்ளது. ஆயினும் தமிழ் இலக்கணவியலார், இக்கருத்துகளை முன்னரே அறிந்துதான் இலக்கணம் வகுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. எழுத்து மொழியானால் எழுத்துக்கள், வரிவடிவம், சொல்வடிவம், கூட்டுச்சொற்கள், சொற்கள் திரிந்தநிலை என யாவற்றையும் உள்ளடக்கியதே.

பிரெஞ்சு நாட்டுப் பேரறிஞர் ஜூல்ஸ் பிளாக் (Jules Bloch) என்பவர் புதுவையில் இருந்தபொழுது தெ.பொ.மீ. அவர்கட்கு அவருடன் தொடர்பு ஏற்பட்டது. 1937முதல் 1940வரை M.O.L. பட்டத்திற்காகச் செய்த ஆராய்ச்சியே தமிழ் ஒலிகள் என்பதாகும். தமிழ் இலக்கண மரபுப்படித் தமிழ் எழுத்துக்கள் ஒலிக்கப்படும் முறையை முதலொலிகள், சார்பொலிகள் போன்ற ஆராய்ச்சியாக மட்டும் கருத முடியாது. இன்றைய மொழியியலில் ஒலியியல், ஒலியனியல் (Phonetics, Phonemics) அடிப்படையில் அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்து ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட ஆய்வேடாகும். பண்டைய இலக்கணங்களில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்த பேராசிரியர், உரையாசிரியர்களின் கருத்துக்களையும் தம் ஆய்விற்கு எடுத்துக் கொண்டார். டாக்டர் கால்டுவெல், ஜெர்மன் பேராசிரியர் குண்டர்ட், அமெரிக்க நாட்டறிஞர் கிரியர்சன், மற்றும் சேஷகிரி அய்யர், பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி, மாகறல் கார்த்திகேய முதலியார் ஆகிய அறிஞர் பெருமக்களின் கருத்துகளுடன் ஒப்பிட்டு, மதிப்பீடு செய்து முடிவினை வழங்கியுள்ளார். புதிய அணுகு முறையைக் கொண்ட ஆராய்ச்சிக் கட்டுரை இது எனலாம். இவ்வாய்வேட்டின் அடிப்படையிலேயே பின்னர் கலைக்களஞ்சியக் கட்டுரைகள் - தமிழ் எழுத்துகள் என்ற தலைப்பில், வடிவம் பெற்று வெளிவந்துள்ளன. இவற்றில் தமிழ் மலையாளம் ஆகிய மொழிகளில் இன்றும் பேச்சுவழக்கிலும் கூட நிலைபெற்றிருக்கும் 'ழ' கரம் பற்றிப் பேராசிரியரின் விளக்கம் அவருடைய மொழியியல் அறிவின் ஆழத்திற்கு எடுத்துக்காட்டாக அமையும். 'ழ' கரம் பேச்சுத் தமிழில் ழ,ள,ய, க வாகத்திரிந்துள்ளது. பெரும்பாலும் தென்மாவட்டங்களில் 'ள' கரமாகவும் வேலூர், ஆர்க்காடு, சென்னை பகுதிகளில் 'ய' கரமாகவும் உள்ளது. தொழுதி, தொகுதி என்பதில் 'க' கரமாக உள்ளது. இடை எழுத்தான 'ழ' கரம் மெய்யெழுத்து வரிசையில் பதினான்காவதாக எண்ணப்படுகிறது. இது ஒலிப்புடைய ஒலி என்பர் மொழியியலார். தொல்காப்பிய

சூத்திரம் 94, இதனை நகரமும் றகரமும் பிறக்குமிடத்திலேயே பிறக்கும் என்று கூறியுள்ளது. இதன் வரிவடிவ மாற்றங்களை ஆராய்ந்த தெ.பொ.மீ. அவர்கள் கல்வெட்டில் காணப்படும் வரிவடிவங்களுடன் ஒப்பிட்டு விளக்கத்திற்கு வரைபடங்களையும் அமைத்து மாணவர்கள் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் விளக்கியுள்ளார். முனைவர் செ.வை. சண்முகம் அவர்களைக் கல்வெட்டுக்களை ஆராயும்படி அவற்றின் மொழியமைப்பை விளக்கும்படி பணித்தார். இவ்வழிகளினால் திராவிட மொழிகளின் ஒலியமைப்பினை விளக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தார். திரு. கே.எஸ். கமலேசுவரன் அவர்களை, முனைவர் பட்ட ஆய்வுக்காகத் திராவிட மொழிகளில் உள்ள பெயர்ச் சொற்கள் (Dravidian Nouns) பற்றி ஆராய்ச்சி செய்ய வழிகாட்டினார். T. பர்போ M.B. எமனோ வெளியிட்ட திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதி வெளிவந்த காலகட்டம் அது. முனைவர் கமலேசுவரன் அவர்கள் தமிழை முறையாகப் பயின்றவர், மொழியியலிலும் பட்டயம் பெற்று, இவ்வாய்விற்குத் தம்மை தயார்படுத்திக்கொண்டு, DEDயில் உள்ள அத்துணை பெயர்ச் சொற்களையும், மனப்பாடமாக அறிந்து ஆய்வினை மேற்கொண்டார். அவருடைய திறமையை நன்குணர்ந்த பேராசிரியர் அவருக்கு நெறியாளராக இருந்து வழி நடத்தினார்.

தமிழ் இலக்கியம், இலக்கணவரலாறு ஆகியவற்றிற்கு இணையாகவே பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் மொழியியலிலும் தம் கருத்தைச் செலுத்தினார். ஒரே சமயத்தில் மொழியியல் மாணவனாகவும் ஆசிரியர் - ஆராய்ச்சியாளராகவும் விளங்கிய சிறப்பு அவரைச்சாரும். தமிழகத்தில் மட்டுமின்றி அகில இந்திய அளவிலும், ஐரோப்பியா, ரஷியா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் அவரை ஒரு மொழியியல் அறிஞராகவே போற்றி வருகின்றனர்.

திராவிட மொழியியலுக்கும், தமிழ் மொழியியலுக்கும் அவருடைய பங்களிப்பு இன்றுவரை எவராலும் ஈடுசெய்ய முடியாத அளவுக்கு சிறந்து விளங்குவது குறிப்பிடத்தக்கது. அவருடைய அறுபத்து ஐந்தாம் ஆண்டு விழா மலரில் வெளிவந்துள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளில் முதல்கட்டுரை 'திராவிட மொழிகளில் பால் பாகுபாட்டின் தோற்றமும் வரலாறும்' என்பதைப் பற்றியது. அதில் அனைத்துத் திராவிட மொழிகளிலும் இப்பால் பாகுபாடு எவ்வாறு உள்ளது, ஒற்றுமை வேற்றுமை, பிறமொழிகளால் ஏற்பட்ட தாக்கம் முதலியன பற்றியும் மிக விரிவாக ஆராய்ந்துள்ளார்.

பெரும்பான்மையான திராவிட மொழிகள் பால் வேறுபாடுகளைக் காட்டுவதற்குப் பொதுவாகப் பால் விகுதிகளையே பயன்படுத்துகின்றன. கால்டுவெல் பிரதிப்பெயர்களின் மாற்றம் அல்லது திரிந்த வடிவங்களே இவ்விகுதிகள் என்று கூறினார். ஜுல்ஸ்பிளாக்கும் பெயர்ப்பதிலி விகுதிகளாகக் கூறினார். பெயரும் வினையும் பொதுவாக ஒரே பால்விகுதிகளைப் பெற்று வருவதால் வாக்கியத்தில் எழுவாய் பயனிலைகட்கு இடையில் தொடர் இயைபு இருப்பதைக் காணமுடியும். தென்திராவிட மொழியான மலையாளமும், வடதிராவிட மொழியான பிராகூய் மொழியும் இப்பால் விகுதிகளைப் பெற்றிருக்கவில்லை; விதிவிலக்காக உள்ளன. இதனால், திராவிட மொழிகளில் இப்பால் பாகுபாட்டுத்தொடர் இயைபு எந்தக் காலத்தில் உருவானவை; எவ்வாறு ஐந்து வகைக்களாக வளர்ந்தன என்ற கேள்வியும் எழுகிறது. மூலத்திராவிட மொழியில் இக்கூறுகள் உள்ளனவா?

தென்திராவிட மொழிகள் ஐந்து வகை பால் வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன. இவ்வைந்தும் உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டில் அடங்கும். மத்திய திராவிட மொழிகள் வேறுவகையில் செயல்படுகின்றன. உயர்திணையில் ஆண்பால் ஒருமை, பெண்பால் பன்மை அடங்கும். ஆனால் அஃறிணையில்தான் பெண்பால் ஒருமை அடங்கும். இது தென்திராவிட மொழிகளில் இல்லாத அமைப்பாகும். வடதிராவிட மொழிகளில் பிராகூய்மொழி பால் அமைப்பினை ஏற்கவில்லை என்றே கூறலாம். குருக் மொழி பன்மை விகுதியான - அர், ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானதாக உள்ளது. பெண்கள், பெண்களுடன் .பேசும்பொழுது மட்டும்-ஐ விகுதியைப் பயன்படுத்துகின்றனர். இது உயர்திணை ஆண்பால் பன்மைக்கும், அஃறிணை ஒருமைக்கும் இடையில் காணப்படும் வேறுபாட்டினை உணர்த்துகிறது. ஆனால் பால் விகுதிகளின் ஐந்து வகைப்பாகுபாடு படிப்படியாகவே வளர்ச்சி பெற்று உருவானதாகும் என்று எண்ணத் தோன்றுகிறது. எனவே மூலத்திராவிட மொழிக்கு உரியதாக இவற்றைக்கொள்ள முடியாது.

இக்காலத்தில் உள்ள நிலை என்ன என்பது பற்றியும், பின்னர் அவற்றைத் தொடர்புபடுத்தி முடிவாக என்ன காணமுடியும் என்றும் தெ.பொ.மீ. அவர்கள் விளக்கியுள்ளார்கள். முதலில் தமிழ் மொழியில் உள்ள பாகுபாட்டினைப் பின்வருமாறு பட்டியலிட்டுள்ளார். தற்காலத் தமிழில் தன்மை ஒருமை, எழுவாயில் நான் (யான்), என் என்றும், உளப்பாட்டுப்பன்மையான

நாம் (யாம்), வேறுபாட்டுப் பன்மையான நாங்கள், திரிந்தவடிவமான எங்கள், நம் ஆகியவை வழக்கிலுள்ளன. முன்னிலை ஒருமை எழுவாயில் நீ/நி அல்லது நீன்/நின், திரிந்தவடிவம் உன், பன்மையில் நீர்/(நீயிர்) (நீவிர்) அல்லது நீங்கள், திரிந்த வடிவங்களாக உங்கள் (உம்) ஆகியவை உள்ளன. படர்க்கையில் ஆண்பால் அவன், பெண்பால் அவள், அஃறிணை ஒன்றன்பால் அது, பலவின்பால் அவை என வழங்குகின்றன. பலர்பால் பன்மை அவர் என்பதாகும். வினையில் தன்மை ஒருமையில் -என், பன்மையில்-ஓம், முன்னிலை ஒருமையில்-ஆய், பன்மையில்-ஈர், உயர்திணைப் படர்க்கை ஆண்பால் ஒருமை-அன், பெண்பால் - அள், பலர்பால் - அர் எனவும்; அஃறிணை ஒன்றன்பாலில் -துவும், பலவின்பாலில் அ அல்லது ஐ (வ)யும் விகுதிகளாகும். மகளிர், கேளிர், வேளிர் போன்ற சில சொற்களில் பன்மையை உணர்த்த இர் வருகிறது.

## நடுத்திராவிடம் – தெலுங்கு மொழி

தெலுங்கு மொழியில் தன்மை ஒருமை ஏனுவாக உள்ளது. அதன் வேற்றுமைத் திரிபு வடிவம் நா. வினைமுற்றில் தன்மை ஒருமைக்குக் குறிப்பிட்ட உயிரெழுத்து எதுவும் விகுதியாக இல்லை. வினை விகுதியாக ந் அல்லது நு உள்ளது. தன்மைப்பன்மை ஏனுவாகவும் அதன் வேற்றுமைத் திரிபு வடிவம் மா வாகவும் உள்ளன. வினைமுற்று விகுதி மு வாகும். தெலுங்கு மொழியில் தன்மைவடிவம் ஏமு, உளப்பாட்டு வடிவம் மனமு வாகும். எழுவாய் ஒருமை ஈவு / நீவு எனவும் அதன் வேற்றுமைத் திரிபு வடிவம் நீ எனவும் வினைவிகுதி வு அல்லது வி எனவும் வரும். முன்னிலைப்பன்மைப் பெயர் இருவாகும். அதன் வினைவிகுதி -ரு ஆகும். உயர்திணைப் படர்க்கைப் பன்மைப்பெயர் வாரு. அஃறிணை விகுதி-அவி யாகும். வினைவிகுதி-வு/வி ஆகும். இங்கு முன்னிலைப் பன்மையிலும், படர்க்கைப்பன்மையிலும் ஒரே விகுதி உள்ளதைக் காண்கிறோம். பின்னிலை ஒருமையும், படர்க்கை அஃறிணைப்பன்மையும் ஒரே விகுதியைப் பெற்றுள்ளன. வி/வு உண்மையான இடுகுறியாக்கம் அல்லது குறிப்பிட்ட இயைபு இருப்பதாகக் கூறுவது கடினம். இவ்விகுதிகள் தெளிவாகப் பொருந்தாத போதிலும் எப்படியோ பெயர்ப்பதிலிகளின் இயைபில்லாத விகுதிகளுடனும் பொருத்தம் பெற்றுள்ளன

## வடதிராவிடம் – பிராகூய் மொழி

ஈராக், பலுசிஸ்தான், பாகிஸ்தானின் வடபகுதிகளில் பழங்குடியினரால் பேசப்படும் மலைவாழ் மக்களின்மொழி

பிராகூய்மொழி. பிராகூய்மொழியில் தன்மை ஒருமை ஈ. வேற்றுமைத்திரிபு வடிவம் கன். தன்மை ஒருமை விகுதி இவ். முன்னிலை ஒருமை விகுதி இஸ்படர்க்கை விகுதி தேன் ஆகவும், அதன் விகுதி எ ஆகவும் உள்ளன. தன்மைப் பன்மை எழுவாய் நன் ஆகவும், அதன் விகுதி இன் ஆகவும் உள்ளன. முன்னிலை எழுவாய் நும் ஆகவும் அதன் விகுதி ஐ அல்லது இ(ர்)/இரெ ஆகும். முன்னிலைப் பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்கும் ஒரே விகுதி கு உள்ளது குறிப்பிடத்தக்கது. இவ், இஸ் இரண்டும் தொடக்ககாலத்தில் இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தில் இருந்திருக்கலாம் என்று ஜூல்ஸ் பிளாக் கருதுகிறார். குருக் மொழியில் காணப்படும் பால் பாகுபாட்டுக் கூறுகள் மூலதிராவிட மொழிக்கு உரியதாகக் கொள்ள முடியாது. இந்த இரண்டு வடதிராவிட மொழிகளில் காணப்படும் கூறுகளை மூலதிராவிட மொழிக்குக் கொண்டு செல்ல இயலாது. ஆனால் பிராகூய் மொழியில் உள்ள - அர் பன்மை, அஸ் ஒருமையாக இருப்பதால் அர் மட்டும் தமிழில் உள்ள செய்யியர் போன்றவற்றில் உள்ள அர் விகுதியுடன் ஒப்பிடமுடிகிறது. முண்டா மொழியோடு கொண்டிருந்த தொடர்பினாலேயே பால்விகுதிகள் இம்மொழிகளில் வளர்ச்சி பெற்றன என்று ஜூல்ஸ் பிளாக் கூறுகிறார்.

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் திராவிட மொழிகளை ஒப்பிட்டுப் பால்வளர்ச்சி பற்றி கூறியுள்ள முடிவு ஆழ்ந்த ஆராய்ச்சியின் அடிப்படையிலாகும். தென்திராவிட மொழியான மலையாளத்தில் வினை முற்றுக்கள் பால் பாகுபாட்டினைக் காட்டவில்லை என்றாலும் பெயர்கள் ஐந்து வகை பால் அமைப்பை வேறுபடுத்திக் காட்டுகின்றன. பிராகூய் மொழியில் இப்பால் பாகுபாடு இல்லை. இரானிய மொழி பிராகூய் மொழி வழங்கு மிடத்தைச் சுற்றி வழங்கப்படுவதால் அதன் தாக்கம் ஏற்பட்டிருக்கக்கூடும். தமிழ், கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் மட்டுமே இந்த ஐந்துவகைப் பால்பாகுபாடு வளர்ச்சியடைந்துள்ளது. நடுத்திராவிடமொழியான கோண்டியில் உயர்திணை அஃறிணைகட்கும் இடையே வேறுபாடு காணமுடிகிறது. அங்கும் ஆண்பால், ஆண்பால் அல்லாதன என்ற பாகுபாடே உள்ளது. தெலுங்கில் மட்டும் பெண்பால் பன்மை உயர்திணையில் உள்ளது; ஒருமை ஆண்பால் அல்லாத அஃறிணையுடன் சேர்க்கப்பட்டுள்ளது. குயி மொழியோடும் ஒப்பிடும்பொழுது இத்தகைய பாகுபாட்டைக் காணலாம்.

திராவிட மொழிகளில் பால்பாகுபாட்டின் வளர்ச்சியைப் பற்றிப் பல நிலைகள் உள்ளன. அவை முறையே முதல் நிலையில்

ஒருமை, பன்மை மட்டுமே. இதில் உயர்திணை அஃறிணைகளுக்கும் கூட வேறுபாடில்லை. ஆனால் மனித இனப்பன்மைக்கும், பிற பன்மைக்கும் வேறுபாடு உருவாகத் தொடங்கியது. பிராகூய் மொழியில் SK உயர்திணை, -K உயர்திணை அல்லாத பன்மைக்கும் விகுதியாக இருந்தன. இரண்டாவது நிலையில் ஆண்பாலுக்கும், ஆண்பால் அல்லாதவற்றுக்கும் வேறுபாடு உருவானது. இதனைக் குருக் மொழியில் காணலாம்.

மூன்றாவது நிலையில் அஃறிணைப் பன்மையிலிருந்து பெண்பால் பன்மை தனித்து உருவானது. ஆண்பால் பன்மை அர், பெண்பால் பன்மை ஐ என வேறுபடுத்தப்பட்டது. நான்காம் நிலையில் தெலுங்கில் உள்ளது போல பெண்பால்பன்மை ஆண்பால் பன்மையுடன் சேர்ந்தது. அடுத்த ஐந்தாம் நிலையில் தான் முழுமையாக வளர்ச்சி பெற்ற பாகுபாட்டினைத் தமிழ் போன்ற மொழிகளில் காணமுடிகிறது. உயர்திணை ஆண்பால் ஒருமை, பெண்பால் ஒருமை, பொதுப்பன்மை, அஃறிணை, ஒருமை, பன்மை என ஐந்துபால்பாகுபாடு காணக்கிடைக்கிறது. தற்காலப் பேச்சுத் தமிழில் புதியதாக ஆண்பால் பன்மை, பெண்பால் பன்மை உருவாகியுள்ளன.

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள், திராவிட மொழிகளின் செல்வாக்கு எந்த அளவு இந்திய மொழிகளில் பரவி இருந்தது என்பது பற்றி விளக்கமாக எழுதியுள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் திராவிடமொழிகள் ஒரு தனிக்குடும்பம் என்று கருதப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியின் சென்னை பிரிவின் இயக்குநராக இருந்த எம்.டபிள்யூ.எல்லிஸ் முதன் முதலாக, திராவிட மொழிகள் தனிக்குடும்பம், வடமொழியினின்றும் வேறுபட்டது என்று கூறினார். வடக்கில் பலுசிஸ்தானம் முதல் தெற்கில் கன்னியாகுமரி வரை திராவிடமொழிகள் பரவியிருந்ததாக அறிய முடிகிறது. டாக்டர் கால்டுவெல் இக்கொள்கையை வலியுறுத்தி ஒப்பிலக்கணம் வெளியிட்டார். பின்னர், எம்.பி.எமனோ, டாக்டர் டி.பர்ரோ ஆகியோர் உருவாக்கிய முறையைப் பின்பற்றி, திராவிட மொழிகளின் வேர்ச்சொற்களிலிருந்துதான் இன்றைய திராவிடச் சொற்கள் உருவாகியுள்ளன என்றும், வடமொழி வேர்ச் சொற்களிலிருந்து பெறப்படவில்லை என்பதையும் உணரமுடிந்தது.

இந்தோ -ஐரோப்பிய வேர்ச்சொற்கள் இவைகட்கு இணையாக இல்லை என்பதையும் தெளிவுபடுத்தினார். இந்தோ-ஆரிய மொழிகள் தனிக்குடும்பமாக ஏற்றுக்

கொள்ளப்பட்டாலும், இந்தியாவில் இந்த இருமொழியாளர்களும் (திராவிடம் & ஆரியம்) ஆரம்பக் காலத்திலிருந்தே அடுத்தடுத்து வாழநேரிட்டதால், பண்பாட்டுக் கலப்பு ஏற்பட்டு மொழியில் பலசொற்கள் கடனாளப்பட்டன.

சமஸ்கிருதமொழியில் நாமடி ஒலிகள் மிகச்சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. ஆனால் மூல இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் நாமடி ஒலிகள் இல்லை. திராவிட மொழிகளில் நாமடி ஒலிகள் சிறந்து விளங்குவன. அதன் தாக்கத்தினால் சமஸ்கிருத மொழியிலும் அவை சென்று வழங்கலாயின. தற்காலத்தில் இந்தோ ஆரிய மொழிகளில் இத்தாக்கத்தை மிகப்பரவலாகக் காணலாம்.

மூன்றாவது கட்டுரை, மொழியில் காணப்படும் சமுதாயப்பாகுபாடுகள் என்பதாகும். மொழியும் சமுதாயமும் இணைந்தே செயல்படும் தன்மையுடையன; ஒரு மொழி அதுபேசப்படும் சமுதாயத்தை நன்கு வெளிப்படுத்தும் என்ற உண்மையை எடுத்துக்காட்டி, புதியதோர் ஆய்வு அணுகுமுறைக்கு வித்திட்டார் எனலாம். குறிப்பாக, சமுதாயத்தில் பெண்களின் நிலை என்ன, அது இலக்கணத்திலும் எவ்வாறு வெளிப்பட்டுள்ளது என்பதைக்காட்ட எடுத்துக் கொண்ட முயற்சி எனலாம்.

சமுதாயம், பலதட்டுகளையும், வயது வேறுபாடு, அதிகாரம், செல்வம், கல்வி, வாழுமிடம் என பலவற்றின் அடிப்படையில் வேறுபடும். இவை அனைத்தும் மொழியிலும் வெளிப்படும் என்பதை வெளிப்படுத்தினார். இன்றைய இருபதாம் நூற்றாண்டுத் தமிழில் அயல்நாட்டு மொழிகளின் ஆதிக்கமானது இப்பாகுபாடுகளில் எவ்வாறு உள்ளன என்றும், குடியாட்சியில் இவை படிப்படியாகக் குறைந்து வெளியேற்றப்பட்டு வருகின்றன என்பதையும் தெள்ளத் தெளிவாகக் காட்டினார். இது அவருடைய, சமுதாய மறுமலர்ச்சி ஏற்பட்டு ஏழைபணக்கார இடைவெளி குறைந்து மக்கள் ஜாதிமத பேதமற்று மனிதாபிமானத்தோடு வாழ வேண்டும் என்ற உட்கிடக்கையை நமக்கு உணர்த்துகிறது. அடுத்த கட்டுரையில் மகாகவி பாரதியாரின் கவிதையில் பேச்சுத்தமிழில் உள்ள சொல்லாடல்கள் போற்றப்பட்டுள்ள விதத்தையும் கற்றோர் பாராட்டும் செம்மை மொழி, பாமரனால் பேசப்படும் வழக்கு மொழி என இரண்டு வகை நடையையும் எடுத்துக்காட்டி, பாரதி ஒரு பொதுமக்களின் கவிஞன் என்று கூறுகிறார். இவ்வாறாக இக்கட்டுரைத் தொகுப்பு, பேராசிரியர் பல்வேறு காலக் கட்டத்தில் எழுதிய மொழியியற் கட்டுரைகளைக் கொண்ட நூலாக

வெளிவந்து, அவர் கொண்ட மொழியியல் சார்ந்த கருத்துகளை மாணவர்கட்கும், தமிழியல் அறிஞர்கட்கும் தருகிறது.

தமிழ் ஒலிகள் எனும் எம்.ஓ.எல். ஆய்வேட்டினைத் தயாரித்தளித்தார். அதனைக் கண்ணுற்ற தேர்வாளர்கள், மிகச் சிறந்த மொழியியல்சார் ஆய்வுக்கட்டுரை என அதனைப் பாராட்டினர். அவருடைய மொழியியல் அணுகுமுறையில் தமிழ் மொழியின் ஒலிகளை ஆராய்ந்து, தொன்று தொட்டு வரும் தொல்காப்பியர் கண்ட ஒலிப்புமுறைக்கும், தற்காலப் பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு, அதனை வாய்விட்டுப் படிக்கும் பொழுது உச்சரிக்கப்படுகின்ற முறை என அறிவியல் பூர்வமாக ஆராய்ந்துள்ளார். அதுவே அவரின் நுண்மாண்நுழை புல அறிவுக்குச்சான்றாக விளங்குகிறது.

முனைவர் க.த. திருநாவுக்கரசு அவர்கள், "தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல்" என்ற நூலில் பேராசிரியரின் மொழியியல் நூல்கள் 8 என்றும், நூற்றுக்குக் குறையாத மொழியியல் கட்டுரைகள், அவரால் பல்வேறு இதழ்களுக்கும் மலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

1956ஆம் ஆண்டு அமெரிக்க ஃபோர்டு நிறுவனத்தின் சார்பில் புனே தக்காணக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனம் மொழியியல் கோடை குளிர்கால வகுப்புகளை இந்தியாவில் தொடங்கியது. பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் அதில் பேரார்வத்தோடு சேர்ந்து எம்.பி. எமனோ, முனைவர் டி. பர்ரோ, முனைவர் கிளீசன், முனைவர் நைடா, முனைவர் யாக்கோப்சன், முனைவர் சுநித்குமார் சாட்டர்ஜி போன்ற அறிஞர்களிடம் மொழியியலைக்கற்றார். அந்த ஆண்டின் குளிர்கால மொழியியல் வகுப்பு புனேயிலேயே நடந்தது. அங்குத் திராவிட மொழிகளின் வரலாற்று மொழியியல் பகுதிக்குப் பேராசிரியராக, தெ.பொ.மீ. அவர்கள் நியமிக்கப்பட்டது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். கோடையில் மாணவர், குளிர்காலப் பயிற்சி வகுப்பில் அவரே ஆசிரியருமானார் என்றால் பேராசிரியரின் அறிவுத்திறனை, புனே ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநரான டாக்டர் கத்ரே நன்கு அறிந்து கொண்டார் என்பதே சிறப்பான செய்தியாகும்.

1958ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார் தமிழ்க்கலைத்துறைத் தலைவராக இவரை நியமித்தார்கள்; அத்தோடு தமிழ்நீங்கிய திராவிட மொழித்துறை என்று இயங்கிய புதியதுறைக்கும் தலைவராக ஆக்கினார்கள். அது அப்போது

ஆய்வுத்துறையாக மட்டும் இருந்தது. 1959இல் அவருடைய முயற்சியால் கோவை பூ.சா.கோ.கலைக்கல்லூரியில் கோடை மொழியியல் வகுப்பு நடைபெற்றது. அமெரிக்கப் பேராசிரியர் எம்பி. எமனோ அவர்கள் கோவைப்பள்ளியில் கலந்து கொண்டார். அவரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு அழைத்து வந்து சொற்பொழிவு ஆற்றும்படி, தெ.பொ.மீ. அவர்கள் செய்தார். அந்தக்கால கட்டத்தில்தான், தமிழ்நீங்கிய திராவிட மொழித்துறை கற்பிக்கும் துறையாக மாற்றப்பட்டு, சான்றிதழ், பட்டயம் வகுப்புகள் தொடங்கப்பட்டன. இத்னைப் பேராசிரியர் செ.வை. சண்முகனார்[14] தம் சொற்பொழிவில் குறிப்பிட்டுள்ளார். 1960ஆம் ஆண்டு முழுநேர முதுகலைப்பட்ட வகுப்பு தொடங்கப்பட்டது. அந்த வகுப்பில் மாணவனாகச் சேரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

தமிழர்கள் அண்டைமொழிகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகியவற்றில் நாட்டம் கொள்ளாதிருப்பதை அவர் கண்டித்தார். இந்தி என்ற சொல்லே அவர்களில் பலருக்கு வேம்பாகக் கசந்த காலத்தும் அதனை அறிந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். "தமிழன்றி வேறொரு மொழியும் வேண்டாம்" என்ற கருத்துப் போலத் தமிழினைக் கொலை செய்யும் படை வேறொன்றுமில்லை. தமிழ்மொழி விருந்திலும் தமிழ்ப் பெருஞ்சோற்றோடு பிறமொழிக் கறியமுதுகளும் வேண்டும் அன்றோ?" என்று தெ.பொ.மீ. அவர்கள் வினா எழுப்பினார். ஆங்கிலம் உலகைப்பார்க்க நமக்குக் கண்ணாகவும் விஞ்ஞானத்தின் குரலாகவும் இருப்பதால் அதனைப் புறக்கணித்தல் தமிழருக்குக்கேடு பயக்கும் என்பதையும் தமிழ் வளர்ச்சிக்கு ஆங்கிலம் துணை செய்யும் என்பதையும் எடுத்தியம்பினார்.

சங்க காலத்தில் தமிழ் இலக்கியம் ஒரு பெரும் பண்பாட்டுச் சிறப்பை உள்ளடக்கியுள்ளதற்குத் துணையாக அமைந்தவை சைவ, புத்த சமயங்கள் வழியாக வடநாட்டோடும், வாணிபம் மூலமாக மேலை நாடுகளோடும் கீழைத் தீவுகளோடும் தமிழகம் கொண்ட தொடர்புகளேயாகும். பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் தமிழகத்திலிருந்த வடமொழிப் பண்டிதர்களோடும் போராடவேண்டியிருந்தது. அம்மொழியே அவர்களது தாய்மொழியெனப் பாவித்துக்கொண்டு அவர்கள் பழந்தமிழ் நூல்கள் யாவும் சமஸ்கிருத நூல்களின் மொழிபெயர்ப்புகள் என வாதிட்டனர். அந்தணர், அந்தணரல்லாதார் ஆகிய இரு

---

14. தெ.பொ.மீ. ஒரு பன்முகப்பார்வை, செ.வை. சண்முகம், ப.8, 2000.

குழுக்களுக்கும் இடையே தமிழகத்தில் அரசியல், சமுதாயத் துறைகளில் ஏற்பட்ட மோதல்கள் இலக்கியத்திறனாய்விலும் குறிப்பாகக் கம்பராமாயணம், திருக்குறள் ஆகிய நூல்கள் பற்றிய விவாதங்களிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின. இந்தியப் பண்பாடு பற்றிய உண்மைகளை அறியாதவரே ஆரிய, திராவிட வேறுபாடுகள் பற்றியும் வடமொழி, தென்மொழி ஆகியவற்றின் உயர்வு, தாழ்வுகள் பற்றியும் வீண்பேச்சுகளில் காலம் கழித்தனர். பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் காய்தல் உவத்தல் இன்றி நடுநிலையாளராக இருந்து தம் பன்மொழிப்புலமையினாலும், ஆழ்ந்தகன்ற புலமையினாலும் சமஸ்கிருதமும் தமிழும் ஒன்றோடொன்று நீண்டகாலத் தொடர்பு கொண்டு ஒருங்கே வளர்ந்ததையும், அவைகட்கு இடையில் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல்களையும் பல சான்றுகள் மூலம் விளக்கினார்.

வடஇந்தியாவின் ஆரிய நாகரிகம் என்று சொல்லப்படுவது இந்தியாவில் வாழ்ந்த பல இனத்தவர்களின் பண்பாட்டுக் கலப்பென்றும், இதில் இப்பொழுது ஆரியம் திராவிடம் என்று பகுத்துப்பார்க்க முயல்வது இயலாத காரியம் என்றும் விளக்கியுள்ளார். இத்தகைய சிக்கல்களில் எல்லாம் நடுநிலை வகித்துத் தமக்கு உண்மையென்று பட்டதை அஞ்சாமல் எடுத்துரைத்ததால், தெ.பொ.மீ. அவர்கள் இருசாராருக்கும் வேண்டப்படாதவர் ஆனார். ஆனாலும் அவர் அவைகளைப் பொருட்படுத்தாமல் தம் கடமையைச் செய்தார்.

'இலக்கியமரபு' என்ற பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் கட்டுரைக் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது. தமிழ் யாப்பிலக்கணக் கூறுகள் சிலவற்றை ஆராய்ந்து அவற்றுள் விருத்தம் எனும் தமிழ்ப்பாவகை வடமொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டதென்ற கருத்தைத் தக்க ஆதாரங்களுடன் மறுத்துள்ளார்.

அவரது சிறந்த ஆய்வுக் கண்டு பிடிப்புகளில் சில தமிழுக்கும் ஏனைய திராவிட மொழிகளுக்கும் உள்ள இலக்கிய உறவுகள் பற்றித் தெரிவிக்கின்றன. கன்னடக்கவிஞர் ஒருவரின் மலையாள மொழியிலுள்ள கீதை, பட்டரது தமிழ்மொழிபெயர்ப்பின் தழுவலே என்று குறிப்பிடுகிறார். கிருஷ்ணதேவராயரின் தெலுங்கு நூலான ஆமுக்த மால்யா, சூடிக்கொடுத்த நாச்சியாரான ஆண்டாளின் வரலாறேயாகும். பரந்து விரிந்த ஆய்வின் மூலம் தமிழ் நாயன்மார்களின் கதைகள், கன்னடம், தெலுங்கு, மராத்தி மொழிகளில் மறைந்து கிடப்பதையும்

அவற்றின் பல மாறுபாடுகளையும் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் தெளிவாக்கியுள்ளார்.

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் தற்காலப் பேச்சுத்தமிழில் காணப்பெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க வழக்குகளையும் கேட்டு அதனை ஆராய்ந்து அவ்வழக்குகளின் சிறப்பை வெளியிட்டுள்ளார். தமிழ் இலக்கணப்புலவர்கள் 'சொல் எச்சம்' என ஒன்று கூறுகிறார்கள். அதற்கான எடுத்துக்காட்டினை இக்காலத் தமிழிலிருப்பதை நமக்கு எடுத்துக்காட்டியுள்ளார். எச்சம் இரண்டு வகைப்படும். ஒன்று, ஒரு வாக்கியத்தில் ஏதேனும் ஒரு சொல் தொக்கி நிற்குமானால் அதனைச் சொல் எச்சம் என்பர். ஆனால் மற்றொரு கொள்கைப்படி 'சொல்' என்ற குறிப்பிட்ட சொல்மட்டும் தொக்கி நிற்பதுதான் சொல் எச்சமாம். 'என்று' என்பது மேற்கோளைக் காட்டுவதற்கு வரும் இடைச்சொல். ஆனால் வினை முற்றான 'என்றான், என்பாள், என்றேன்' முதலியவை நாளடைவில் 'அவன் சொன்னான், அவள் சொன்னாள், நான் சொன்னேன்' என்ற பொருளில் மேற்கோளை அடுத்து வரக்காண்கிறோம். எனவே இந்த இடங்களில் எல்லாம் 'என்றான்', 'என்றாள்' முதலியன 'என்று சொன்னான்' முதலாகப் பொருள்பட்டு வருவதால் இங்கெல்லாம் 'சொல்' என்ற சொல் எஞ்சிநிற்கிறது. 'என்றான்' முதலியவற்றில் என் என்பது வினை முதலையும் 'ற்' என்பது இறந்த காலத்தையும் காட்டும். சென்ற இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட வழக்கின் காரணமாக 'என்' என்பது 'சொல்' என்ற பொருளில் வழங்க வந்து விட்டது. இந்த வரலாற்றின்படி மற்றைய சொற்கள் போலல்லாமல் 'என்' என்பது கருத்தியலான பிழிவுப் பொருளைப் (abstract) பொதுவினைப் பொருளாகக் குறிக்க வருகிறது. அது என்ன? ஆங்கிலத்தில் அத்தகைய பொதுவினை 'tell' என்பதாகலாம் என மெக்காலே கருதுகிறார். ஆனால், நல்லகாலமாகத் தமிழில் 'கூறு' 'இயம்பு' 'சொல்' 'உரை' முதலிய எல்லா வினைகளுக்கும் பொதுவான பொதுவினையாக 'என்' பகுதி வந்துள்ளது. எனவே குறிப்பிட்டதொரு நிரப்பாக்கி ஆகிய 'என்று' என்பதன் வழியாக 'என்' என்ற ஒரு வினைப் பகுதியே மேலே கூறிய மூன்று இயல்புகளின் கூட்டு நிலையைச் சுட்டுவதற்கு ஏற்ற பகுதியாக வேறுமொழியில் இல்லாத அளவு வளர்ந்துள்ளது.[15]

---

15. மொழியியல் விளையாட்டுக்கள், தெ.பொ.மீனாட்சி சுந்தரன், ப.80, மதுரை.

'ஏங்க்றேன்' என்பது 'என்கிறேன்' என்பதன் மரூஉ. 'என்' என்பது வினைப்பகுதி, 'க்ற்' என்பது நிகழ்காலத்தைக் காட்டுகிறது. 'ஏ(ன்)' என்பது 'நான்' என்பதைக் குறிக்கும். காலஞ்சென்ற பாரத ரத்தினம் காமராஜ் அவர்கள் பேசிய வட்டார வழக்கில் 'எங்க்றேன்' என்பது பிறவட்டார வழக்கில் போலல்லாமல் பெரும்பான்மையும் ஒவ்வொரு வாக்கியத்தின் பின்னும் வரும். "என்னாங்கறே(ன்)", "வந்தாருங்கறே(ன்)" இதை நோக்கும்போது எல்லா வாக்கியங்களின் கடைசியிலும் ராஸ் கூறுவது போல 'என்கிறேன்' என்ற சொல் ஆழ்நிலை அமைப்பில் (Deepstructure) இருக்கத்தான் செய்கிறது என்று கூறவேண்டும். 'I tell you' என்பது எல்லா வாக்கியங்களிலும் ஆழ்நிலை அமைப்பில் வருகிறது என ராஸ் கூறுகிறார்.

இதற்கேற்பத் தமிழ் வழக்கில் ஒன்றைக் காணலாம். சில வட்டார வழக்குகளில் 'உங்களதா(ன்)' என்பது ஒவ்வொரு வாக்கியத்தின் முன்னும் வரக் காண்கிறோம். இது "உங்களைத்தா(ன்) எங்க்றே(ன்)" என்பதன் குறுக்கமே என்று கூறி, ராஸ் அவர்களின் கொள்கைக்குத் தமிழிலும் சான்று கிடைப்பதைக் காணலாம். மொழியியலில் 'சொல்' ஓர் ஒலியியல்-உருபனியல் அலகு. சொல் என்பதை விளக்குவது கடினம் என்றாலும் உலக முழுவதும் இது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் சொல்லின் தன்னுரிமை அல்லது சப்தம் பழங்காலத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. 'சப்த ஸ்போதவாத' (Sabda Sphodavāda) தத்துவ வாதிகளால் செய்யப்பட்ட அதன் திறனாய்வும் மொழியியல் அலகாகச் சொல்லை இந்தியாவில் ஏற்றுக் கொள்ளும்படி செய்தது. சொல்லை உருவாக்கும் ஒலிகள் ஆராயப்பட்டன. பொருள்தரும் உறவுடன் வரும் தொடரும், சொற்றொடரும் ஒன்று சேர்ந்த சொற்களால் வருவனவேயாகும். எனவே தத்துவ வாதிகள் மொழியியல் ஆய்வில் இன்றியமையாத இடம் சொல்லுக்கு உள்ளதாகக் கருதினர். தமிழ் இலக்கணத்தில் சொல்லதிகாரம் இன்றியமையாத பகுதியாகும். கடைசியில் சந்திவிதிகள் இருக்கும். ஒலிகளைப்பற்றிய ஆய்வே எழுத்ததிகாரத்தின் நோக்கமாகும். பேச்சு வழக்கில் ஒலியியல் மாறுதல்களைப் பெற்றாலும் சொற்களை இனங்காண்பதற்காகவே மேற்கூறியவற்றை விரிவாக விளக்கியிருக்கின்றனர்.

பழைய எழுதுமுறையில் சொற்களைப் பிரிக்காமல் எழுதப்பட்டிருந்தாலும், தமிழர்க்கு அவை தெளிவாக இருந்தன. 'சொல்விளக்கு' என்று சொல்லைப்பற்றிப் பேசினர். கவிஞர்களைச் 'சொல்லேர் உழவர்கள்' என்று வருணித்தனர். சொற்களின்

வண்ணங்களைப் பற்றியும் பேசினர். எளிய அல்லது வண்ணமில்லாச் சொற்கள் வெள்ளைச் சொற்கள் என்றும், அருஞ்சொற்கள் கருப்புச் சொற்கள் என்றும் கருதப்பட்டன. சரியானதும், பொருள் வாய்ந்ததும் அல்லது ஏற்புடையதுமாகிய சொற்கள் சிவப்பானவை. இவை முழுமாயச் சக்தி கொண்ட மந்திரச் சொற்களாகக் கருதப்பட்டன. சமுதாயத்தில் பல்வேறு தொழில்களை மக்கள் செய்து வந்தனர். தொழில் அடிப்படையில் பல சொற்கள் வழங்கின. திருடர்கள் 'பறி' என்று பொன்னை அழைப்பர். அது பறிக்கப்பட்டது என்ற பொருளைத்தரும். வணிகர்களும், வாடிக்கையாளர் புரிந்து கொள்ளாதவாறு எண்ணை மாற்று வடிவில் கூறுவார்கள். நான்கு ரூபாய் என்பதை வேத வெள்ளை என்பர். இங்கு வேதம், நான்கு என்பதனையும், வெள்ளை ரூபாய் என்பதனையும் குறிக்கும்.

ஒலியனில் சொல்லை ஆராய்வது எழுத்து. எழுத்து ஓரெழுத்து மட்டுமல்லாது ஓரசையையும் குறிக்கும். சொல்லில் அடிப்படை ஒலிகள்-ஒலியன்கள் மாற்றத்திற்குள்ளாகின்றன. ஒலியனில் சொல்லின் தெளிவான மேற்சார்பே ஒலியியல் சொல்லாகும். இது மிகவும் இன்றியமையாததாகும். ஏனெனில் மொழியின் பொருளே ஒலியாகும். பேச்சொலி அமைப்பைக் குறிக்க அடையாளமாகச் சொல் மொழியை வரையறுக்கவேண்டும். உருபனியல் நோக்கில் சொல்லைக் காண்போமானால் சொல் பெறும் மாற்றங்களை முதலில் காண்போம். அடிச்சொல் கோட்பாடு ஒன்று உண்டு. அடிச்சொல் வடிவத்தில் ஏற்படும் மாற்றங்களை விளக்கவே சந்திவிதிகள் உள்ளன.

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் தமிழ்மொழியையும் அது வழங்கும் தமிழ்ச் சமுதாயத்தையும் எப்பொழுதும் இணைத்துப் பார்ப்பதில் பெருமிதம் கொள்வார். மொழி எவ்வாறு அம்மக்களைச் சார்ந்து வழங்குகிறது என்பதை ஆராய்ந்துள்ளார். அவருடைய சமுதாய மொழியியல் கூற்று, உணர்ந்து பாராட்டப்படும் என்பதில் ஐயமில்லை.

எந்த ஒரு சொல்லும் தனக்கே உரிய ஒரு பொருளைச் சுட்டுவதோடு, வழக்கில் வேறு பொருளையும் தெரிவிப்பதாக உள்ளது. ஒரு சொல்லை ஒருவர் பேசும்பொழுது, அவருடைய குரல் ஓசையிலிருந்து அவர் நமக்கு முன்னரே தெரிந்தவரா அல்லது புதியவரா என்பது விளங்கும். பேசுவோரைக் குரல் மூலம் இனங்கண்டு கொள்ள முடியும். அதுபோன்றே பேசுபவரின் வட்டாரம் மற்றும் சமுதாயநிலை, கல்வியறிவு போன்ற

பிறவற்றையும் உணரமுடியும். வட்டாரக்கிளை மொழி அமைப்பின்படி பேசுகின்றவர் மதுரையிலிருந்து வருகின்றவரா, கோவைக்காரரா, அல்லது திருநெல்வேலி மாவட்டக்காரரா என்பதை அவர் உச்சரிப்பு எடுத்துக்காட்டும். பேசப்படுவது சமுதாயக் கிளை மொழியாகவோ தொழில் சார் கிளை மொழியாகவோ இருந்தால் சொற்கள் உச்சரிக்கப்படும் முறையிலிருந்தும் வடிவத்திலிருந்தும் இனம் காண முடியும். 'வாழைப்பழம்' என்ற சொல் வாயபயம் என்பது சென்னை அடித்தட்டு மக்கள் வழக்கு. 'இருக்கிறது' என்ற சொல் 'கீது' என்பது வட ஆர்க்காடு மாவட்ட வழக்கு. 'சாமான்' என்ற சொல் 'ஜாமான்' என்பது மதுரைக்கிளை மொழி வழக்காகும்.

கோவை மாவட்டத்தில் 'சொல்லிப் போடுங்கோ' என்பது சொல்லிவிடுங்கள் என்பதற்கு இணையாகும். 'சோறு' (Sōru) என்பதற்குப்பதிலாக cōru என்று வழங்கப்பட்டால் அது அடித்தட்டுப் பேச்சாகும். தாயின் சகோதரனின் மகனைக் குறிக்க பிராமணர் தமிழில் 'அம்மாஞ்சி' (அம்மான்சேய்) என்ற சொல் வழங்குகிறது. இதனால் பிராமணர் தமிழ்கூட அம்மாஞ்சித் தமிழ் என்ற குறியீட்டைப் பெறுகிறது. இவ்வெடுத்துகாட்டுகள் மூலம் சொற்களின் வடிவங்கள், அவைகளின் பொருள்கள் ஆகியன பேசுகின்றவரே உணராதநிலையிலும் கூட அவருடைய வட்டாரம், சமுதாயநிலை ஆகியவற்றை விளக்கும் குறியீடுகளாக அவை உள்ளன. பேசுகின்றவரே உணர்ந்து, வேண்டுமென்றே அக்குறியீடுகளைத்தம் பேச்சில் பயன்படுத்துவதன் மூலம், தான் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்பதை வெளிப்படுத்திக் கொள்ளும் விதமாக இருந்தால் அவை குழூஉக் குறியாக அமைகிறது. இவற்றையே பண்டைத்தமிழ் இலக்கண ஆசிரியர்கள் குழூஉக்குறி என்றனர். இவை அச்சமுதாயத்திற்கும் கட்டமைப்பிற்கும் உறுதுணையாக உள்ளன. எடுத்துக்காட்டாகக் கொள்ளைக் கூட்டத்தினர் 'பறி' என பறிக்கப்படுதலால் தங்கத்தைக் குறித்தனர். வியாபரிகள் ஒரு ரூபாய் என்பதை 'மதிவெள்ளை' என்று பிறர் அறியாதபடி கூறினர். இத்தகைய சொற்கள் அவை வழங்கும் குழுவினரைத்தவிர ஏனையோருக்கு விளங்காது. மொழியில் இத்தகைய கூறுகள் சமுதாய மொழியியலின் இயல்பினைக் காட்டுகின்றன.

மொழியியல் கூறுகளில் மாற்றங்கள் ஏற்படுவது அதிகமாகவோ குறைந்தோ உலக மொழிகளில் எல்லாம் காணக்கூடியதாகும். ஆனால், தமிழில் அநேகமாக இந்திய மொழிகள் பலவற்றிலும் இத்தகைய புதிய மாற்றம்

தோன்றியிருக்கிறது. சமுதாயத்தில் தோன்றிய மாற்றங்களும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். இங்கு நான் (தெ.பொ.மீ.) திராவிட மொழிகளின் பால்-பகுப்பில் தோன்றிய மாற்றத்தினைப் பற்றிய வரலாற்றினைக் குறிப்பிடவில்லை. எடுத்துக்காட்டாக, முதன் முதலில் பால்-பகுப்பு ஆண்பால் சொற்கள், ஆண்பால் அல்லாத சொற்கள் என்ற அளவிலேயே இருந்ததாகத் தோன்றுகிறது. இரண்டாம் வகை சொல்வகையில் உயிரினச்சொற்கள், உயிரனமல்லாத சொற்கள் என்று பிரிக்கப்பட்டு அவற்றுடன் பெண்களைக் குறிக்கும் சொற்களையும் சேர்த்தனர். காலப்போக்கில் குழந்தைகளும் மற்றவர்களும், தத்தம் பெற்றோர்களைப்பற்றியோ அல்லது குடும்ப உறுப்பினர்களைப் பற்றியோ பன்மையில் பேசும்பொழுது ஆண்பால் பன்மையைப் பயன்படுத்தியதால் பெண்களையும் உள்ளடக்க வேண்டியதாயிற்று. பின்னர், தாயைக் குறிக்கும் சொல் இதர உயிரினச் சொற்கள், உயிரினமல்லாத சொற்கள் என்று பிரிக்கப்பட்ட பொழுது, பெண்பால் ஒருமை தோன்ற வழிவகுத்தது. ஆயினும் இக்கட்டுரை பால்-பகுப்பு வளர்ச்சியோடு கூடிய வரலாறு அல்லாமல் சமுதாய நிலை-உயர், தாழ்வு போன்றவற்றை விளக்க முற்படும்".[16]

### சமுதாய உயர்நிலை

உலகமொழிகள் பலவற்றிலும், அவ்வினத்தலைவன், மதகுரு போன்றவர்கள் தாம் வகிக்கும் உயர்பதவி காரணமாகப் பன்மையில் மரியாதையுடன் குறிப்பிடப்படுகின்றனர். அவர்கள் சாதாரண மனிதர்களைவிட மேலானவர்கள். இந்தப் பன்மை 'உயர்வுப் பன்மை' எனப்படுகிறது. பேசுகிறவன் ஓர் அரசனாக இருந்தால், தன்னைத்தானே குறிப்பிடும்பொழுது 'நாம்' என்று குறிப்பிடுகிறான். அதுவே உயர்வுச் சிறப்புப்பன்மை எனப்படுகிறது. ஆதலால் இது சமுதாய உயர்வு தாழ்வு (Social hierarchy) அமைப்பினைக் காட்டுவதாக அமைகிறது. இந்த அமைப்பு, மொழியிலும் வெளிப்படுகிறது.

தமிழர், தம்வாழ்வில் அரசரையும், இறைவனையும் கூட பழங்காலத்தில் ஒருமையில் குறிப்பிட்டனர். அவ்வழக்கம் தவறானதாகக் கருதப்படவில்லை. அரசனை 'அரச' என்றும் மதிப்பிற்குரிய ஆசிரியர்கள், முனிவர்கள் கூட ஒருமையிலேயே

---

16. "பேச்சுமொழியின் இலயமும் பாரதி கூட்டிய பெருமையும்", தொ.பொ.மீனாட்சி சுந்தரன், ப.43, (மொழிபெயர்ப்பு: சா. வளவன்)

அகத்தியன், தொல்காப்பியன், ஆசான் என்றும் குறிப்பிடப்பட்டனர். கடவுளைக்கூட முருகன், சிவன், கண்ணன் எனப்பேச்சு வழக்கில் வழங்குவதை இன்றும் காண்கிறோம். ஆனால் தொல்காப்பியம் போன்ற பழந்தமிழ் இலக்கணங்களில் உயர்வுப்பன்மை வழங்கப்பட்டதைக் காண முடிகிறது. தொல்காப்பியம், ஒருவரைக் கூறும் உயர்சொல் கிளவி என்று கூறுகிறது.

முதன் முதலில் பலர்பால் பன்மை (Epicene plural) ஒட்டாக '-ஆர்' விகுதி ஒருமைச் சொல்லுடன் இணைக்கப்பட்டது. 'அகத்தியன்' என்ற ஆண்பால் ஒருமைப் பெயருடன் -ஆர் விகுதி சேர்க்கப்பட்டு 'அகத்தியனார்' ஆயிற்று. பின்னர்க் காலப்போக்கில் இவ்வழக்கம் ஒருவகை இகழ்ச்சி அல்லது அங்கத வழக்காக (Ironical usage) வளர்ந்து மிருகங்களின் பெயருடன் இணைக்கப்பட்டது. புலியார், நரியார் என விலங்கின் பெயருடன் விகுதியாக வழங்கப்பட்டது.

உயர்வினைச் சுட்டுவதற்கு இந்த உயர்வுப் பன்மையைத்தவிர மற்றொரு முறையும் இருந்தது. மூன்றாம் வேற்றுமை 'ஒடு' உருபு உடனிகழ்ச்சியைக் குறிக்க அமைந்தது. தொல்காப்பியர் தம் இலக்கணத்தில் முக்கியத்துவம் கொண்ட மக்களைக்குறிக்க 'ஒடு' இணைக்கப்படும் என்றும் பிற சொற்கள் எழுவாய் வேற்றுமையில் அமையும் என்றும் குறிப்பிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக 'அகத்தியனொடு முனிவர் வந்தார்' எனலாம். காலம் செல்லச்செல்ல இப்பன்மை விகுதிக்குப் பதிலாக, பல்லவர் காலத்திலும், அதன்பின்னர்ச் சோழர் காலத்திலும் பலர்பால்பன்மை விகுதி 'அர்' வழங்கப்பட்டது. அரசனார் -'அரசர்' என்றும் அகத்தியனார் 'அகத்தியர்' என்றும் மாறின. அரசர்கள் 'தேவர்' என்ற பட்டப் பெயருடனும், அரசரின் பிள்ளைகள் 'ஆள்வார்' என்றும் குறிப்பிடப்பட்டனர். 'ராசராசதேவர்' 'ராசேந்திர தேவர்' போன்ற பெயர்கள் சான்றாக உள்ளன. ஆள்வார், ஆளுபவர், ஆழ்வார் என குறிப்பிடப்பட்டு அவ்வழக்குகள் நிலைபெற்றன. சைவசமயத்தில் சமயக்குரவர்களைச் சம்பந்தர், அப்பர், சுந்தரர் என - அர் விகுதியுடன்தான் வழங்குவர். 'அப்பன்' என்று யாரேனும் குறிப்பிட்டால் ஏற்கமாட்டார்கள். சமீபத்திய பதிப்பில் என்சைக் குளோபீடியா பிரிட்டானிகாவில், ஒரு கட்டுரையில் அவ்வாறு சைவ சமயக் குரவர்களை -அன் விகுதியுடன் குறிப்பிடப்பட்டது பெரும் சர்ச்சையை உருவாக்கியது. தமிழகத்தில் கிறித்துவர் அல்லாதவரும் கூட இயேசுவை ஏசுநாதர் என்றே - அர் விகுதி இணைத்தே கூறுவர்.

ஒருமைச்சொல் மரியாதை இன்மையைச்சுட்டுகிறது. ஆனால் கவிதைகளில் மட்டும் ஒருமையில் குறிப்பிடும் மரபினை மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர், பிற்காலத்தில் அரசமரபும் அதிகாரமும் வீழ்ந்த பின்னர் குறுநில மன்னர்கள் தம்மை இரட்டைப்பன்மை, மூன்று பன்மை எனப் பல விகுதிகள் இணைத்தால் பெருமை என்று கருதி, அவ்வாறு குறிப்பிடும்படி வலியுறுத்தினர். அவ்வழக்கத்தின் அடிப்படையில் நாம் "பச்சையப்பமுதலியார் அவர்கள்" என்று குறிப்பிடுகிறோம். இன்று திருமண அழைப்பிதழ் அச்சிட்டு அனுப்பும் பொழுது இவ்வழக்கம் மிகமிகச் சாதாரணமாகி விட்டது. முன்னிலை ஒருமைச்சொல் 'நீ'. உயர்வுப் பன்மைக்கு இரண்டு சொற்கள் உள்ளன. அவை இரண்டு நிலைகளில் அமைகின்றன. நம்மைவிட வயதில் இளையவரையும், சமுதாய படிநிலையில் தாழ்ந்தவரையும் அழைக்க 'நீ' என்ற சொல் பயன்படுகிறது. நம்மைவிட மூத்தவரையும், உயர்ந்தவரையும் அழைக்க 'நீங்கள்' என்ற சொல் பயன்படுகிறது. திருநெல்வேலி வட்டாரக் கிளைமொழியில் 'நீன், நீம்' என்ற சொற்கள் ('நீம்' பழையவடிவம்) பயன்படுகின்றன. அதிக உயர்வைக்காட்ட படர்க்கை இடப்பெயரான 'தான், தாம், தாங்கள்' ஆகியன பயன்படுகின்றன.

அஃறிணை ஒருமை கூட உயர்வுப் பன்மையாக வழங்குவதைக் காண முடிகிறது. இறைவனை அஃறிணை ஒருமையில் 'அது' எனக்குறிப்பிடும் வழக்கம் உண்டு. உபநிஷதங்களில் கூட இதற்கு இணையான சொல் 'தத்' உள்ளது. பருப்பொருள் சொற்களுக்கு நுண்பொருள் சொற்களைப் பயன்படுத்தும் வழக்கம் தமிழில் உள்ளதை இங்கு எடுத்துக்கொள்ளலாம். 'அரசன்' என்பதற்குப்பதில் 'அரசு' எனக் குறிப்பிடும் வழக்கம் இருந்தது. அஃறிணை ஒருமை, இறைவனையும், முனிவரையும் குறிக்கப்பயன்பட்டதை முன்னரே கண்டோம். திருவிழாக் காலங்களில் தெய்வத்திருவுருவங்களை வீதியுலாவாகக் கொண்டு வரும்பொழுது 'சாமிவந்தது' என்று கூறும் வழக்கம் இன்றும் உள்ளது. பெரியோர்கள் இவ்வுலகில் தங்களுக்கு அதிகநாட்டமில்லாததையும், எளிமையையும் கருத்தில் கொண்டு தங்களைத் தாங்களே 'அது' 'ஒருபொருள்' என்று குறிப்பிட்டனர். எடுத்துக்காட்டாக 'இந்தக் கட்டைக்கு உணவு கிடைக்குமா?' என்று கேட்டனர். அதன் பொருள் 'எனக்கு உண்ண உணவு வேண்டும், உணவு கிடைக்குமா?' என்பதாகும்.

புத்தமதத்தில் முதலில் புத்தரின் காலடிச் சுவடுகளையே வணங்கினர்; உருவச்சிலை செய்த பின்னரே, அதனை வணங்கும்

வழக்கம் உண்டாயிற்று. 'அடிகள்' 'பாதங்கள்' என்ற சொற்கள் புத்தரையே குறித்தன. பின்னர் வைஷ்ணவர்களும், சைவர்களும் அவ்வழக்கத்தைப் பின்பற்றி விஷ்ணுபாதம், சிவபாதம் எனப்படும் இறைவனின் காலடிச் சுவடுகளை வணங்கினர். தேவாரத்தில் இதற்கு எடுத்துக்காட்டாக, திருநாவுக்கரசர் பாடிய 'ஐயாறன் அடித்தலம்' (திருவையாற்றில் தொழுத காலடிச் சுவடுகள்) என்று பாடியுள்ளதைச் சுட்டலாம். தொடர்ந்து பெரியோர்களையும் அவ்வாறு குறிப்பிடத் தொடங்கினர். சென்னையில் வளர்ந்த தெ.பொ.மீ. அவர்கள் அங்கு வழங்கிய பிராமணர் அல்லாதாரின் பேச்சு வழக்கினை ஆராய்ந்து இதற்கான பல எடுத்துக்காட்டுகளைக் கொடுத்துள்ளார். சகோதரி, தாய், சகோதரன் ஆகியோரைக் குறிக்க 'அக்காள் வந்தது' 'அம்மா வந்தது' 'அண்ணன் வந்தது' போன்ற வழக்கில் 'வந்தது' அஃறிணை ஒருமையைக் குறிக்கும். தாம், தாங்கள் ஆகிய படர்க்கைப் பெயர்கள் முன்னிலைச் சொற்களாகப் பயன்படுவது பற்றி முன்பே கண்டோம். 'தான்' என்ற சொல் பால் குறிக்காமல் ஒருமையைக் குறிக்கிறது. திராவிட மொழிகளில் பால்பகுப்பு இல்லாமல் ஒருமை, பன்மை என எண் பகுப்பு மட்டுமே இருந்த மிகப் பழமையான நிலையில் எஞ்சியுள்ள ஒரு அடையாளமே இதுவாகும். இந்தத் 'தான்' என்ற சொல் அஃறிணை ஒருமையைப் போன்றே உயர்வு ஒருமையாகவும் பயன்படுகிறது.

அஃறிணை ஒருமை வினைச் சொல்லைப் பயன்படுத்துதல், அஃறிணை ஒருமையே பெண்பால் ஒருமையாகவும் கொண்டுள்ள தெலுங்கு மொழியில் உள்ள நிலையைக் காட்டுகிறது. 'அக்காள் வந்தது' என்ற வழக்குத் தெலுங்கு மொழியின் தாக்கத்தினால் வந்திருக்கலாம் என எண்ணத் தோன்றும். ஆனால் ஆண்பால் சொற்களுக்கும் உயர்வுச் சொல்லாக அஃறிணை ஒருமை பயன்படுத்துவதை ஒப்புமையாக்கத்தின் விளைவு என்றே கூற வேண்டும். ஏனெனில் தெலுங்கு மொழியில் அஃறிணை ஒருமை உயர்வுச் சொல்லாகப் பயன்படுத்தும் முறை இல்லை. மேலும் தெலுங்கு மொழியில் வினைச்சொல்லில் பெண்பால் ஒருமையும் அஃறிணை ஒருமையும் ஒரே பகுப்பின் கீழ் வருவன. இது ஆண்பால், ஆண்பால் அல்லாத பாகுபாட்டின் கீழ்வருவதாகும். ஆதலால், இத்தகைய மொழிமாற்றங்களைத் தமிழ் மக்களின் சமய இலக்கியங்களின் அடிப்படையில்தான் விளக்க வேண்டும்.

இடப்பெயர்களில் உண்டான சமுதாயப்படிநிலைகளைப் பிற்காலத்தில் வினைச் சொற்களும் பெற்று மாற்றமடைந்துள்ளன. சாதாரணமாக, வினையில் வேர்ச்சொல்லே ஏவல்சொல்லாகவும் பயன்படுகிறது. இது பேசுகின்றவரைவிடத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்குப் பயன்படும் சொல்லாக ஒதுக்கப்பட்டு விடுகிறது. படர்க்கைப் பெயருக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த

வியங்கோள் வடிவம் ஒரு வகை உயர்வு ஏவலாகவும், வேண்டுகோளாகவும் முன்னிலைக்கும் தன்மைக்கும் பயன்படத்துவங்கியது. ஆனால் பின்னர் ஒரு புதிய வளர்ச்சி உருவானது. நீ, நீர், (நீம்) நீங்கள் ஆகிய சொற்கள் குறிக்கும் சமுதாயப்படிநிலைகள் அமைப்பினைப் பற்றி முன்னரே கண்டோமல்லவா! உன், உம், உங்கள் ஆகியவை இந்த இடப்பெயர்களின் வேற்றுமைத் திரிபு சொற்களாகும். இவற்றில் 'உம்', 'உங்கள்' இரண்டும் வேர்ச் சொல்லுடன் இணைந்து இரண்டிரண்டு படிநிலைகளைக் குறிப்பிடத் தொடங்கின. 'செய்' பேசுகின்றவரைவிட தாழ்ந்தவர்களுக்கும், இது 'உம்'முடன் சேர்ந்து 'செய்யும்' என்றாகி, ஒரே சமநிலையில் உள்ளவர்களுக்கும், 'செய்+உங்கள்' 'செய்யுங்கள்' என உயர்நிலையில் உள்ளவர்களுக்கும் ஏவல் சொல்லாகப் பயன்படுகிறது. இவைகளுடன் துணைவினையாக 'அருள்' என்ற சொல்லையும் சேர்த்து வழங்கும் வழக்கம் உள்ளது. ஓரளவு உயர்வு நிலையைக் காட்டுவதாகவும் இவை உள்ளன. செய்தருள், செய்தருளுங்கள், செய்தருள்க போன்ற சொற்களும் காணப்படுகின்றன. தன்மை இடப்பெயர்களில், 'நாம்', 'நாங்கள்' உயர்வுப் பன்மைச் சொற்கள். 'நாம்' உளப்பாட்டுத் தன்மைப் பன்மைச் சொல். பேசுகின்றவர் தம்மை வேறுபடுத்திப் பேச விரும்பாத சூழலில் 'நாம்' பயன்படுத்தப்படுகிறது. 'நான்' தன்முனைப்பாகக் கருதப்படுகிறது. 'என்வீடு', 'என்னுடைய குழந்தைகள்' போன்ற வழக்கிற்கு இணையாக 'நம் வீடு' 'நம் குழந்தைகள்' போன்றனவும் வழங்கப்படுகின்றன. இங்கு உண்மையான உயர்வுப் பன்மைச் சொல் 'நாங்கள்'. ஏனெனில் 'நாம்' உளப்பாட்டுப் பன்மையாக இருப்பதால் 'நாங்கள்' என்னும் சொல்லின் அளவு உயர்வை வலியுறுத்தும் வலிமையுடையது இல்லை. வயதில் மூத்தவர்கள், பெரியோர்கள் முதலியோரிடம் பேசுகின்றபொழுது, தன்னடக்கம் தாழ்மை உணர்வு காரணமாக மக்கள், குறிப்பாக வைதீக வைணவர்கள் 'நான்' என்பதற்குப் பதிலாக 'இவன்' 'அடியேன்' 'தாசானுதாசன்' என்ற சொற்களை வழங்குகின்றனர். இவை தற்காலத்தில் வழக்குக் குறைந்து, அரிதாகிவருகிறது. பொது வழக்கில் இவை காணப்படவில்லை. இலக்கிய நடையில் வைணவர் பின்பற்றி வருகின்றனர்.

மிகப் பழமையான சமுதாயத்தில் மனிதனுக்கு மனிதன் வேற்றுமை காணாமல் வாழ்ந்து வந்த நிலையிலிருந்து மாறி, பலதரப்பட்ட படிநிலைகளைக் கொண்ட சமுதாயமாக உருவெடுத்து, தற்பொழுது பலபடிநிலைகள் உருவாகி உள்ளன. அவை சாதி, செல்வவசதி, வயது, வாழும் இடம் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டது. நம்நாட்டில் முதுமை கூட மதிப்பிற்குரியதான ஒரு அம்சமாக உள்ளது. வழிவழியாக வந்த

பழமைக்கும், புதிய உணர்வுகளுக்கும் இடையே முரண்பாடும் தோன்றியுள்ளது. இலக்கியங்களில் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள தமிழ்மொழியின் தன்னியல்பான தன்மைக்கும், இடைக்காலச் சமுதாய கௌரவ சலுகைகளுக்கும் இடையேயும்கூட ஒருவகை முரண்பாடு தோன்றியுள்ளது. இடைக்காலத்தில் உருவான உயர்வு மனப்பான்மை தமிழ்மொழியில் மேலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. உயர்வுப்பன்மையாக 'உங்கள்' என்ற சொல்லின் வழக்கு பற்றி முன்னர் கண்டோமல்லவா! அச்சொல் மிக உயர்வான மனிதரிடம் ஏதேனும் ஒன்றைச் சொல்லும்போது ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் சேர்க்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக 'அவன் வந்தான்' என்ற சொற்றொடரை 'அவன் வந்தானுங்க' என 'உங்க' சேர்க்கப்படுகிறது. இது ஏவல் இல்லாத வினை முற்றுத்தொடரில் இணைக்கப்பட்டு வழங்கப்படுகிறது. பேசப்படும் மக்களின் உயர்வு தாழ்வு சமநிலை என்ற படிநிலைகளுக்கு ஏற்றவாறு பேச்சு மொழியில் இணைக்கப்படும் ஒட்டுக்கள் எண்ணிக்கையிலும், வடிவிலும் மாறுபடும். ஒரு காலத்தில் தனிச் சொற்களாக இருந்த 'ஏட(ா)', 'ஏடி' (ஏட்டி) போன்ற சொற்கள் இன்று இழிநிலைக்குத் தள்ளப்பட்டு ஒட்டுகளாக வழங்குகின்றன. எடுத்துக்காட்டாக 'இங்கே வாடா' என்றோ 'இங்கே வாடி' என்றோ கூறினால், தம்மிலும் தாழ்ந்தோரை விளிப்பதாகச் செயல்படுகிறது. சில சமுதாயத்தில் ஒத்தோரைக் கூட விளிக்க இவை பயன்படுகின்றன. வயதில் குறைந்தவரானாலும், மூத்தவரானாலும் பெண்ணைக் குறிக்க 'அம்மா' என்ற சொல்லையே பயன்படுத்துகின்றனர். 'அப்பா' என்ற சொல் தந்தையைக் குறித்தாலும், உயர் குடும்பத்துச் சிறுவர்களை அழைக்கவும் இச்சொல் ஒட்டுச்சொல்லாக வழங்கப்படுகிறது. வயதில் மூத்த ஆணை 'அண்ணா' என்று குறிப்பர். இவை அனைத்தும் ஒட்டாக மாறி முறையே -டா, டீ, -மா, -பா, -ணா என பல்வேறு சூழ்நிலையில் வழங்கப்படுகின்றன. ஆரம்பத்தில் வயது, சமுதாய நிலை, ஆகியவற்றின் அடிப்படையிலும், பின்னர் செல்வாக்கு, செல்வம், கல்வித்தகுதி, வருமானம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த சமுதாயப்படிநிலைகள் உருவாக அவற்றை ஏற்றுக் கொண்டோம். அந்நியர் ஆண்ட பொழுது தமிழில் இப் படிநிலைகளுடனேயே வாழ்ந்தோம். ஆனால் குடியரசு நாடாக நாம் வாழும் இக்காலத்தில் இப்பழமையின் விலங்கிலிருந்து விடுபடவேண்டும். முன்னர்க் கண்டபடி, இவ்விலங்குள் கட்டவிழ்ந்து, ஒருமையை நோக்கி முன்னேறுவதைக் காண முடிகிறது. ஆயினும் அது முழு வளர்ச்சியடைந்து உயர்வு தாழ்வு இல்லாத சமுதாயம் உருவாகும் என்று உறுதியாகக் கூறஇயலவில்லை. ஏனெனில் சமுதாயத்தில் வெவ்வேறு காரணிகளால் உயர்வும் தாழ்வும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது.

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் மாபெரும் ஞானியாகவும், பெரும்படிப்பாளியாகவும் வாழ்ந்தவர். அவர் கற்ற கலைஞானங்களும், பயின்ற மொழிகளும், தேர்ச்சி பெற்ற அறிவுத்துறைகளும் மிகப்பல. இளைஞராக இருந்தகாலத்திலேயே 'பன்மொழிப்புலவர்' என்ற பட்டம் பெற்று விளங்கினார். "இருந்தமிழே உன்னால் இருந்தேன்" எனும் வாய்மொழிக்கேற்ப, அவருடைய ஆழ்ந்த அறிவும், பரந்துபட்டபுலமையும், நுட்பமான ஆராய்ச்சித்திறனும் காசுக்காக விற்கப்படவில்லை; தமிழிற்கு வளஞ்சேர்ப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டன. இதனால் பொருட்செல்வம் போதிய அளவிற்கு அவருக்கு வாய்க்கவில்லை. ஆனால் அருட் செல்வம் கடைசிவரை, அவரைவிட்டுப் பிரியாது உற்ற துணையாக இருந்து வந்தது. எந்த நிலையிலும், பேராசிரியர் "சிந்தையின் நிறைவே செல்வம்" என்ற நோக்கு உடையவராக வாழ்ந்தார். அவர் தமிழ் இலக்கியத் துறைக்கு ஆற்றியுள்ள பணிகள் எண்ணிலடங்காது. இலக்கிய ஈடுபாட்டிற்கு அடுத்த நிலையில், பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் மொழி ஆராய்ச்சியில் தம் கருத்தைச் செலுத்தினார். இந்த நூற்றாண்டில், தமிழகத்திற்கு "மொழியியல்" எனும் புதிய சிந்தனைப் போக்கை, கலைத்துறையை அறிமுகப்படுத்தி வைத்தவர் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களேயாவர். பன்மொழிப் புலவரான பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள், உலக மொழிகளுள் தமிழுக்குரிய உண்மையான இடம் யாது என்பதைக் கண்டறியவேண்டும் என்பதில் பேரார்வம் உடையவராக இருந்தார். பழம் பெருமையைப் பேசியே காலம் தாழ்த்தக்கூடாது; எத்திசையும் புகழ்மணக்க வீற்றிருந்த தமிழணங்கே! என்று பாடி மகிழ்வது ஒரு புறம் இருக்க, தமிழின் உண்மையான சிறப்புகளை உலகறியச் செய்ய வேண்டும் என்பதில் முனைப்பாக இருந்தார். செந்தமிழோடு, பேச்சுத்தமிழையும் போற்றினார். சென்ற சில நூற்றாண்டுகளாகத் தமிழ்மொழி பேசப்படுவதிலே பல வேறுபாடுகளை உள்ளடக்கியதாக விளங்குகிறது. வீட்டில் பேசும் தமிழ், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிற்றுவிக்கும் செந்தமிழினின்றும் வேறாக உள்ளது. மேடையிலே பேசும் தமிழ், அன்றாடப் பேச்சு வழக்கிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது. மேனாட்டுப் பாதிரிமார்கள் தமிழகம் வந்த பொழுது, பாமரர்கள் பேசிய கொச்சைத்தமிழான கொடுந்தமிழுக்கு இலக்கணம் எழுதினர். இதனால் செந்தமிழுக்கும் பேச்சுத்தமிழுக்கும் இடைவெளி அதிகமாயிற்று. பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் இந்த இடைவெளியைக் குறைக்க அரும்பாடுபட்டார். இப்பொழுது மலைக்கும் மடுவிற்கும் உள்ள வேற்றுமை, வீட்டுத் தமிழிலும் படிப்புத் தமிழிலும் காணப்படுகிறது. புலவர்தமிழ் செயற்கையாக உயிர்த்துடிப்பின்றி உள்ளது. பொதுமக்களின் நாவில் வழங்கும்

பழகு தமிழோ உயிரோட்டம் உடையது. இந்த இரண்டு தமிழையும் ஒன்றாக்கினால்தான் 'நல்லதமிழ்' நாட்டில் உருவாக முடியும். இதனாலேயே, "நான் (தெ.பொ.மீ.) பண்டிதத் தமிழில் பேசுவதில்லை! மக்கள் தமிழில், கொஞ்சம் கொஞ்சமாக மாற்றம் செய்து, அவர்கள் பேசுவதைப் போலப் பேசி வருகிறேன். காலப் போக்கில் கொடுந்தமிழுக்கும் பண்டிதர் தமிழுக்கும் இடையே உள்ள இடைவெளி தூர்க்கப்படும். அப்பொழுது 'பழகு தமிழ்' கட்டளைத் தமிழாக மாறும். இந்தப் பணியை இராயப்போட்டை முனிவர் திரு.வி.கலியாண சுந்தரனார் செய்து வருகிறார். சத்தியமூர்த்தி போன்ற தலைவர்களும் செய்து வருகின்றனர். இது போதுமா? போதாது. இப்பொழுது தமிழில் வெளியிடப்படும் பத்திரிகைகளும், இந்த எண்ணத்தோடு வெளியிடப்படவேண்டும். இன்றைக்கு நம் பள்ளிக்கு விருந்தினராக வந்துள்ள திருவாளர் ஆதித்தநாடார், இந்த சிறந்த பணியை - பழகு தமிழ் பரப்பும் பணியை, அவருடைய பத்திரிகை மூலம் செய்து வருகிறார்" என்று வரவேற்புரை நிகழ்த்தினார்.* இந்த உள்ளார்ந்த உணர்வினால் பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் பேச்சுமொழியிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார் என்பது புலப்படும்.

## முடிவுரை

### ஆயிரம் பிறைகண்ட பெருந்தகை

முனைவர் இர.குழந்தைவேலு தம்முடைய நூலில்** "அப் பெருந்தகையார்க்கு எண்பது வயதும் நிரம்பவில்லை. அப்போது ஒருநாள், அன்றைக்கு 1901-ஆம் ஆண்டுச் சனவரித்திங்கள் 8-ஆம் நாள். இன்று 1980 நடைபெறுகிறது. இன்னும் சில திங்கள்களில் எண்பது ஆண்டுகள் நிரம்பிவிடும். நிலாப்பிறக்கின்ற கணக்கைப் பார்த்தால், ஒரு நூற்றாண்டு நிரம்பி வழியப்போகிறது", என்று அவர் முடிவாக எழுதினார். ஆயினும் 27.8.1980 இரவில் 7.30 மணிக்கு மேல், இருபதாம் நூற்றாண்டினைச் சேர்ந்த அவரது வயதின் கணக்கைப் பார்க்க, அவருக்கு மறுநாள் பெருமையோடு இருந்தது என்று சொல்வதற்கு இல்லை. இவ்வாறெல்லாம் இந்தியப் பெருநாட்டில், குடியரசு ஓங்கிக் கனிந்து வளர்ந்த இருபதாம் நூற்றாண்டின் தமிழுலகில், அவர் பெருவாழ்வே வாழ்ந்தவர். அவர் செய்த தமிழ்த் தொண்டெல்லாம், தமிழுலகத்துக்குத் தமிழுணர்ச்சி ஊட்டியவை. நாடு அத்தொண்டையெல்லாம் வாழ்வைக்க வேண்டும்.

---

* 1945இல் தினத்தந்தி அலுவலகம் சிந்தாதிரிப்பேட்டை அருணாசல நாயக்கன் தெருவில் மாதாகோவில் எதிரில் இருந்தது.

** பேராசிரியர் தெ.பொ.மீ. இருபதாம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர், முனைவர் இரா. குழந்தைவேலு லால்குடி, ப.11, 2001.

# துணை நூற்பட்டியல்


1. குழந்தைவேலு, இர. பேராசிரியர் தெ.பொ.மீ. இருபதாம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர், லால்குடி, 2001.

2. சண்முகம், செ.வை., தெ.பொ.மீ. ஒரு பன்முகப் பார்வை, மதுரை, 2000.

3. " ", இலக்கணக் கொள்கைகளும் தெ.பொ.மீ.யின் பார்வையும், புலமை 27, ஜூன். 2001.

4. " ", மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும் (சங்க காலம்), சென்னை, 1989.

5. சண்முகம், இராம & செயப்பிரகாசம், ச. (பதிப்பாசிரியர்கள்), மாற்றிலக்கணம், (ஆசிரியர்) தெ.பொ.மீ., மதுரை, 1985.

6. " ", நீங்களும் சுவையுங்கள், மதுரை, 1998.

7. சுந்தரம், இராம. (தொகுப்பாசிரியர்), (ஆசிரியர்-தெ.பொ.மீ.) தமிழ்க்களஞ்சியம் (கலைக்களஞ்சியக் கட்டுரைகள்), மதுரை, 2000.

8. திருநாவுக்கரசு, க.த., தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல், சென்னைப் பல்கலைக் கழகம்.

9. மருதநாயகம், ப. , திறனாய்வாளர் தெ.பொ.மீ., சென்னை, 1999.

10. மீனாட்சிசுந்தரன், தெ.பொ., உலக நாகரிகத்தில் தமிழரின்பங்கு, மதுரை, 1982.

11. மீனாட்சிசுந்தரன், தெ.பொ., மொழியியல் விளையாட்டுகள், மதுரை.

12. Mohan, P.E. "Historical Lessons from the Man of Twentieth Century; The Linguist, Professor T.P. Meenakshisundaran" in **Journal of Tamil Studies**, Chennai, June 2003.

13. குமுதம், 29.3.2004, சென்னை, 2004.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| இலக்கிய இதழ்கள் | 110.00 |
| இஸ்லாமியத்தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும் | 40.00 |
| பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும் | 80.00 |
| தமிழெனப்படுவது | 115.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கணம் & மொழியியல் | 105.00 |
| வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும் | 70.00 |
| தொல்லியல் நோக்கில் சங்ககாலம் | 45.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு (தொன்மை முதல் கி.பி.500 வரை) | 45.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி.501 - கி.பி.900) | 70.00 |
| பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் | 35.00 |
| திருமணம் செல்வக்கேசவராய முதலியார் | 30.00 |
| அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார் | 55.00 |
| சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார் | 40.00 |
| மூதறிஞர் மு. இராகவையங்கார் | 40.00 |
| ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு | 30.00 |
| தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை | 50.00 |
| தட்சிணாமூர்த்தி குருமுகம் - 100 | 50.00 |
| நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1 | 80.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2 | 85.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3 | 95.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 180.00 |
| நாவல்கலையியல் | 50.00 |
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி | 60.00 |
| சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |

**Pub.No. 523** தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரின் தமிழ்த்தொண்டும் மொழியியல் பங்களிப்பும் **25.00**